வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily


தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
30°c 28°c



## வாக்கு அட்டை விநியோகம் செப்ரெம்பர் 8 இல் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 10

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல்களுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்காக, தேர்தல்கள் திணைக்களம் இந்த மாதம் 27ஆம் திகதி வாக்காளர் அட்டைகளை அஞ்சல் திணைக்களத்திடம் கையளிக்கவுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி விசேட தினமாக அறிவித்து, வாக்காளர் அட்டைகள் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.இந்த பணிகளுக்கான இறுதித் தினமாக அடுத்த மாதம் 13ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (த)

## தேர்தலில் சர்வதேசத்தின் கடமையை அமெ., கனடாவிடம் வலியுறுத்துவோம்

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 10

''வடமாகாணசபைத் தேர்தலில் சர்வதேச நாடுகளின் கடமை குறித்து வல்லமை நாடுகளின் உயர் அதிகாரிகளிடமும், புலம்பெயர் தமிழர்களிடமும் நேரில் எடுத்துரைக்கவுள்ளோம்.''



– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

''வடமாகாணசபைத் தேர்தல் நீதியாக நடந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியடையும்என்பது இலங்கை அரசுக்குத் தெரிந்த விடயம். எனவே, கூட்டமைப்பை வெற்றியடையாமல் செய்வதற்காக அரச தரப்பினரும், படையினரும் வன்முறைகளில் ஈடுபடக்கூடும். இந்நிலையில், சர்வதேச சமூகம் தேர்தல் முடிவடையும் வரை வடக்கின் நிலை

தொடர்ச்சி: பக்கம் 21

பொறுமைக்கும் எல்லை உண்டு 06

தோல்விப் பாதையை நோக்கி அல் –குவைதா 07

உதைபந்தாட்டத்தை பிரபல்யப்படுத்தும் டோனி 23

# இராணுவம் வேண்டாம்

### சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தும் விடயத்தில் தேசிய சமாதானப் பேரவை அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, ஒகஸ்ட் 10

நாடு முழுவதும் இராணுவத்தின் வகிபாகத்தை(Role) கட்டுப்படுத்துமாறு அரசிடம் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளது தேசிய சமாதானப் பேரவை. மக்கள் மத்தியில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட இராணுவத்தைப் பயன்படுத்தும் போக்கை நிறுத்துமாறும் அது உறுதியாகக் கேட்டுள்ளது.

வெலிவேரியாவில் குடிதண்ணீருக்காக ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தி மூவரைக் கொன்றதையும் பலரைக் காயப்படுத்தியமையையும் கண்டித்து தேசிய சமாதானப் பேரவை நேற்று ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

> “ஒன்றுகூடுவதற்கான தமது உரிமையை வெலிவேரிய மக்கள் அனுபவிப்பதைத் தடுத்து, அவர்களை ஒடுக்குவதற்காக இராணுவத்தையும்கொலைகாரச் சூட்டு முறையையும் இலங்கை அரசு பயன்படுத்தியுள்ளது.

ஒன்றுகூடுவதற்கான தமது உரிமையை வெலிவேரிய மக்கள் அனுபவிப்பதைத் தடுத்து, அவர்களை ஒடுக்குவதற்காக இராணுவத்தையும் கொலைகாரச் சூட்டு முறையையும் இலங்கை அரசு பயன்படுத்தியமை குறித்து அந்த அறிக்கை கடுமையாக விமர்சித்துள்ளது.

இலங்கையில் சிவில் போர் ஏற்படுவதற்கு முன்னர், அரச அதிபர் அல்லது மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மட்டுமே துப்பாக்கிச் சூடு – அதுவும் முழங்காலுக்குக் கீழே சுடும் – நடத்தும் உத்தரவை வழங்க அதிகாரம் கொண்டிருந்தார்கள் என்பதை அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. ''சுடுவதற்கு முன்னர் துப்பாக்கிச்சூடு நடத்தப்படப்போகிறது என்ற எச்சரிக்கை சத்தமாக விடுக்கப்படவேண்டும். ஆனால் வெலிவேரியவில் இராணுவம் எந்தவித எச்சரிக்கையும் இன்றிச் சுட்டுத் தள்ளியுள்ளதாகவே தெரிகிறது'' – என்கிறது அறிக்கை.

இந்த வன்முறையிலிருந்து தப்புவதற்காகப் பாதுகாப்

தொடர்ச்சி: பக்கம் 21

## நாகை மீனவர்கள் இன்று நடுக்கடலில் போராட்டம்

### இலங்கைக் கடற்படையை கண்டித்து

சென்னை, ஓக.10

இலங்கைக் கடற்படையைக் கண்டித்து நாகை மீனவர்கள் இன்று சனிக்கிழமை படகுகளில் கறுப்புக் கொடி கட்டி நடுக்கடலில் போராட்டம் நடத்தவுள்ளனர்.

நாகை மற்றும் காரைக்காலை சேர்ந்த 65 மீனவர்கள் கடந்த 30ஆம் திகதி மாலை கோடியக்கரை கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மீனவர்களைக் கைது செய்த இலங்கைக் கடற்படையைக் கண்டித்தும், அவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும் நாகையில் உள்ள 8 மீனவர் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லாமல் கடந்த முதலாம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி நடுக்கடலில் 7 இடத்தில் படகுகளில் கறுப்புக் கொடி கட்டி, மீனவர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (கு–14)

## ஐ.நாவின் விமானத்திலேயே பயணிப்பார் நவிப்பிள்ளை

கொழும்பு, ஓக.10



இலங்கை வரும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பயணத்துக்குத் தேவையான விமானத்தை ஒழுங்கு செய்து கொள்ளுமாறு இலங்கை அரசு ஐ.நா அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளது. இந்த விடயத்தில் விடாப்பிடியாக இருந்த இலங்கை அரசு இப்போது தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த மாதம் 25ஆம் திகதி

தொடர்ச்சி: பக்கம் 21

## பௌத்த பிக்கு சடலமாக மீட்பு

கொழும்பு, ஓக.10

79 வயது மதிக்கத்தக்க பிக்குவின் சடலமொன்று கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் குருநாகலில் நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. கலத்துட்டுவாகம பூரணரஜ மஹா விஹாரையின் பின்னாலிருந்தே இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. (த)

## முல்லைத்தீவில் இளைஞர் சடலமாக மீட்பு

தென்மராட்சி, ஓக.10

முல்லைத்தீவில் ஒருவர் காயங்களுடன் வீதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் கொலை செய்யப்பட்டாரா அல்லது விபத்தில் கொல்லப்பட்டாரா என்பது இதுவரை தெரியவரவில்லை.

முல்லைத்தீவு கருநாட்டுக்கேணி என்ற இடத்திலிருந்தே இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அதேயிடத்தைச் சேர்ந்த கஜேந்திரன் (வயது -18) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்ட இவர் வீடு திரும்பவில்லை. தாயார் அதிகாலை 4.30 மணியளவில் மகனைத் தேடிச் சென்றபோதே வீட்டிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் அவர் காயங்களுடன் சடலமாகக் காணப்பட்டார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-4)

## இந்தியாவுடன் நட்புறவுக்கு புலம்பெயர் தமிழர் முயற்சி

### ‘ரைம்ஸ் ஒவ் இந்தியா’ தகவல்

புதுடில்லி, ஓக.10

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவுடன் மோதல் போக்கை கடைப்பிடிக்காமல்,இந்திய அரசுடன் நெருங்கிய தொடர்புகளை கட்டியெழுப்பப் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக 'த ரைம்ஸ் ஒவ் இந்தியா' தெரிவித்துள்ளது.

தமிழக அரசியல் கட்சிகள் வெளிப்படையாகவே ஈழ ஆதரவு நிலைப்பாட்டில் இருக்கும் நிலையில், புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இவ்வாறான வழிமுறையைக் கையாளும் முனைப்புகளை மேற்கொண்டுள்ளன.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் மாநாட்டை இந்தியா பகிஷ்கரிக்க வேண்டும் என்ற அழுத்தங்களைக் கொடுக்க இந்த அமைப்புகள் தமிழக

தொடர்ச்சி: பக்கம் 21

## ஆசிய கண்காணிப்பாளர் 10 பேர் வடக்குத் தேர்தலை அவதானிப்பர்

### பவ்ரல் ஏற்பாட்டில் வருகிறது படை

கொழும்பு, ஓக.10

வடக்குத் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் 10 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த பவ்ரல் அமைப்பு தீர்மானித்துள்ளது. இதற்கமைய அடுத்த மாதம் 10, 12ஆம் திகதிகளில் இந்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை வடக்குக்கு அனுப்ப அவ்வமைப்பு முடிவு செய்துள்ளது.

சுதந்திர தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பின் கண்காணிப்பாளர்களையே மேற்படி நடவடிக்கையில் ஈடுபடுத்த தாம் முடிவுசெய்துள்ளனர் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விசேடமாக வடக்குத் தேர்தலில் 10 சர்வதேச கண்காணிப்பாளர்களைக் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளோம். இதில் 8 கண்காணிப்பாளர்களைக் கொண்டுவருவது உறுதிசெய்யப்பட்டுள்ளது. சுதந்திர தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பிலுள்ள தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், நேபாளம் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களே இங்கு அழைக்கப்படவுள்ளனர்.– என்றார். (த–சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வள்ளிபுனம் பகுதியில் தொடரும் திருட்டுகள்

முல்லைத்தீவு, ஓக. 10
முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் துணிகரத் திருட்டுச் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றமையால் அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.
சீருடையினர் நிலை கொண்டுள்ள பகுதிகளுக்கு அண்மையிலேயே இவை இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் கடந்த ஒருவார காலமாகத் தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.
நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஆசிரியை ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் உறக்கத்தில் இருந்த அவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
இதேவேளை கடந்த புதன்கிழமை இரவு வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் உறக்கத்தில் இருந்த பெண் அணிந்திருந்த சுமார் ஒன்றரைப் பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.
இதேபோன்று வள்ளிபுனம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களும் உடைக்கப்பட்டுத் திருட்டு இடம்பெற்றுள்ளது. சீருடையினர் நிலை கொண்டுள்ள பகுதிகளுக்கு அண்மையிலேயே இவை இடம்பெறுவதாக மக்கள் விசனத்துடன் கூறுகின்றனர்.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாகப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்ட போதும் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
(த-6)

# தமிழ்; சிங்களம் இரு மொழிகளிலும் 6 மாதத்தில் அடையாள அட்டைகள்

## சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 10
தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் ஆறு மாதங்களுக்குள் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.
அத்துடன் மூன்று வருடங்களுக்குப் பின்னர் தேசிய மொழிகள் இரண்டிலும் இணை மொழியான ஆங்கிலத்திலும் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.
தமிழ் மொழியைப் புறக்கணித்து விட்டுச் சகல சிங்களவர்களுக்கும் தனிச் சிங்களத்தில் மட்டும் அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்பதை எதிர்த்து 18 வயதான சிங்கள இளைஞர் ஒருவர் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.
அந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிரதி சட்டமா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
மும்மொழிகளிலும் இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துவருவதாகப் பிரதி சட்டமா அதிபர் சவிந்திரா பெர்னாண்டோ உயர் நீதிமன்றத்தில் கடந்த ஜூன் தெரிவித்திருந்தார்.
சகல சிங்களவர்களுக்கும் தனிச்சிங்களத்தில் மட்டும் அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்பது இனங்காணுதல் என்னும் நோக்கத்தை மறுப்பதாக உள்ளது என்றும் அவர் தனது அடிப்படை உரிமை மீறல் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.
தமிழ், நிர்வாக மொழியாகவுள்ள வடக்கு-கிழக்குப் பிராந்தியங்களில் வாழ்தல், வேலைச் செய்தல் அல்லது அங்கு போய்வருதல் என்பவற்றைக் கருத்தில் எடுப்பதைக்கூட இது தடுத்துள்ளது என்றும் மனுதாரரான ஏ.பி.தனஞ்சய குருகே தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.
அவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர்களான சலீம் மர்சூப், பிரியசத் டெப் ஆகியோர் முன்னிலையில் ஜூன் மாதம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே பிரதி சட்டமா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.
சிங்கள இன மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல அடையாள அட்டைகளிலும் உள்ள விபரங்கள் தனிச் சிங்களத்தில் மட்டுமே உள்ளன. இவை அரசமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய உத்தியோக, தேசிய மற்றும் நிர்வாக மொழிகள் இல்லை.
அரசமைப்பின் 18 ஆவது, 19 ஆவது உறுப்புரைகளின் பிரகாரம் சிங்களமும் தமிழும் இலங்கையின் தேசிய மொழிகளாகும். உறுப்புரை 22 வடக்கு-கிழக்கில் தமிழ் நிர்வாக மொழியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.
எனவே, தேசிய அடையாள அட்டையில் சிங்கள மொழியில் மட்டும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமையானது தனது அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.
நேற்றுமுன்தினம் மன்றில் முன்னிலையான பிரதி சட்டமா அதிபர் தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் ஆறு மாதங்களுக்குள் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்ததையடுத்து வழக்கு விசாரணை ஒக்ரோபர் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
(த)

## ரவிந்துவுக்கு விளக்க மறியல்

கொழும்பு, ஓக. 10
பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் சியாம் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவின் மகன் ரவிந்து குணவர்த்தனவை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
ரவிந்து குணவர்த்தன பெப்பிலியான பகுதியில் வைத்துக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டார்.
அவரை 24 மணிநேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதி அளித்திருந்தது.
இந்நிலையில், கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் நேற்று முன்னிலை செய்தபோது அவரை எதிர்வரும் 14 ஆம் திகதி (புதன்கிழமை வரை) விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
(த)

## மடுமாதா ஆலயத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

மன்னார், ஓக. 10
மன்னார் மடுமாதா திருத்தலத்தின் ஓகஸ்ட் மாதத் திருவிழாவையொட்டித் தற்போது மடுப் பிரதேசத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மடுப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.
வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் மடுமாதா திருத்தலத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிலையில், மன்னார் மடுமாதா திருத்தலத்தின் வருடாந்தத் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக பக்தர்கள் வருகைதந்த வண்ணமுள்ளனர்.
இவ்வாறு வருகை தரும் பக்தர்களின் பாதுகாப்புக் கருதி விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.
(த)

## போலி நாணயத் தாள்களுடன் கைதான நால்வரும் மறியலில்



கிளிநொச்சி, ஓக. 10
கிளிநொச்சியில் போலி நாணயத் தாள்களுடன் கைது செய்யப்பட்ட நால்வரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கிளிநொச்சியில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஆயிரம் ரூபா போலி நாணயத் தாளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சுமார் 28,000 ரூபா போலி நாணயத்தாள்களுடன் மேலும் ஒருவர் கைதானார். இதனையடுத்து வவுனியா தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ஒருவர், உட்பட மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். இந்த நால்வரிடமும் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் போலி நாணயத் தாள்களை அச்சிடப் பயன்படுத்தப்படும் 'கொண்கோட்' வகைத் தாள்கள்-15, கணினி, பிரின்ரர் உள்ளிட்ட பொருள்களையும் பொலிஸார் மீட்டனர். இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் குறித்த கள்ள நோட்டுக்களை அவர்களே அச்சிட்டமை தெரியவந்தது.
இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் பலரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பதாகப் பொலிஸார் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் எஸ்.சிவபால சுப்பிரமணியம் முன்னிலையில் தெரிவித்தனர்.
இதனையடுத்து குறித்த நால்வரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் எஸ்.சிவபால சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார்.
(த-6)

## சிறுமி மீது வன்புணர்வு விசுவமடு இளைஞர் கைது



முல்லைத்தீவு, ஓக. 10
முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் சிறுமி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் 15 வயதுச் சிறுமி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியமை தொடர்பாக புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவின் சிறுவர் பெண்கள் பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கைது செய்தனர். அவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கடந்த 5ஆம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தினர்.
குறித்த இளைஞரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
குறித்த சிறுமியை திருமணம் செய்வதாகக் கூறி ஏமாற்றியே வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.
(த-6)

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற 34 பேர் கைது

சட்டவிரோதமாக வெளிநாடு செல்லும் நோக்கில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த 34 இலங்கையர்கள் ராகம பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ராகம – தெல்பே – குருகுலாவ பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இவர்கள் மேல் மாகாண வடக்குக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 21 ஆண்களும் மூன்று பெண்களும் நான்கு சிறுவர்களும் 6 சிறுமிகளும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க உதவி புரிந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.
(த)

## யாழ்.மாணவனும் கேரள மாணவியும் இராமேஸ்வரம் பொலிஸில் தஞ்சம்

இராமேஸ்வரம், ஓக. 10
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அகதி மாணவர் ஒருவரும் கேரளாவைச் சேர்ந்த மாணவியும் இராமேஸ்வரத்தில் உள்ள பெண்கள் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.
19 வயதான ஸ்டெபி எங்கெல்ஸ் என்ற மாணவியும், 20 வயதான கஜேந்திரன் என்ற இலங்கைத் தமிழ் மாணவனும் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழக பல் மருத்துவப் பிரிவில் கல்வி பயில்கின்றனர்.
இந்தநிலையில் இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பிய நிலையில், அண்மையில் பழனி முருகன் கோயிலில் வைத்துத் திருமணம் செய்துகொண்டனர்.
எனினும் குறித்த மாணவியின் தந்தையான இராணுவ அதிகாரி தமது மகளைக் காணவில்லை என்று பொலிஸில்முறைப்பாடுசெய்துள்ளார்.
இதனையடுத்துத் தமது பெற்றோரால் தங்கள் இருவருக்கும் பிரச்சினை ஏற்படும் என்ற அச்சத்திலேயே தாம் இருவரும் பொலிஸில் சரணடைந்ததாகக் கேரள மாணவி இராமேஸ்வரம் பெண் பொலிஸில் முறையிட்டுள்ளார்.
(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கூசி வலை மீன்பிடியால் சிறகுவலை தொழில் பாதிப்பு

கொழும்புத்துறை, ஓக.10

தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைக் கொண்டு மீனவர்கள் சிலர் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடுவதால் யாழ்.குடாக்கடலில் சிறகுவலைத் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மண்டைதீவுக் கடற்பரப்பில் இவ்வாறான தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைத் தொழிற்பாடுகள் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

இதனால் சிறகுவலை மீன்பிடித் தொழிலைச் செய்வோருக்கு மீன்கள் அகப்படுவது குறைவடைந்து வருகிறது. தங்கூசி வலைப் பாவனையில் சிறிய மீன்கள் மற்றும் மீன்களின் இனவிருத்திகள் அழிக்கப்படுவதால் மீன்களின் பெருக்கம் மிகவும் குறைந்து செல்வதாவும் மீனவர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே தங்கூசி வலைப் பாவனையைக் கட்டுப்படுத்த நீரியல்வள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-135)

# யாழ்., கிளிநொச்சியில் கடல் தொழில் மேம்பாடு

### ஊடகவியலாளர் மாநாட்டில் வியட்நாம் தூதர் தெரிவிப்பு

வலி.வடக்கு, ஓக.10

வியட்நாம் நாட்டின் தொழில்நுட்ப உதவியுடன் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடல் சார் தொழில்களை வளர்ச்சி அடையச்செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கைக்கான வியட்நாம் நாட்டின் தூதர் றொன் சின்தான் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வியட் நாம் நாட்டின்தூதர் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் அலுவலர்களான என்.நிருபராஜ் மற்றும் எஸ்.சஜிவனும் கலந்து கொண்டனர்.

ஊடகவியலாளர் மாநாட்டில் தூதர் மேலும் தெரிவித்ததாவது:-

முதல் கட்டமாக யாழ்ப்பாணத்தில் வேலணை துறையூரிலும் கிளிநொச்சியில் கிராஞ்சி மற்றும் வலைப்பாட்டிலும் இந்த முன்னோடி செயல் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கடற்பாசி வளர்த்தல் சிங்க இறால் வளர்த்தல் மற்றும் கடலட்டை வளர்தல் அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஏனைய நாடுகளுக்கு இத்தகைய தொழில்நுட்ப அறிவை வழங்குவதாக இருந்தால் பல லட்சக் கணக்கான ரூபாக் கள் செலவு செய்யப்பட்டே இத்தகைய தொழில்



நுட்பத்தைப் பெற முடியும்.

இலங்கைக்கு இந்த தொழில் நுட்பமானது இலவசமான முறையில் வழங்கப்படுகின்றது. இலங்கை நாட்டின் ஜனாதிபதியும் வியட்நாம் நாட்டின் ஜனாதிபதியும் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக இதனை மேற் கொள்கின்றோம்.

இந்தத் தொழிற்பாட்டில் எந்தளவுக்கு மக்கள் ஆர்வம் காட் டுகின்றனரோ அந்தளவுக்கு பயனாளிகள் நன்மை அடைய முடியும்- என்றார். (வ-86)

## தேன் எடுக்க சென்றவரை தீண்டியது பாம்பு

தென்மராட்சி, ஓக.10

தேன் எடுக்கச் சென்ற இளம் குடும்பஸ்தரும் மாடு மேய்ச்சலுக்கு கட்டச் சென்ற இளைஞரும் பாம்பினால் கடியுண்ட னர். பாம்பு தீண்டிய குடும்பஸ் தர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவங்கள் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.


கொடிகாமம் பாலாவியைச் சேர்ந்த கனகசுந்தர் சர்வானந்தம் (வயது 29) என்பவர் வீட்டுக்கு அருகில் காணப்பட்ட தேன் கூட்டிலி ருந்து தேன் எடுப்பதற்குச் சென்ற வேளையில் விஷப் பாம்பால் கடியுண்டார். பாம்பால் கடி யுண்ட அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் உயிரிழந்தார்.

வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளும் வைத்திய அதிகாரி விடுமுறையில் நிற்பதால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மரணம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பூநகரி நல்லூர் பகுதியில் வீட்டுக்கருகில் உள்ள காணியில் மாட்டுக் கன்றினை மேய்ச்சலுக்கு கட்டச் சென்ற பாலசிங்கம் கோகுலன் (வயது 19) என்னும் இளைஞனை பாம்பு கடித்தது.

பாம்பினால் கடியுண்ட இளைஞர் பூநகரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-9)

## தமிழராய்ச்சி நினைவுத் தூபி வெள்ளத்தில் மூழ்கும் நிலை



கொழும்புத்துறை, ஓக.10

யாழ் முற்றவெளியில் அமைந்துள்ள தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தோரின் நினைவுத் தூபி எதிர்வரும் மழை காலத்தில் வெள்ளத்தில் மூழ்கும் நிலை காணப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அந்தப் பகுதியில் உள்ள காங்கேசன்துறை வீதி மற்றும் முற்றவெளியில் தாழ்ந்த பகுதிகள் என்பன புனரமைப்பு நடவடிக்கைகளால் உயர்த்தப்பட்டுள்ளன. அவற்றோடு இணைந்த நினைவுத்தூபி உள்ள இடம் மட்டும் தாழ்வாகக் காணப்படுகிறது. எனவே அடுத்து வரவுள்ள மழைகாலங்களில் அப் பகுதிகளில் சேரும் மழைநீர் நினைவிடத்தில் தேங்கி நிற்கக்கூடிய நிலைமை காணப்படுகிறது. ஆகவே இத் தூபியின் அமைவிடத்தை உயரமாக புனரமைத்து நீர் தேங்காதவாறு பாதுகாக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது. (வ-135)

## பாடசாலை பஸ்சேவையை ஆரம்பிக்க வவுனியாவில் பெற்றோர் கோரிக்கை

பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி பாடசாலை பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு வவுனியாப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெளுக்குளம், பூவரசங்குளம், செட்டிகுளம், கணேசபுரம், வவுனியா நகரம் உட்படப் பல்வேறு பகுதிகளிலும் இயங்கும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் சீரான பஸ் சேவையின் மையால் அவதியுறுகின்றனர். மிகக் குறைந்த பஸ்களே சேவையில் ஈடுபடுவதால் மாணவர்கள் அவஸ்தைகளை எதிர் கொண்டு வருகின்றனர். மேலும் பஸ்களில் நெருக்கமாக நின்று பயணிப்பதால் மாணவர்களின் சீருடைகள் அழுக்கடைவதுடன் பாலியல் ரீதியான துஸ்பிரயோகங்களும் இடம்பெறுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் பாடசாலை மாணவர்களுக்கென தனியான பஸ் சேவைகளை பாடசாலை வேளைகளில் அதிகளவில் நடத்த வேண்டும். இதன் மூலமாக மாணவர்களின் உளநெருக்கீடுகள் தவிர்க்கப்படும் என சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பாடசாலை அதிபர்கள், போக்குவரத்துச் சேவை அதிகாரிகள் எனப் பலருக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

## பக்கவாதம் பாதித்த பெண்களுக்கு கிளிநொச்சியில் பராமரிப்பு மையம்

### தொண்டு நிறுவனம் ஆரம்பித்தது

கிளிநொச்சி, ஓக.10

பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பராமரிப்பு நிலைய மொன்று கிளிநொச்சி இரத்தினபுரத்தில் 'பரலைஸ் மெடிசின் ஹோம்' என்னும் தொண்டு நிறுவனத் தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பெண் பரலைஸ் பயனாளிகளுக்காக (பக்கவாத) கிளிநொச்சி இரத்தினபுரத்தில் பரலைஸ் மெடிசின் கோம் செக்டா எனும் தொண்டு நிறுவனத்தினால் சமூக சேவை நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இலவசமாக பயனாளிகள் பயன் பெறலாம்.

போரினாலும் இயற்கை இடர்களினாலும் முள் ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களையும், கை, கால், பாதிக்கப்பட்டு அங்கவீனமான 14 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட வறுமைக் கோட்டுக்குட் பட்ட பெண்களையும் முழு நேரமாகப் பராமரிப்பதற்கு பரலைஸ் மெடிசின் ஹோம் ஆரம்பிக் கப்பட்டிருப் பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இப் பராமரிப்பு இல்லத்தில் பராமரிப்புக் கல்வி, தொழிற் கல்விப் பயிற்சிகள் என்பன வழங்கப்படவிருப்பதோடு பயனாளிகளுக்கு சிறு வருமானத் திட்டங்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் . இச் செயற்திட்டம் முழு நேரப் பராமரிப்பு பகற் பொழுது, தொழிற்பயிற்சியும் வருமானத்திட்டமும் என இரண்டு வகைப்படும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற்பயிற்சி வகுப்புக்களும் வருமானச் செயற்பாடுகளும் இங்கு இடம் பெறும். மாற்றுத்திறனுடைய பெண்களும் பகல் நேரப் பயிற்சி வகுப்புக் களிலும் வருமான மீட்டும் செயற்பாடுகளிலும் பகுதி நேர




மாகவும் முழு நேரமாகவும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

பரலைஸ் மெடிசின் ஹோமில் பயனாளிகளாக இணைய விரும்புவோர் 1 ஆம் ஒழுங்கை, இரத்தினபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு இந்த நிலையத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

0774118808 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும் - போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், வறுமைக் கோட்டுக்குட்பட்டவர் களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். ஆதரவற்ற பெண்களும் இச் செயற்திட்டத்தில் பயனாளிகளாக இணைந்து கொள்ளலாம். (க-6)

"காணி ஆக்கிரமிப்பை பேசித் தீர்க்கத் தயார்"

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்

இரா. சம்பந்தன் அவர்களின்

08.08.2013

நாடாளுமன்ற உரை

Video

உதயன் இணையத்தில்

www.OnlineUthayan.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறைமுகத்தை பார்வையிட திரண்டனர் மக்கள்



கொழும்பு தெற்கு துறைமுகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இறங்குதுறை மற்றும் களஞ்சிய சாலைகள் என்பவற்றைப் பார்வையிடுவதற்காக ஏராளமான பொது மக்கள் அங்கு செல்கின்றனர் என்று துறைமுக நிர்வாகத் தரப்பினர் தெரிவித்தனர்.

இந்த இறங்குதுறை மற் றும் களஞ்சிய சாலைகள் கடந்த 5 ஆம் திகதி ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ வால் திறந்து வைக்கப் பட்டது.

இந்த இறங்குதுறையைப் பொது மக்கள் இலவசமாக பார்வையிடுவதற்காக 8 ஆம் திகதி முதல் எதிர் வரும் 13 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச)

# காணி,பொலிஸ் அதிகாரங்களை தமிழ் மக்கள் கேட்கக் கூடாது

## அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவிப்பு



> தனிநாடு கேட்பதென்றால் தமிழகத்தில் தான் கேட்கவேண்டும். ஏனெனில் அங்குதான் தமிழர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

கொழும்பு,ஓக.10

இலங்கையில் உள்ள காணிகளில் 80 வீதமானவை அரசுக்கே சொந்தமானவை என்று தெரிவித்த அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வழக்குத் தொடுத்திருக்காவிட்டால் தமிழ் மக்களின் காணிப்பிரச்சினைக்கு இலகுவாகத் தீர்வு கண்டிருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் வியாழக்கிழமை இடம்பெற்ற வடக்கில் இடம்பெறும் காணி ஆக்கிரமிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணி அதிகாரத்தையோ பொலிஸ் அதிகாரத்தையோ தமிழ் மக்கள் கேட்கக்கூடாது. அவர்கள் கேட்க வேண்டியது அபிவிருத்திக்கான அதிகாரம் மாத்திரமே. காணிகளில் தமிழ்க் காணி, முஸ்லிம்காணி, சிங்களக் காணி என்று எதுவுமே இல்லை. இலங்கையில் உள்ள காணிகளில் 80 வீதமானவை அரசுக்குச் சொந்தமானவை.

அரச காணிகளைத்தான் மக்கள் பெற்றுக் கொண்டார்களே தவிர மக்களின் காணிகளை அரசு பெறவில்லை.

மக்களின் காணிகளை பிரபாகரன்தான் ஆக்கிரமித்தார். முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலே அவர் காணிகளைப் பறித்தார். பிரபாகரனிடமிருந்த காணிகளை படையினர்தான் மீட்டனர்.

இங்கு இப்பிரேரணையைக் கொண்டு வருமளவுக்கு பெரிதாக காணிப் பிரச்சினைகள் எதுவும் இல்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தொடுத்த வழக்கினாலேயே சில காணிப் பிரச்சினைகள் காணி அபிவிருத்தி அமைச்சினால் தீர்க்கமுடியாதுள்ளது.

வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது காணி அமைச்சரால் எதுவும் செய்யமுடியாது.

கனடாவில் 3 லட்சம் தமிழர்கள் இருக்கின்றார்கள். ஆனால் அங்கு தனிநாடு கேட்கவில்லை.

நீங்கள் தனிநாடு கேட்பதென்றால் தமிழகத்தில்தான் கேட்கவேண்டும்.

ஏனெனில் அங்குதான் தமிழர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இலங்கையில் அப்படி கேட்கமுடியாது. இங்கு ஒன்றாக மட்டுமே வாழமுடியும். காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கேட்பதைவிடுத்து அபிவிருத்தி அதிகாரத்தைக் கேளுங்கள்- என்றார். (ச-சி)

## மருந்துகள் வாங்க நிதி உதவி

வடமராட்சி, ஓக. 10

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் கடுமையான நோய்க்குள்ளான ஒருவருக்கு மத்திய சமூக சேவைகள் அமைச்சு மருந்துகள் வாங்கவென 3 ஆயிரத்து 600 ரூபாவை வழங்கியுள்ளது.

வல்வெட்டித்துறை கொற்றாவத்தையைச் சேர்ந்த என்.தணிகாசலம் என்ற நோயாளியே மருந்து வாங்குவதற்கான நிதியுதவியைப் பெறும் பயனாளி ஆவார்.

இந்தப் பயனாளி கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பகுதியுடன் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட நிதியைப் பெற்றுக் கொள்ளுமாறு, பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தெரிவித்துளார். (ந-8)

## மீண்டும் ஆரம்பமானது மாணவர் போராட்டம்

### ஈழத்தமிழருக்கு ஆதரவாக




சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் தமிழக அரசின் இலவச மடிக்கணினி வழங்கப்பட வேண்டும். ஆகிய உள்ளிட்ட கோரிக் கைகளைவலியுறுத்தி மாணவர்கள் இந்த உண்ணா விரதப் போராட்டத்தைத் ஆரம்பித்துள்ளனர். (வ-14)

பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டுமென வலியுறுத்தி சட்ட மாணவர்கள் 6 பேர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் நடைபெற இருக்கும் பொது நலவாய மாநாட்டை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும். அவ் வாறு இலங்கையில் நடைபெற்றால் கூட்டத்தில் பங்கேற்காமல் இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக் கைகளை வலியுறுத்தி சட்டக் கல்லூரி மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் நேற்றுமுதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழக மீனவர்களை உடனடியாக விடு விக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் நடைபெற இருக்கும் பொது நலவாய மாநாடு வேறு நாட்டுக்கு மாற்றப்பட வேண்டும். இலங்கையில் நடைபெற்றால் கூட்டத்தில் பங்கேற்காமல் இந்தியா புறக்கணிக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழக சட்டப் பேரவையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தை மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

## இந்தியாவிலிருந்து ஆஸி செல்ல முயன்ற 49 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக.10

இந்திய அகதி முகாம்களில் தங்கியிருந்து சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 49 பேரை நாகை மாவட்டத்தில் கியூ பிரிவு பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயன்ற சம்பவம் இது மூன்றாவது தடவை. நாகை மாவட்டத்திலிருந்து சட்ட விரோ தமாக ஆஸ்திரேலியா செல்வதற்கான வாகனம் ஒன்றில் புறப்பட்ட 5 சிறுவர்கள் உட்பட பெண் கள் 15 பேரும், ஆண்கள் 29 பேரும் என 49 பேர் சென்றபோது வாகனத்தை தடுத்து நிறுத்திய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

வேளாங்கண்ணியி லிருந்து சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயன்றமை விசாரணையின் போது தெரியவந்தது. கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளுக்காக புத்தூர் புனித ஆரோக்கிய மாதா மன்றத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (வ-14)

## மரண அறிவித்தல்கள்

### செல்வராஜா புருஷோத்தமன் (Bruse)

*(கிளை முகாமையாளர், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், வவுனியா)*

மானிப்பாய்தெற்கைப் பிறப்பிடமாகவும், குப்பிளானை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா புருஷோத்தமன் நேற்று(09.08. 2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் லீலாம்பிகை (பிரபல நடன ஆசிரியை) தம்பதியரின் பாசமிகு மகனும், வினோதினியின் (ஆசிரியை, யா/வயாவிலான் மத்திய மகா வித்தியாலயம்), அன்புக் கணவரும், சௌமிகாவின் (மாணவி, யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) பாசமிகு தந்தையும், திருமதி செல்வாம்பிகை, வீரசிங் கம் (ஆசிரியர், இராம நாதன் கல்லூரி), செ. பார்த்தீபன் (செலிங்கோ, காப்புறுதிக் கூட்டுத் தாபணம். கொழும்பு) ஆகியோரின் பசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.08.2013) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குருக்கள் ஒழுங்கை,
குப்பிளான், ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

மனைவி- 077 9333369, சகோதரன்- 077 3768940,
அம்மா- 0772948479

### வேலுப்பிள்ளை செல்லக்கண்டு



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லக்கண்டு நேற்று (09.08. 2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் கனிஸ்ட புதல்வரும் சிவபாக்கியம், ராஜரட்ணம், மாரக்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரத்தினேஸ் வரியின் அன்புக் கணவரும், ஜெகதீசன் (கேதீஸ்), கருணாகரன் (சின் னராசா), ஜெகதீபன்(தீபன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2013) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

கனகரத்தினம்வீதி,
வட்டுத்தென்மேற்கு, வட்டுக்கோட்டை

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



அமரர் செல்வி காமாட்சி கந்தையா

(மேற்பார்வையாளர் துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை)

அம்பாள் திருவடியில்
10.08.2012

திதி- ஆடிமாத அபரபக்க நவமி

அர்ப்பணிப்புடன் அரிய பணியாற்றி அம்பாளின் திருவடியடைந்த நாளை நீள நினைந்து வணங்குகின்றோம்.

நிர்வாகசபை
மகளிர் இல்லப் பிள்ளைகள், பணியாளர்கள்
துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை

## மரண அறிவித்தல்

### கந்தையா அமிர்தலிங்கம்

*(உரிமையாளர், ராச்குலன் இன்டஸ்ரீஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)*



யாழ்ப்பாணம் பலாலி றோட் 2ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் திருகோணமலையை தற்காலிக வசிப்பிடமாகவும கொண்ட கந்தையா அமிர்தலிங்கம் நேற்று (09.08.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசமணியின் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், கேசவராஜ்(லண்டன்), மிருணாளினி (லண்டன்), அமுதினி(ஆசிரியை, திருகோணமலை), ராகுலன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் திருகோணமலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வும்.

9/30, விகாரை வீதி,
திருகோணமலை.

தகவல்:
குசன் (மருமகன்)
0777 152330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய உற்பத்திப் பொருள்கள் ஏனைய மாவட்டங்களுக்கும்

### விவசாயத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 10

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாய உற்பத்திப் பொருள்களை ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்பவும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் விவசாயத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த ஏற்றுமதிகளை மேற்கொள்ள துறை சார்ந்த அதிகாரிகள் ஊடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குறிப்பாக விவசாயத்தை முதன்மை வாழ்வாதாரமாகக் கொண்ட உற்பத்தியாளர்களுக்கு இந்த ஏற்றுமதிகள் ஊடாக சந்தை வாய்ப்புப் பெற்றுக் கொடுக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. தரமான விவசாய உற்பத்திப் பொருள்களை உற்பத்திசெய்து கூடியளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் ஊடாக இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கும், வெளிநாடுகளுக்குமான ஏற்றுமதியைத் தரமுயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. (வ-14)



யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற நோன்புப் பெருநாள் தொழுகையின்போது (ஒ-10)

# திட்டமிடல் அதிகாரிகளுக்கு விசேட பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக. 10

வடமாகாண பிரதம செயலர் செயலகம் வடக்கு மாகாணத்தில் திட்டமிடல் பிரிவு அதிகாரிகளாகக் கடமையாற்றும் 50 பேருக்கு மூன்று நாள் விசேட பயிற்சி வழங்கவுள்ளது.

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயற்சி நிறுவனப் பணிப்பாளர் பொ.வாகீசன் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் 13,14,15 ஆம் ஆகிய திகதிகளில் யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் குறிக்கோள் நோக்கிய கருத்திட்ட திட்டமிடலும் திட்டமிடல் முறையையும் (பகுதி-1) என்ற பயிற்சிக்கு 50 திட்டமிடலாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.(வ-41)

# குளவி கொட்டியதில் அறுவர் காயம்

தென்மராட்சி, ஒக. 10

பூசை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தவர்களை குளவி கொட்டியது. இதில் 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்களில் 6 பேர் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கெருடாவில் வீரபத்திரர் ஆலயத்தில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

இதில் கெருடாவில் வடக்கைச் சேர்ந்த செல்லையா நிமலன் (வயது-29), இவரது மகனான நிமலன் பவிசன் (வயது-8), யோகராசா லலிதாராணி (வயது-45), மகாலிங்கம் கிருஷ்ணராஜா (வயது-34), சரசாலை தெற்கைச் சேர்ந்த சிவராசா ஜெயக்குமார் (வயது-15), சாவகச்சேரி

> " கெருடாவில் வீரபத்திரர் ஆலயத்தில் பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த சமயம்

வடக்கைச் சேர்ந்த பரமு பஞ்சநாதன் (வயது-53) ஆகிய அறுவருமே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

வீரபத்திரர் ஆலயத்தின் அருகில் பனை மரத்திலிருந்து விழுந்த ஓலையில் இருந்த குளவிக்கூடு கலைந்ததில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் குளவிக் கடிக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-9)

### நகர சபைத் தலைவரின் முயற்சியால்

# வீதி மூடலுக்கு சுமுகத் தீர்வு

தென்மராட்சி, ஒக.10

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக உள்ள கைலாயபிள்ளை வீதி ரயில் பாதை நிர்மாணிப்பின் காரணமாக மூடப்படுவது தொடர்பாக அந்தப் பகுதி மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் நகர சபைத் தலைவரின் தலையீட்டால் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்பட்டது.

சங்கத்தானை ரயில் நிலைய மேடை விஸ்தரிப்பால் மாணவர்கள் உட்பட பொதுமக்கள் நீண்ட காலமாகப் பயன்படுத்தி வந்த கயிலாயபிள்ளை வீதி மூடப்படுவதை எதிர்த்து அந்தப் பகுதி மக்கள் கடந்த 4 ஆம் திகதி போராட்டம் நடத்தினர்.

> சங்கத்தானை ரயில் நிலைய மேடை விஸ்தரிப்பால் மாணவர்கள் உட்பட பொதுமக்களால் நீண்ட காலமாகப் பயன்படுத்தி வந்த கயிலாயபிள்ளை வீதி மூடப்படுவதை எதிர்த்து அந்தப் பகுதி மக்கள் கடந்த 4 ஆம் திகதி போராட்டம் நடத்தினர்.

இந்த விடயம் நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்துஇருபகுதியினரையும்அழைத்து நேற்று நகர சபை கேட்போர் கூடத்தில் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

நகர சபைத் தலைவர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ரயில் பாதை நிர்மாணப் பணிக்குப் பொறுப்பான பொறியியலாளர் பிரேம்குமார் தலைமையிலான ரயில் திணைக்கள உயர் அதிகாரிகள் குழுவினரும், அந்த வீதியில் வதியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் இ.கயிலைநாதன், யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் ஆகியோர் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர்.

குறித்த வீதியைப் பாதசாரிகள் பயன்படுத்தவதற்கு வசதியாக படிகள் அமைத்து வழங்குவதெனவும் இந்த வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மீனாட்சி அம்மன் கோயில் வீதியிலிருந்து ரயில் பாதைக்கு அருகில் வாகனப் போக்குவரத்துக்கு உரிய வீதி அமைத்து தருவதாகவும் ரயில் திணைக்களத்தினர் உறுதிஅளித்தனர்.

பிரதேச மக்கள் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகளும் அதனை ஏற்றுக் கொண்டதால் போராட்டத்துக்கு சுமுகமாகத் தீர்வு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

### அடையாளம் காணப்படாத

# சடலங்களை அடக்கம் செய்ய யாழ்.நீதிமன்றம் அனுமதி

யாழ்ப்பாணம், ஒக.10

ஊர்காவற்றுறை கடற்கரையோரங்களில் ஒதுங்கி அடையாளம் காணப்படாது யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள ஐந்து சடலங்களையும் அடக்கம் செய்ய யாழ்.நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஊர்காவற்றுறை கடற்பகுதியில் வெவ்வேறு நாள்களில் வெவ்வேறு இடங்களிலிருந்து சிறுமி, பெண் ஒருவர் உட்பட 7 பேரின் சடலங்கள் அழுகிய நிலையில் கரையொதுங்கியிருந்தன. ஊர்காவற்றுறை பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றின் உத்தரவுப்படி சடலங்களை மீட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைத்தனர். அவற்றில் இரண்டு சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன.

ஏனைய ஐந்து சடலங்களும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அவற்றை அடையாளம் காணுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகமும் பல தடவை அறிவித்திருந்தது. எனினும் எவரும் உரிமை கோரவில்லை. இந்நிலையிலேயே அவற்றை அரச செலவில் புதைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, குறித்த சடலங்கள் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா சென்றவேளை நடுக்கடலில் விபத்துக்குள்ளான நிலையில் இறந்தவர்களாக இருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# வீதி அகலிப்புப் பணியால் போக்குவரத்து நெருக்கடி

வடமராட்சி, ஒக. 10

பருத்தித்துறை நகரில் வீதி அகலிப்புப் பணிகள் மற்றும் புதிதாக வடிகால்கள் அமைக்கும் பணிகள் மிகத் துரிதமாக இடம்பெற்று வருவதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தனியார் சிற்றூர்திகள், ஓட்டோக்கள் தரித்து நிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தனியார் சிற்றூர்திகளும், ஓட்டோக்களும் இ.போ.ச தரிப்பிடத்தில் நிலைமைக்கு ஏற்பத் தங்கி நின்று சேவைகளில் ஈடுபடுகின்றன. (வ-8)

# விபத்தில் யுவதி படுகாயம்

வரணி, ஒக. 10

வரணி – நாவற்கட்டுப் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் பெண்ணொருவர் படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் இதேபிடத்தைச் சேர்ந்த கு.செந்தாளினி (வயது-20) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். (ஜ-9)

# பதிவு செய்யப்படுகின்றன நோயாளர் நலன்புரி சங்கங்கள்

வைத்தியசாலைகளின் நோயாளர் நலன்புரி சங்கங்களை பதிவு செய்து பதிவிலக்கங்களை பெற்றுக் கொள்வதில் நடைமுறையில் இருந்த விதிமுறை தொடர்பான சிக்கல்கள் சீர்செய்யப்பட்டதை அடுத்து நோயாளர் நலன்புரி சங்கங்கள் பிரதேச செயலக சமூகசேவை பகுதியினரால் பதிவு செய்யப்பட்டு பதிவிலக்கங்கள் வழங்கப்படுகின்றன.

சுகாதார அமைச்சின் சுற்றுநிருபத்துக்கு அமைவாக வைத்தியசாலைகள் தோறும் நோயாளர் நலன்புரி சங்கங்கள் நிறுவப்பட்டு அவை பதிவு செய்யப்பட வேண்டும். நோயாளர் நலன்புரி சங்கங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட போதிலும் பதிவு செய்து பதிவிலக்கங்களை பெறுவதில் இழுபறி நிலை நிலவி வந்தது.

நோயாளர் நலன்புரி சங்கங்களின் உபவிதியில் 'தலைவர்' பதவியை வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியே வகிக்க வேண்டும் என கூறப்பட்டிருந்தது. சமூக சேவைகள் திணைக்களத்தில் 'வலிந்து உதவி செய்யும்தன்னார்வத் தொண்டு அமைப்புக்களை' பதிவு செய்வதற்கு தலைவர் பதவி ஜனநாயக ரீதியில் பொதுச்சபைக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்படுபவர்களாக இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைத் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான நடைமுறை விதிகளுக்கும் நோயாளர் நலன்புரி சங்க உபவிதிகளுக்கும் இடையே காணப்பட்ட முரண்பாடு களால் நோயாளர் நலன்புரி சங்கங்களை பதிவு செய்வதில் இழுபறி நிலைநிலவி வந்தது.

தற்போது நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அமைப்பு விதியில் திருத்தம் செய்யப்பட்டதை அடுத்து நோயாளர் நலன்புரி சங்கங்கள் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு பதிவிலக்கங்கள் சமூக சேவைத் திணைக்களத்தால் வழங்கப்படு வருகின்றன. (வ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமைக்கும் எல்லையுண்டு

## பாகிஸ்தானை எச்சரிக்கிறது இந்தியா

புதுடில்லி, ஓக.10

''எங்கள் பொறுமையை சோதிக்க வேண்டாம். அதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும். நட்புறவையும், அணுகுமுறையையும் மறு பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும்'' என்று பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது இந்தியா.

பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் இந்திய இராணுவத்தினர் உயிரிழந்த சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் இதுகுறித்து நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றும் போதே இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

''இந்திய இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவத்தின் உதவி இருந்துள்ளது என்பது உறுதியான தகவல். பாகிஸ்தான் இனியும் எமது பொறுமையை விளையாட்டாக எடுத்துக் கொண்டால் விளைவு விபரீதமாகி விடும். பாகிஸ்தானின் உதவி, ஆதரவு, பயிற்சியுடன் தான் தீவிரவாதிகள் இந்தியாவில் ஊடுருவுகின்றனர்.

தொடர்ந்து இதைப் பாகிஸ்தான் ஊக்குவிக்குமானால் விபபீத விளைவுகள் ஏற்படும். இனியும் சும்மா இருக்க மாட்டோம். தக்க பாடம் கற்பிப்போம். எல்லை குறித்த அணுகுமுறை, நட்புறவு ஆகியவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயம்



ஏற்படும். அப்படிப்பட்ட சூழ்நிலையை பாகிஸ்தான் இனியும் ஏற்படுத்தி விடக் கூடாது என்று எச்சரிக்கிறேன்'' என்று தெரிவித்தார் அந்தோனி.(ற)

# இழப்பீடு வேண்டாம் நடவடிக்கை தேவை

## உயிரிழந்த இந்திய சிப்பாயின் மனைவி கோரிக்கை



புதுடில்லி, ஓக.10

காஷ்மீர் பூஞ்ச் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த இந்திய இராணு வச் சிப்பாய் ஒருவரின் மனைவி இழப்பீட்டுத் தொகையை வாங்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பூஞ்ச் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி நடத்திய தாக்குதலில் இந்திய இராணுவ வீரர்கள் 5 பேர் உயிரிழந்தனர். அதில் நால்வர் பீகார் மாநிலத்தை சேர்ந்தவர்கள்.

உயிரிழந்த இராணுவத்தினரின் குடும்பங்களுக்குத் தலா ரூபா 30 இலட்சம் வழங்கப்படும் என்று பீகார் மாநில அரசு அறிவித்திருந்திருந்தது. எனினும் அதை வாங்க மறுத்துள்ளார் பாட்னாவைச் சேர்ந்த உயிரிழந்த சிப்பாய் ஒருவரின் மனைவி,

''பணத்தை நஷ்ட ஈடாக கொடுத்தால் எனது கணவர் திரும்ப வந்துவிடுவாரா? இந்திய அரசு கொலை செய்யப்பட்ட இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு பதிலாக அவர்களை கொன்றவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எல்லையில் இந்திய வீரர்கள் கொல்லப்படுகிறார்கள், தலைதுண்டிக்கப்படுகிறார்கள். இவற்றுக்கு எதிராக மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இன்னமும் எவ்வளவு காலம் தான் பாகிஸ்தானின் இதுபோன்ற தாக்குதல்களை பொறுக்க முடியும்?'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவரின் கோரிக்கையை வலியுறுத்தி அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பதற்றமான நிலை காணப்பட்டது.(ற)

# நிவாரண நிதிக்காக நடனமாடும் 'ஐஸ்'

பாட்னா, ஓக.10

உத்தரகண்ட் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண நிதி திரட்டும் நிகழ்ச்சியில் முன்னாள் உலக அழகியும் பிரபல நடிகையுமான ஐஸ்வர்யா ராய் நடனமாடவிருக்கின்றார்.

பொலிவூட் திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வந்த ஜஸ்வர்யா ராய், தாயாகிய பின்னர் நடிப்பு, நடனம் ஆகியவற்றில் இருந்து ஒதுங்கி இருந்தார். எனினும் தற்போது நிவாரண நிதி திரட்டும் நிகழ்ச்சி என்பதால் அதில் கலந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

பிரபல திரையுலக நட்சத்திரங்கள் கலந்துகொள்ளும் நிதி திரட்டும் நிகழ்ச்சி, தொடர்ந்து 8 மணி நேரம் நடைபெறவுள்ளது என்று கூறப்படுகின்றது.

வெள்ள அனர்த்தத்தால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள உத்தரகண்ட் மாநிலத்தில் நிதிப் பற்றாக்குறை காரணமாக நிவாரண நடவடிக்கைகள் மந்த கதியில் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# இந்திய இராணுவத்தை இழிவாகப் பேசினார்

## பீகார் அமைச்சருக்குக் கண்டனம்

புதுடில்லி, ஓக.10

இந்திய இராணுவம் குறித்து இழிவாகக் கருத்துத் தெரிவித்தார் என்று பிகார் மாநில அமைச்சர் பீம் சிங்குக்கு எதிராகக் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

பாகிஸ்தான் இராணுத்தின் அத்துமீறிய தாக்குதலால் உயிரிழந்த இராணுவ வீரர்களின் உடல்களைப் பொறுப்பேற்பதற்காக பீகார் மாநில அமைச்சர் விமான நிலையம் சென்றிருந்தார்.

அங்கு அவர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது, ''இராணுவத்தில் சேர்வதே சாவதற்குத் தான்'' என்று கருத்துத் தெரிவித்திருந்தார். அதையடுத்தே அவருக்கு எதிராகக் கடும் கண்டனங்கள் கிளம்பியுள்ளன.

விடயம் பூதாகரமாகியதை அடுத்து உடனடியாக பீம் சிங்கை மன்னிப்புக் கோருமாறு பீகார் முதலமைச்சர் உத்தரவிட்டார். அதையடுத்துத் தாம் தெரிவித்த கருத்துக்கு மன்னிப்புக் கோரியுள்ளார் பீம் சிங்.(ற)



மண்டைதீவு - திருவெண்காடு

திருவருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான

விஜய வருஷ மஹோற்சவப் பெருவிழா - 2013

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை (11.08.2013) ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக நடைபெற சித்தி விநாயகரின் திருவருள் கூடியுள்ளது.

மஹோற்சவ கிரியா கால நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 11.08.2013 | மு.ப 10.30 மணி |
| வேட்டைத் திருவிழா | 18.08.2013 | பி.ப 4.00 மணி |
| | | இதனைத் தொடர்ந்து இரவு சப்பறத் திருவிழா நடைபெறும். |
| தேர்த் திருவிழா | 19.08.2013 | காலை 7.00 மணி |
| தீர்த்தத் திருவிழா | 20.08.2013 | காலை 7.00 மணி |

பத்துத் தினங்களும் விசேட நாதஸ்வர தவில் இசைக் கச்சேரியும் மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) நடைபெறும்.


மண்டைதீவு
திருவெண்காடு.

ஆலய தர்மகர்த்தாக்களும்
உபயகாரர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 லட்சம் முட்டைகளை உடைத்து போராட்டம்

பரிஸ், ஓக.10
பிரான்ஸில் முட்டையின் விலையை அதிகரிக்கக் கோரி கோழி பண்ணை உரிமையாளர்கள் தினமும் ஒரு லட்சம் முட்டைகளை உடைத்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.
பிரான்ஸ் நாட்டில் இந்த ஆண்டு முட்டை உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது. அதனால் முட்டை மிக குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. முட்டை விலையை அதிகரிக்கும்படி கோழி பண்ணையாளர்கள் அரசிடம் பலமுறை கோரினர். எனினும் அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.
அதையடுத்து பிரிட்டானி மாகாணத்தில் உள்ள முட்டை உற்பத்தியாளர்கள் ஒன்று சேர்ந்து அங்குள்ள வரித்துறை அலுவலகத்தின் முன்பாக தினமும் ஒரு லட்சம்முட்டைகளைஉடைத்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.
ஒரு லட்சம் முட்டைகளை வாகனத்தில் கொண்டு வந்து அப்படியே தெருவில் கொட்டி அந்த இடத்தை நாறடித்து வருகின்றனர்.
இந்த விடயத்தில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் வளரும் நாடுகளுக்கு இந்த முட்டைகளை இலவசமாக அளிக்கவும் முட்டை உற்பத்தியாளர்கள் திட்டமிட்டுள்ளனர். (ற)



பாகிஸ்தானின் லாகூர் நகரில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு தீவிரவாதிகளின் தாக்குதல் மிரட்டல் வந்ததை அடுத்து அங்கிருந்த தூதரக ஊழியர்கள் வெளியேற்றப்பட்டனர். அதையடுத்து அமெரிக்கர்கள் எவரும் பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

## சீன மூத்த அதிகாரி பதவி நீக்கம்

பீஜிங், ஓக.10
ஊழல்களில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சீனாவில் பொருளாதார விவகாரங்களுக்கான தலைமை அதிகாரி ஒருவர் அரசு பொறுப்புகளை வகிக்க தடை விதிக்கப்பட்டிருப்பதுடன், அவர் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும் வெளியேற்றப்பட்டுள்ளார்.
தேசிய அபிவிருத்தி மற்றும் சீர்திருத்த ஆணையத்தின் துணைத் தலைவராக இருந்துவந்த லியு டியனான் பெருமளவான தொகைகளை லஞ்சமாகப் பெற்றுள்ளார் என்று கூறப்படுகின்றது.
அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தினார் என்பதற்காக இந்த ஆண்டு ஆரம்பத்தில் லியுவுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாகவே தற்போது அவரிடம் இருந்த பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# தோல்விப் பாதையை நோக்கி அல் -குவைதா

## அமெ. ஜனாதிபதி கூறுகின்றார்



நியூயோர்க், ஓக.10
அல் - குவைதா அமைப்பு தோல்விப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. ஆனாலும் பயங்கரவாத அமைப்புகளை அழிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவது அவசியம் என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.
கலிபோர்னியாவில் உள்ள பென்டெல்டன் இராணுவ முகாமுக்குச் சென்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி அங்குள்ள அமெரிக்க இராணுவத்தினரின் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
''அல்-குவைதா அமைப்பின் முக்கிய தலைவர்கள் அழிக்கப்பட்டு விட்டார்கள். ஆப்கன் மற்றும் பாகிஸ்தானில் இயங்கிவரும் அல்-குவைதா அமைப்பும் அழிவுப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.
ஆப்கனில் அமெரிக்கப் படைகள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட பின்னர் அங்குள்ள மக்கள் இயல்பு வாழ்க்கையைப் பெற்றுள்ளனர். அங்குள்ள பாதுகாப்புப் படையினர் பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்குப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். அது உங்களால் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல் இல்லாத ஆப்கனை உருவாக்குவோம் என்பதில் ஐயமில்லை.
ஆப்கன் போர் முடிந்த பின்னர் பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லை என்று எண்ணிவிட முடியாது'' என்று அங்கு மேலும் தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா. (ற)

## இருமுனை சவால்களை எதிர்கொள்கின்றோம்

### பாக். விமானப் படைத் தளபதி

இஸ்லாமாபாத், ஓக.10
பாகிஸ்தான் விமானப் படை இருமுனை சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. அதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி ரபீக் பட்.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
''பாகிஸ்தான் தற்போது இருமுனைசவால்களை எதிர்கொண்டுள்ளது. ஒன்று உள்நாட்டில் இருந்தும், மற்றொன்று பக்கத்து நாட்டில் (இந்தியா) இருந்தும் விடப்படும் சவால்களாகும்.
உள்நாட்டில் பயங்கரவாதம் உருவத்திலும், வெளிநாட்டில் இருந்து பல வகைகளிலும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. வெளியில் இருந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள எப்போதுமே தயாராக இருந்து வருகிறோம். புதிதாக இக்கட்டானநிலை தோன்றும்போது, அதிலிருந்து விடுபட விரைந்து செயலாற்றுகிறோம். பயங்கரவாதத்தை ஒழிப்பதில் பாகிஸ்தான் தீவிரம் காட்டி வருகிறது. விமானப் படையால் குறுகிய காலத்தில் பல்வேறு காரியங்களை செய்து முடிக்க முடியும். அதன் திறமைகளை புரிந்து கொண்டுஅதனுடன்இணைந்து செயலாற்றினால் நிறையச் சாதிக்கலாம்.
பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் தரை வழியிலான படைகளுக்கு விமானப் படை உறுதுணையாக இருந்து வருகிறது'' என்று தெரிவித்துள்ளார். (ற)

## அணுக் கசிவு ஏற்படுவது தடுக்கப்படும்

டோக்கியோ, ஓக.10
புகுஷிமா அணு உலையில் இருந்து அணுக்கசிவு ஏற்படுவது தடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் ஜப்பான் பிரதமர் சின்சோ அபே.
கதிர்வீச்சுடன் கூடிய 300 தொன் நீர் நாளாந்தம் கடலுடன் கலப்பதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை அடுத்தே பிரதமர் சின்சே அபே இவ்வாறு தெரிவித்துள் ளதுடன் இதுகுறித்து அரசு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளும்என்றும் தெரிவித்தார்.(ற)

## கடும் மோதல்களின் நடுவே மசூதிக்கு வந்தார் அசாத்




டமஸ்கஸ், ஓக.10
சிரியாவில் கடும் மோதல்கள் இடம்பெற்று வரும் நிலையில் அந்நாட்டு ஜனாதிபதி பஸார் அல் அசாத் ரமழான் பண்டிகையை முன்னிட்டு மசூதியில் தொழுகை நடத்தும் காணொலியை அந்நாட்டு தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.
டமாஸ்கஸில் உள்ள அனஸ்பின் மாலிக் மசூதியில், ரமழான் பண்டிகையை முன்னிட்டு அஸாத் வியாழக் கிழமை அதிகாலைதொழுகை நடத்தினார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.
கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போர் உக்கிரமடைந்துள்ள நிலையில், இந்த வாரத்தில் 3 ஆவது முறையாக பொதுமக்கள் முன்னிலையில் தோன்றியுள்ளார் அசாத்.
இதனிடையே டமாஸ்கஸின் மால்கி பகுதியில் அரச எதிர்ப்பாளர்கள் நேற்று முன்தினம் அதிகாலை தாக்குதலில் ஈடுபட்டனர் என்று பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது. எனினும் தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. (ற)

## இந்தியாவின் மீதுள்ள அச்சம் தேவையற்றது

### பாகிஸ்தானுக்கு அமெ. அறிவுரை


நியூயோர்க், ஓக.10
ஆப்கனில் அதிகரித்துவரும் இந்தியாவின் செல்வாக்குக் குறித்த பாகிஸ்தானின் கவலை மிகைப்படுத்தப்பட்டது என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா.
இதுகுறித்து அமெரிக்க உயரதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில்,
ஆப்கனில் இந்தியாவின் ஆதிக்கம் மிகக்குறைந்த அளவில்தான் உள்ளது. இந்தியாவிலிருந்து அதிகபட்சமானோர் அங்கு பணியாற்றுகின்றனர். எனவே பாகிஸ்தானின் கவலை மிகைப்படுத்தப்பட்டது என்றே சொல்லலாம். பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் இந்தியாவின் பங்களிப்பு ஆப்கனில் அதிகமாக உள்ளது. எனவே இங்கு தூதரகங்களை அமைத்து செயற்படுவது இந்தியாவுக்கு அவசியமாக உள்ளது '' என்று தெரிவித்துள்ளார்.
அண்மையில் ஆப்கனில் உள்ள இந்தியத் தூதரகம் அருகே தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையிலே அமெரிக்கா இவ்வாறு தெரிவித்துள்ளது. (ற)



பாகிஸ்தானில் ரமழான் மாத நிறைவை முன்னிட்டு தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். தொழுகையை முடித்து பள்ளிவாசலை விட்டு வெளியே வந்தவர்கள் மீதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. உள்ளூர் அரசியல்வாதி ஒருவரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிகல் பொழிவை காணும் வாய்ப்பு



கொழும்பு,ஓக.10
பர்சீட் எனப்படும் எரிகல் பொழிவை இன்று சனிக் கிழமை முதல் மூன்று நாள் களுக்கு காணும் வாய்ப்பு இலங்கையர்களுக்கு கிட்ட வுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஒரு மணித் தியாலத்துக்குள் சுமார் 50 எரிகற்களை காண்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என்று இலங்கை வான் கோள்மண்டலம் தெரிவித் துள்ளது.

வானம் தெளிவாக இருக்கும் பட்சத்தில் நள்ளிரவு தொடக்கம் அதிகாலை வரை வடகீழ் வான் பரப்பில் பர்சீட் எரிகல் பொழிவைக் காண முடியும் என்று இலங்கை வான்கோள் மண்டலம் தெரி வித்துள்ளது. (ச)

# மட்டு. கல்லடியில் விபத்து நால்வர் படுகாயமுற்றனர்


மட்டக்களப்பு,ஓக.10
மட்டக்களப்பு, கல்லடி மணிக் கூட்டுக் கோபுர சந்தியில் ஓட்டோ ஒன்று, மோட்டார் சைக்கிளுக்கு வழிவிட முயன்றதில் குடைசாய்ந்து விபத்துக்கு உள்ளாகியது.

குறித்த சந்தியில் வந்த மோட்டார் சைக்கி ளுக்கு வழிவிடுவதற்காக ஓட் டோவின் சாரதி முயற்சித்தபோது வேகக் கட்டுப் பாட்டை இழந்து, ஓட்டோ குடை சாய்ந்தது. அதில் பயணித்த சாரதி உட் பட நான்கு பேரும் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ச)



# கொக்குவில் வளர்

# பொன்விழ




**பொன்விழா நிகழ்**

காலம் - 10.08.2013 சனிக்கிழமை
காலை நிகழ்வுகள் 9.00 மணி
தலைவர் - திரு. இ.சிவசங்கர் (கழகத்
பிரதம விருந்தினர் - Dr.& Mrs.சுரேஷ்குமார்
சிறப்பு விருந்தினர் - சி.குகனேந்திரன் (ஸ்தாப
ப.ஜெகநாதன் (ஸ்தாபக
சி.சிதம்பரநாதன் (ஸ்தாப

சிறுவர் கலை நிகழ்வுகள்
வாழ்த்துரை

மாலை நிகழ்வுகள் - பிற்பகல் 2.30 மணி
தலைவர் - திரு. ஆ சத்தியமூர்த்தி (நி
பிரதம விருந்தினர் - திரு. திருமதி சுரேஷ் அவ
சிறப்பு விருந்தினர் - திரு. அ.அருணகுமார் (U
திரு. த.ரகுராஜ் (U.K)
திரு. பொ.குமாரதாஸ் (A

சிறுவர் கலை நிகழ்வு
வாழ்த்துரைகள்
சிறப்புரைகள்
பொன்விழா மலர் வெளி
கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் தலை
பரிசளிப்பு நிகழ்வு
நாச்சிமார் கோவில
ஜெயராமன் குழுவினரின் வய

### ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி

"வளர்மதி" பொன்விழாக் காணும் ஒரு சமூக சேவை நிறுவனமாகும். இது என்றுமே வளர்மதியாகத் திகழ்வதை யிட்டு மிக மகிழ்ச்சி அடைகின்றேன். உரும்பிராய் கிட்ஸ் பார்க் உடனும் இணைந்து நலிவுற்றோரின் கல்வி மேம்பாட்டிற்காக உழைப்பது பாராட்டிற்குரியது. "வளர்மதி"யின் சேவை யில் என்னையும் ஒரு பங்காளனாக இணைத்தமை மனநிறை வினைத் தருகின்றது. இந்நிறுவனத்தில் செயற்படுவோர் அர்ப்பணிப்புடன் செயற்படு வது இதன் முன்னேற்றத்திற்கு ஒரு காரணியாக அமைகின்றது. சேவை தொடர வாழ்த்துகின்றேன்.

அ.பஞ்சலிங்கம்,
முன்னாள் அதிபர்

### கொக்குவில் கிராமத்தின் ஆலவிருட்சம்

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியினை அப்பிரதேச மக்களின் குறிப்பாக இளைஞர்களின் பங்களிப்பின்றி முன்னெடுத்துச் செல்வதென்பது கடினமானது. அந்த வகையில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கொக்குவில் பிரதேசத்தின் சமூக, பண்பாட்டு வளர்ச்சியினை நோக்கமாகக் கொண்டு வளர்மதி முன்னேற்றக் கழகத்தினையும் அதனோடு இணைந்த சனசமூக நிலையத்தினையும் உருவாக்கிய ஆரம்ப கர்த்தாக்களின் நோக்கங்கள் செவ்வனே செயற்படுத்தப் பட்டு வருகின்றன.

பொதுவாக ஒரு கிராமத்தினை மையமாகக் கொண்டு செயற்படும் சமூக நிறுவனங்கள் தொடர்ச்சியாக சேவையி னைச் செய்வதில் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திக்கின்றன. குறிப்பாக தலைமைத்துவத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு கள் இதற்கு முக்கிய காரணியாகக் கொள்ளலாம். ஆனால் கடந்த முப்பது ஆண்டுகளாக எமது பிரதேசத்தில் காணப்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலைகளின் மத்தியிலும் தன்னல மற்ற சேவை மனப்பான்மை கொண்ட இளைஞர்களின் கூட்டுப் பொறுப்பின் விளைவாக இந்தக் கழகம் ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி தன்னைச் சூழவுள்ள பிரதேசத்திற்கு மட்டுமன்றி தமிழ் கூறும் நல்லுலகிற்கு எதிர்நீச்சல் போட்டு பல்வேறு செயற்றிட்டங் களை செயற்படுத்தி வருவதையிட்டு எல்லோரும் பெருமை கொள்கின்றனர்.

இந்த நிலையில் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் சேவையினைச் சிறப்புற ஆற்றியுள்ள வளர்மதி முன்னேற்றக் கழகம் தொடர்ந்தும் பல நூற்றாண்டு கள் சேவை யினைத் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டு கின்றேன்.

"வாழ்க வளர்மதி"

பேராசிரியர் கா.குகபாலன்
புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.

### வாழ்த்துச் செய்தி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் தனது சேவையில் ஐம்பது ஆண்டுகள் நிறைவு செய்து பொன்விழா கொண்டாடுவதை இட்டும் சிறப்பு மலர் வெளியிடுவதை அறிந்தும் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இக் கழகமானது ஐம்பது ஆண்டுகளில் பல தடங்கள் பதித்துள்ளது. ஆரம்பத்தில் ஒரு தனியார் கட்டடத்தில் ஒரு வாசிகசாலையாக ஆரம்பித்து இன்று ஒரு பெரிய மண்டபத்தினை அமைத்து நிமிர்ந்து நிற்பது கழகத்தின் செயற்பாட்டை வெளிப்படுத்து வதாக அமைகின்றது.

கழகத்தின் சேவையில் மிக முக்கியமானது. இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் நிலை கொண்ட காலப்பகுதியில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. தனியார் நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவ னங்கள் யாவும் செயற்படாமலிருந்த காலப்பகுதி யில் கழகத்தின் நிர்வாகிகள் எங்கெங்கு உணவுப் பொருள்களை பெற முடியுமோ அவற்றை பெற்று தமது பகுதி மக்களுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்து மக்களின் உணவுப் பஞ்சத்தைப் போக்கினர் என்பதனை மக்கள் இன்னும் நினைவு கூருவர்.மேலும் மக்கள் சேவை மகேசன் சேவை என்பதற்கு இலக்கணமாக திகழ்ந்து இக் கழகம் சேவையாற்ற வேண்டி மனதார வாழ்த்துகின்றேன்.

"வளர்மதி முழுமதியாக வாழ்க வளமுடன்"
வளர்க நின் சேவையில்

பெ.கனகசபாபதி
முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை.

### ஸ்தாபக அங்கத்தவர் வாழ்த்து

1963ஆம் ஆண்டு நால்வர் விளையாட்டாக விளையாட ஆரம்பித்த விளையாட்டுக் கழகம் இன்று ஆலமரம்போல் விருட்சமாக வளர்ந்து அளப்பரிய சேவை செய்துகொண்டு பொன்விழாக் காண்பதை யிட்டு ஸ்தாபக அங்கத்தவன் என்ற வகையில் அளப் பரிய பெருமையடை கின்றேன்.

வன்னியில் அல்லலுறும் மக்களுக்கு சுயதேவைப் பூர்த்தி, முன்பள்ளி கட்டடங்கள், தையல் பயிற்சி வகுப்புக்கள், நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கிணறு வெட்டிக் கொடுத்தல் போன்ற பல செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இச்சேவை மேன்மேலும் வளர்ச்சியடைந்து பல்லாண்டு சேவைபுரிய வாழ்த்துகின்றேன்.

சி. குகனேந்திரன் (கனடா), ஸ்தாபக அங்கத்தவர்.

### வாழ்த்துச் செய்தி

கொக்குவில் கிழக்கு வாழ் மக்களின் சமூக முன்னேற்றத்திற்கென்றே தோன்றி, இன்றும் வீறு நடைபோட்டு வளம் குன்றாது சேவையாற்றும், கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்திற்கு வயது ஐம்பது என்பது, அங்கு பிறந்து வாழும் எல்லோ ரையும் நெஞ்சுயர வைக்கின்றது.

கிராமத்தின் பல்துறைசார் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் பலதரப்பினரதும் திறன்களையும் மேலுயர்த்தி, அந்தக் காலத்தில் முந்தியிருக்கச் செய்த பெருமையும் "வளர்மதி"க்கு உண்டு. சமூக நலன் கருதி உருவாக் கப்பட்ட "வளர்மதி" இன்று பல தன்னலமற்ற சமூக சேவையாளர்களை உருவாக்கியதென்ற பெருமை யையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

அச் சூழலில் வளர்ந்தவன் நான் என்று சொல் லிப் பெருமைப்படுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அது இன்னும் பலப்பல ஆண்டுகள் முந்தைய வழித் தடத்தில், மேலும் பழுதிலாத் திறனுடன் செயற்பட்டு மேலோங்கட்டும் என்று ஐம்பதாவது அகவையில் வாழ்த்துகிறேன்.

காலத்தின் தேவைக்கேற்ப மேன் மேலும் வளரும் சக்தி "வளர்மதி" க்குக் கிடைக்கட்டும்.

ஈ. சரவணபவன்
கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ். மாவட்டம்.
முன்னாள் போஷகர்,
வளர்மதி முன்னேற்றகழகமும் சனசமூக நிலையமும்.

### ஸ்தாபக அங்கத்தவர் வாழ்த்து

மாத்தனை முருகன் அருளால் அவன் வடபால் அமைந்து ஆல் போல் பரந்து, அறுகுபோல் வேர் விட்டு, நற்சேவைகள் பல செய்யும், வளர்மதி கழகம் அகவை ஐம்பதைக் கடந்து, பொன்விழாக் கொண் டாடும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்தி வணங்குவதில் உவகையும், பெருமையும் அடைகின்றேன்.

நூல் நிலையம், வாசிகசாலை, முன்பள்ளி, மாதர் சங்கம், விளையாட்டுப் பகுதி என்பன ஊடாகப் பல சேவைகள் செய்தும் மாத்தனை முருகன் கோவில் தேர்த் திருவிழா அன்று அன்னதானம் வழங்கியும் வரும் நிர்வாகத்தினரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பர். சேவைகள் பல புரிந்து இன்று பல வளர்ச்சிகள் கண்டு வளர வளர்மதியை மனமார வாழ்த்து கின்றேன்.

ப. ஜெகநாதன், ஸ்தாபக அங்கத்தவர்.

### ஸ்தாபக அங்கத்த

கொக்குவில் சம்பியன் வீதியில்
ஓங்கி நிற்கும் வளர்மதியின் ஓர் ஸ்தா
நான் மகிழ்வடை கின்றேன். விளையா
என ஆரம்பிக்கப்பட்ட கழகம் இன்று ப
பெருகி நிற்பதும், பலர் போற்றிப் பு
கண்டு பெருமையடைகின்றேன். வ
வளர வாழ்த்துகின்றேன்.

சி. சிதம்பரநா

### வளர்மதித் தாய் பே

எல்லாம் வல்ல மாத்தனை முருக
வர்கள், ஆர்வலர்கள் போன்றோரின் பே
நிலைத்து நிற்கின்றது. கழகச் செய
அமைத்து சேவைகள் பகிர்ந்தளிக்கப்
பாடுகள் இலகுவாக்கப்பட்டுள்ளன.
புதுப்பொலிவுடன் இயங்கத் தொடங்கி
மொரு மைல் கல்லாக அமையும் என்
வளர எல்லோரும் உதவிட வேண்டு
வாழ்த்தி நிற்கின்றேன்.

### மாண்புடன் மனங்கொள்

உலகின் உன்னதங்கள் ஒற்றுமையி
கோவிலும், பள்ளியும் ஓர் உலகின்
பாராட்டவும் பேசவும் வைப்பன சுவை
அறிவும் இருகண்களாகி உலகை விழி
இமைகள்தான் சனசமூக நிலையங்கள்

இக் கூற்றுக்கு இலக்கணம் தருவது
கழகமும் சனசமூக நிலையமும் ஆகு
இணைத்து அது ஆற்றிவரும் பணிகள்
குரியன. சுவாசிப்பது போல் வாசிப்பு
வாசிப்பை வாழ்க்கைப் பழக்கமாகவும்
ஐம்பது ஆண்டுகள் வளர்மதி ஆற்றிவரு

மாசில்லாத நற்பணிகளினால் எங்க
வரும் வளர்மதி இன்னும் பல நூறு
வாழ்த்துவதில் பெருமையடைகின்றே

மதியுன
பேராசிரியர் மா.சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளச் செலுத்தாத கடன்களை வசூலிப்பதில் வங்கிகள் தீவிரம்

## சட்டநடவடிக்கைகளுக்காக கொழும்பிலிருந்து வழக்கறிஞர் குழு வந்தது

அச்சுவேலி, ஓக. 10
யாழ்.மாவட்டத்தில் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களில் தவணை தப்பிய கடன் தொகையை மீளப் பெறுவதற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான அனுமதியை வங்கிகளின் தலைமைப்பீடங்கள் வழங்கியிருக்கின்றன. சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு வசதியாக வங்கிகளின் சட்டத்தரணிகள் குழுக்களும் யாழ்ப்பாணம் வந்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு வகையான அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மத்திய வங்கியின் ஆலோசனைக்கு அமைய யாழ். மாவட்டத்தில் செயற்படும் அரச வங்கிகளும் தனியார் துறை வங்கிகளும் பல்வேறு வகையான கடன் வசதிகளை குறைந்த வட்டியில் இலகு நடைமுறையில் வழங்கி வந்தன.

இந்த வகையில் பயிர்ச் செய்கை நடவடிக்கைக்காக பருவகாலப் பயிர்ச் செய்கைக்கான கடன் வசதி காலபோகம் சிறுபோகம் என்ற வகையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அத்துடன் சிறுதொழில் முயற்சிக்கடன், தொழில்முயற்சிக்கடன், வறுமை ஒழிப்பு வாழ்வாதார முயற்சிக் கடன் பாதிப்புகளுக்கு உள்ளாகியவர்களுக்கு புனர்வாழ்வுக் கடன் என பல்வேறு வகையான கடன் வசதிகளை வழங்கி இருந்தன.

இவ்வாறான கடன் வசதிகளைப் பயன்படுத்தி போரால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்ட மக்கள் பல்வேறு வகையான தொழில் முயற்சிகளையும் அபிவிருத்தி நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டன.

இந்த வகையான கடன்களைப் பெற்ற பலர் உரிய காலப் பகுதியில் கடன் தொகை திருப்பிச் செலுத்துவதற்கு முன்வராத நிலையில் வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் கடன்பெற்ற வாடிக்கையாளர்களைத் தேடி அலைவதோடு கடன் தொகை மீளச் செலுத்துமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கடன்பெற்ற வாடிக்கையாளர்களில் கணிசமான தொகையினர் கடன் தொகையை மீளச் செலுத்தாமை வங்கி மேலிடத்தினால் அவதானிக்கப்பட்டது.

அதனையடுத்து சட்ட நடவடிக்கை மூலம் கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வங்கிகள் சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வசதியாக வங்கிகளின் சட்டத்தரணிகள் குழுக்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளன. சட்டத்தரணிகள் ஊடாக குறித்த நாள் அவகாசத்தில் ''சட்டத்தரணி நோட்டிஸ்'' அனுப்பப்படுவதோடு அதற்கு இணங்காதவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு கள் தாக்கல் செய்யப்படவுள்ளன. சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இடத்து அது தொடர்பாக வங்கிகளுக்கு ஏற்பட்ட செலவினத்தையும் கடன்காரர்களே செலுத்த வேண்டி ஏற்படும் எனக் கூறப்படுகின்றது. (வ-11)

# தரம்- 5 மாணவருக்கு கற்றல் கையேடுகள்

யாழ்ப்பாணம், ஓக.10
தீவக கல்வி வலயத்துக்கு உட்பட்ட தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கற்றல் கையேடு தீவக கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவால் வெளியிடப்பட்டு மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கினூடாக வழங்கப்படுகின்றது.

நலன்விரும்பி ஒருவரது அனுசரணையுடன் வழங்கப்படும் இக்கையேடுகளை கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்கள் அனைவரும் பெற்றுப் பயனடைய முடியும் எனவும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார். (வ-7)

# காசோலை மோசடி பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக.10
10 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவுக்கு இலத்திரனியல் பொருள்களைக் கொள்வனவு செய்து விட்டு காசோலையைக் கொடுத்து மோசடி செய்தமை தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடியில் கொடிகாமம் வீதியில் உள்ள இலத்திரனியல் கடை ஒன்றிலேயே இவ்வாறு இலத்திரனியல் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கொள்வனவு செய்து காசோலையைக் கொடுத்து வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிடாது மோசடி செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கட்டுப் பணத்துக்கே பொருள்களைப் பிறருக்கு விற்பதாகக் கூறி காசோலை கொடுத்து பொருள்களைச் சிறிது சிறிதாகக் கொள்வனவு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

# சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் பிரதேச பிரிவுகளில் நியமனம்

அச்சுவேலி, ஓக.10
சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் பிரதேச செயலர் பிரிவுகளில் சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக கட்டமைப்புகளை முன்னெடுக்கவுள்ளனர்.


சமகாலச் சூழலில் சிறுவர் உரிமை மீறல்கள் மீறப்படுவதோடு துஷ்பிரயோகங்களும் அதிகரித்து வருவதால் சிறுவர் உரிமையையும் பாதுகாப்பையும் மேல்நிலைப்படுத்துவதற்கு வசதியாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் உரிமைகள் மீறல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற செயற்பாடுகள் தொடர்பாக பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவல்களை வழங்கி உதவுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தகவல் கிடைக்கும் இடத்து சிறுவர் பாதுகாப்பு அலுவலர் மேலதிக நடவடிக்கைகயை துரிதகதியில் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் பொதுமக்கள் விழிப்புணர்வோடு ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (வ-11)

# எந்த நேரத்திலும் வரலாம் ஆபத்து



கொழும்புத்துறை வீதியில் விபுலானந்தர் வீதிச் சந்தியில் உள்ள தொலைபேசி மார்க்க இணைப்புக் கம்பம் முறிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன. சில மாதங்களுக்கு முன்னர் வாகனம் ஒன்று மோதியதில் சேதடைந்த இந்தக் கம்பம் எந்நேரமும் முறிந்து விழுந்து பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துமோ என்று மக்கள் அச்சத்துடன் போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். (வ-135)

# மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், ஓக.10
மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சன சமூக முன்பள்ளியின் மெய்வன்மைப் போட்டி நாளை 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தலைவர் அம்பல வாணர் நடராசா தலைமையில் இடம் பெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அவரது பாரியார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக திரு.திருமதி கனகரட்ணம் ஸ்ரீஸ்கந்தராஜா (சுவிஸ்), திரு. திருமதி கனகரட்ணம் பஞ்சரத்தினம் (ஜேர்மன்), திரு.திருமதி சற்குணராஜா பகீரதன் (ஜேர்மன்) ஆகியோரும் கலந்துகொள்வர். (ந-50)

# பிரதேச சபையின் கூட்ட வேளையில் திடீரென பிரவேசித்த ஒப்பந்தகாரர்

## கொடுப்பனவில் இழுபறி நிலையே காரணம்

**அனுமதியும் இன்றி மண்டபத்துக்குள் நுழைந்த ஒப்பந்தகாரர் வேலை செய்ததற்குரிய பணத்தைத் தருமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.**

வலி.தென்மேற்கு, ஓக. 10
ஒப்பந்த வேலைக்குரிய பணத்தை வலி.தென்மேற்குப் பிரதேச சபை வழங்காமல் காலம் கடத்தியதால் பாதிக்கப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் 'அழையா விருந்தாளியாக' கூட்ட மண்டபத்துக்குள் நுழைந்து அங்கிருந்த உறுப்பினர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

அவரது திடீர் பிரவேசம் காரணமாக ஆச்சரியத்துக்குள்ளான உறுப்பினர்கள் அவரை ஒருவாறு சமாளித்து மண்டபத்திலிருந்து வெளியேற்றினர்.

நவாலி வடக்கு, இறக்குமாவத்தை 50 மீற்றர் நீளமான வீதியை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 75 ஆயிரம் ரூபா செலவில் கிரவல் மண் போட்டு புனரமைத்த ஒப்பந்த காரர் ஒரு சில உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய இந்த வீதியோடு இணைந்துள்ள தேற்றா மரத்தடி வீதியையும் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்பு செய்துள்ளார்.

இரு வீதிகளையும் 3 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்ததாகக் கூறும் ஒப்பந்தகாரர் அந்த வேலைக்குரிய பணத்தைத் தருமாறு பிரதேச சபையிடம் கோரி வந்தார். எனினும் கொடுப்பனவை வழங்குவதில் காலதாமதம் இருந்து வருகின்றது.

ஒப்பந்தம் செய்யப்பட்ட இறக்குமாவத்தை வீதிக்குரிய 75 ஆயிரம் ரூபா மட்டும் தான் வழங்க முடியும் என்று தெரிவித்துள்ள உறுப்பினர்கள் இணைந்த வீதி திருத்தியதற்கான பணத்தை வழங்க மறுத்து வருகிறார்கள் என்று கூறப்பட்டது. இதனால் ஒப்பந்தகாரருக்குரிய நிதியை வழங்குவதில் இழுபறி ஏற்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடந்து கொண்டிருக்கும் போது ஊன்றுகோலுடன் தள்ளாடியவாறு எவருடைய அனுமதியும் இன்றி மண்டபத்துக்குள் நுழைந்த ஒப்பந்தகாரர் வேலை செய்ததற்குரிய பணத்தைத் தருமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

தங்க நகைகளை அடைவு வைத்துத்தான் இரு வீதிகளின் புனரமைப்பு வேலைகளையும் தாம் செய்து முடித்ததாகத் தெரிவித்துள்ள ஒப்பந்தக்காரர் தனக்குத் தரவேண்டிய பணத்தைத் தாமதிக்காது தரும்படி கேட்டுக் கொண்டார்.

மண்டபத்துக்குள் நுழைந்த ஒப்பந்தகாரரை உறுப்பினர்கள் ஒருவாறு மண்டபத்தில் இருந்து வெளியேற்றினர்.

இது தொடர்பாக வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

குறித்த ஒப்பந்த வேலையில் நடைமுறைக் கூறு விலைகள் மாற்றமடைந்திருப்பது தொடர்பாக சபை உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருப்பதால் கொடுப்பனவை வழங்குவது தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஆலோசனை கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதாந்தக் கூட்டத்தின் போது அங்கு வந்த ஒப்பந்தகாரர் கொடுப்பனவை உடன் வழங்குமாறு கோரிக்கை முன் வைத்தார் ணத்தெரிவித்தார். (ஒ-14,115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பொலிவுடன் வலையிறவு பாலம் அமைப்பு



புனரமைக்கப்பட்ட வலையிறவுப் பாலம்

மட்டக்களப்பு,ஓக.10

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 115 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு, வலையிறவுப் பாலம் அடுத்த வாரம் திறந்து வைக்கப்படவுள்ளது என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி வதிவிட பொறியியலாளர் கே.பிரேமதாச தெரிவித்தார்.

பூர்த்தியடைந்த பாலத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் வியாழக்கிழமை மாலை நேரில் சென்று பார்வையிட்டனர்.

மட்டக்களப்பு நகரையும் வவுணதீவு பிரதேசத்தையும் இணைக்கும் இந்தப் பாலம் சேதமடைந்தமையால் வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் கடந்த காலங்களில் போக்குவரத்துச் செய் வதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டு வந்தனர். (ச)

# புதையல் தோண்டி மாட்டினர் ஏழு பேர்

மட்டக்களப்பு,ஓக.10

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட ஆசிரியரொருவர் மற்றும் தொல் பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஏழு பேரைக் கொக்கட்டிச்சோலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தாந்தாமலை பிரசேத்துக் குட்பட்ட கொல்லர்மலை பகுதியில் வைத்து வியாழக்கிழமை அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் முனைக்காடு பிரதேசத்தை சேர்ந்த ஆசிரியர் எனவும், ஏனையவர்களில் நால்வர் தொல்பொருள் திணைக்களத்தினை சேர்ந்த பெரும்பான்மையினத்தை சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# யானைகள் அட்டகாசம் ஐந்து குடிசைகள் சேதம்



யானைகளால் சேதமாக்கப்பட்ட குடிசை

களுவாஞ்சிக்குடி,ஓக.10

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வியாழக்கிழமைகாட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் புரிந்துள்ளன.

போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 39 ஆம் கொலணி, செல்வாபுரம், 7ஆம் வட்டாரம் கிராமம் ஆகிய கிராமங்க ளிலேயே காட்டு யானை கள் குழப்பம் விளைவித் துள்ளன.

இந்தக் கிராமங்களில் காட்டு யானைகளினால் 5 குடிசைகள் சேதமாக்கப்பட்டுள்ளன என்று போரதீவுப்பற்று பிரதேச செயலர் என்.வில்வரட்ணம் தெரிவித்தார்.

இந்தக் கிராமங்களில் கடந்த 2ஆம், 5ஆம் திகதிகளிலும் காட்டு யானைகள் குழப்பம் விளைவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-32)

# கிழக்கு மாகாணத்தில் நேற்றும் பெருநாள்

மட்டக்களப்பு,ஓக.10

முஸ்லிம்களின் நோன்புப் பெருநாள் நேற்று வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாணத்தில் பரவலாக அமைதியான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு,காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி, கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது, நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில், சம்மாந்துறை, மாளிகைக்காடு, இறக்காமம்,மூதூர், கிண்ணியா போன்ற பிரதேசங்களில் உள்ள கடற்கரை மைதானங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற திறந்த வெளிகளில் பெருநாள் தொழுகையும் குத்பா பிரசங்கமும் இடம்பெற்றன.

காத்தான்குடி இஸ்லாமிக் சென்டரின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காத்தான்குடி கடற்கரை அன்வர் பள்ளி வாசல் முன்றிலில் நேற்று வெள்ளிக்கிழமை புனித பெருநாள் தொழுகை இடம் பெற்றது.

இந்தத் தொழுகையில் பெரும் திரளான ஆண்கள், பெண்கள் உட்பட பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை இலங்கையில் பல பிரதேசங்களில் பெருநாள் தொழுகை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(ச)



காத்தான்குடி கடற்கரை அன்வர் பள்ளி வாசல் முன்றிலில் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்ற புனித பெருநாள் தொழுகையில் பிரதி அமைச்சர் ஹிஸ்புல் லாஹ்ஹூம் கலந்து கொண்டார்.

# பொலிஸாருக்கு முதலுதவிப் பயிற்சி

களுவாங்சிக்குடி,ஓக.10

களுவாஞ்சிக்குடி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட போக்குவரத்து பொலிஸாருக்கு வியாழக் கிழமை முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டது.

களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, களுவாஞ்சிகுடி, காத்தான்குடி பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 25 பொலிஸாருக்கு முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டது. (ச-32)



# குடிதண்ணீர்த் திட்டம் அக்குறணையில் திறப்பு



களுவாஞ்சிக்குடி,ஓக.10

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அக்குறணை கிராம மக்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட குடிதண்ணீர் திட்ட விநியோகத்துக்கு பிரிட்டனின் ஒக்ஸ்பாம் நிறுவனமும் எஸ்கோ நிறுவனமும் அனுசரணை வழங்கியிருந்தன.

சுமார் 67 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் மூலம் அக்குறணை கிராமத்தைச் சேர்ந்த 61 குடும்பங்களின் வீடுகளுக்கு குழாய் நீர் விநியோக இணைப்பு மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிடப் பிரதிநிதி கோள் ஜென்ஸி, சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் எஸ்.ரகுராம், தொப்பிகல கட்டளைத் தளபதி மேஜர் அமரதுங்க உட்பட பலர் கலந்துகொண்டனர்.(ச-32)

# மக்கள் சேவையில் முன் மாதிரியாக திகழ்கிறது கல்முனை காணி பதிவகம்

## கிழக்கு மாகாண பிரதிப் பதிவாளர் புகழாரம்

அம்பாறை, ஓக. 10

கல்முனை காணிப் பதிவகம் மக்கள் சேவையில் சிறப்புறத் திகழ்வதுடன் கிழக்கில் மட்டுமன்றி தேசிய ரீதியிலும் முன் மாதிரியானதாகத் திகழ் கின்றது.

இவ்வாறு, கிழக்கு மாகாண பிரதிப் பதிவாளர் என்.எம். நயீம் பாராட்டுத் தெரிவித்தார்.

கல்முனை மாவட்ட காணி பதிவக நலன் பேணும் அமையம் நடத்திய நோன்பு திறக்கும் 'இப்தார்' நிகழ்வு காணிப் பதிவக வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த இப்தார் நிகழ்வில் முஸ்லிம்கள் மட்டுமன்றி தமிழ் அன்பர்களும் கலந்து கொண்டு சிறப்பித்திருப்பது மகிழ்வைத் தருகிறது.

சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை இன்றைய கால கட்டத்தின் முக்கிய தேவையாகும்.

அந்த வகையில் இந்த இப்தார் நிகழ்வு தமிழ், முஸ்லிம் நல்லுறவு மேலும் வலுவடைவதற்கும், பரஸ்பரம் நல்லிணக்கத்துக்கும் வழிவகுத்திருக்கின்றது.

சிறந்த சேவைகள் மூலம் கல்முனை காணிப் பதிவகம் கிழக்கில் மட்டுமன்றி அகில இலங்கையிலும் மக்கள் சேவையில் முன் மாதிரியாகத் திகழ்கின்றது.

இந்தப் பதிவகத்துக்கென கல்முனையில் காணி ஒன்றைப் பெற்று நிரந்தர கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கும் முயற்சியை பதிவாளர் ஜமால் முஹம்மத் முன்னெடுத்து வருகின்றார்.

இந்த முயற்சி நிறைவேறுவதற்கு எம்மாலான சகல ஒத்துழைப்பையும் வழங்குவோம்-என்றார். (ச-30)

# வாவியில் புதைந்தது பெக்கோ



காத்தான்குடி,ஓக.10

காத்தான்குடி வாவியில் பெக்கோ இயந்திரமொன்று புதையுண்டது.

பாதை ஒன்றை தள்ளுவதற்காக காத்தான்குடி நகர சபையினால் கொண்டு வரப்பட்ட பெக்கோ இயந்திரமே இவ்வாறு வாவியில் புதையுண்டுள்ளது. படகொன்றைத் தள்ளும் போதே குறித்த கனரக இயந்திரம் புதையுண்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் மேற்கொண்ட தாக்குதலை போர்க்குற்றமாக்க ஐ.தே.க.முயல்கிறது

## கோத்தபாய குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.10

வெலிவேரியவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு பொதுமக்கள் மீது இராணுவம் மேற்கொண்ட தாக்குதலை மிகைப்படுத்தி அதை சர்வதேசப் போர்க்குற்றமாக்க ஐ.தே.க. முயல்கிறது என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றஞ்சாட்டினார்.

வெலிவேரிய நெடுங்கமுவ பிரதேசத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இராணுவம் மேற்கொண்ட தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை தேவையென பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. வலியுறுத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஹேலீஸ் குழுமத்துக்குச் சொந்தமான டிப்ட் புரொடக்ட்ஸ் நிறுவனம், இந்தப் பிரதேசத்தில் கையுறைகள் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றை நடத்திவருகின்றது. அந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுகளால் ரத்துபஸ்வெல பிரதேசத்திலுள்ள குடிதண்ணீர் மாசடைவதற்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த இராணுவம் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தச் சம்பவததை சர்வதேச ரீதியில் விசாரிக்கவேண்டுமென அறிக்கை விடுத்துள்ளமை கண்டிக்கத்தக்கது.

வெலிவேரிய சம்பவத்தில் இராணுவம் நடந்துகொண்ட முறை பற்றி விசாரிக்க இராணுவத் தலைமையகமும், பொலிஸ் திணைக்களமும் தனித்தனியாக குழுக்களை நியமித்துள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டபோது பொலிஸ் மா அதிபர் இலங்ககோன் இராணுவத் தலைமையகத்தின் உதவியைக் கோரியுள்ளார்.

அந்தக் கோரிக்கைக்கு அமைவாகவே இராணுவம் வரவழைக்கப்பட்டது.

எனினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டபோது துரதிர்ஷ்டவசமாக இராணுவம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும். விசாரணையின் முடிவில் குற்றவாளிகளாகக் காணப்படும் நபர்களுக்கு எதிராக பாரபட்சமற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இராணுவத்தினரின் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக முழு இராணுவத்தின் மீதும் களங்கம் கற்பிக்க முடியாது. ஜனாதிபதியின் மீதும், இராணுவத்தின் மீதும் மக்கள் வைத்துள்ள அபிமானத்தைச் சிதைக்க சில சக்திகள் முயன்று



வருகின்றன என்பதை நாம் நன்கறிவோம்.

வெலிவேரிய சம்பவத்துக்கு சர்வதேச விசாரணை தேவை என்று அடம்பிடிப்பதன் மூலம் இராணுவத்தின் மீது போர்க்குற்றத்தைச் சுமத்த முயல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ரத்துபஸ்வெல மக்கள் தங்கள் பிரதேசத்திலுள்ள குடிதண்ணீர் தொழிற்சாலையின் கழிவுகளால் மாசடைந்துள்ளதாகச் சந்தேகப்படுவதில் தவறில்லை. எனினும், அந்தத் தொழிற்சாலையிலிருந்து ஒழுங்கு நடவடிக்கைகளுக்காக பதவிநீக்கம் செய்யப்பட்ட சில ஊழியர்கள் இந்தக் குடிதண்ணீர் பிரச்சினையைப் பூதாகரமாக்கி ஹேலீஸ் நிறுவனமே இந்தப் பிரச்சினைக்குக் காரணமென மக்களைத் திசை திருப்பியிருக்கிறார்கள்.

அந்தப் பிரதேசக் கிணறுகளில் உள்ள நீரின் PH பெறுமானத்தை ஆராய்ந்து கண்டுபிடிக்க நாங்கள் தொழிற்சாலை தொழில்நுட்ப நிறுவனம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, புவியியல் மற்றும் அகழ்வாராய்ச்சிப் பணியகம், மொரட்டுவை மற்றும் களனி பல்கலைக்கழகம் உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்தோம்.

வெலிவேரிய பங்குத்தந்தை வண. பிதா லக்பிரிய நோனிஸ் ஆண்டகையின் தலைமையில் வந்த 35 பிரதேசவாசிகளுடன் நாம் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தோம். எனினும், இந்த இணக்கப்பாட்டுக்குப் பின்பே பிரச்சினை பூதாகரமாக்கப்பட்டது. - என்றார்.(ச-சி)



புனித நோன்புப் பெருநாளையொட்டி நேற்று வெள்ளிக்கிழமை முஸ்லிம்கள் கொழும்பு, காலி முகத்திடலில் தொழுகையில் ஈடுபட்டபோது...

# பதிவு செய்யப்படாத மருந்தகங்களுக்கு மருந்து விநியோகித்தால் அனுமதி ரத்து

கொழும்பு,ஓக.10

பதிவு செய்யப்படாத தனியார் மருந்தகங்களுக்கு மருந்துகளை விநியோகிக்கும் விநியோகஸ்தர்களின் அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்படும் என்று வாசனைத் திரவியங்கள் மற்றும் தேசிய ஔடதங்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இத்தகைய மருந்து விநியோகஸ்தர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருந்து வகைகளின் தரத்தை பேணுவது தொடர்பான பரிந்துரைகளை பின்பற்றத் தவறும் தனியார் மருந்தக உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தேசிய ஔடதங்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.





**மருந்து விநியோகஸ்தர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

தரமான மருந்து வகைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் தனியார் மருந்தகங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு கூறியுள்ளது. (ச)

# 4000 கிராம உத்தியோகத்தர் புதிதாக இணைப்பு

கொழும்பு,ஓக.10

அரச சேவையில் மேலும் 4000 கிராமசேவை உத்தியோகத்தர்களை புதிதாக இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற கிராம உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்தன குறிப்பிட்டார். அதற்கான நேர்முகத் தேர்வை எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதிக்குள் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

# வடபகுதியில் பௌத்தத்தை பரப்ப முயல்வது மா தவறு

## விஜித ஹேரத் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.10

தென்னிலங்கையிலிருந்து மக்களை கொண்டுசென்று வடக்கில் குடியேற்றுவது மா தவறு. அதனைவிட மீள்குடியேற்றப் பகுதிகளில் பௌத்த கலாசாரத்தைப் பரப்ப முயல்வதும் மா தவறு என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி ஆக்கிரமிப்புத் தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. அதற்கெதிராக நாம் குரல்கொடுத்து வரும் நிலையில் அந்த இராணுவ நிர்வாகம் தற்போது வெலிவேரிய வரைக்கும் வந்துவிட்டது. நாடு முற்று முழுதாக இராணுவ நிர்வாகத் துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. வடக்கில் இராணுவ நிர்வாகம் இடம்பெற்று வரும் நிலையில் அங்குள்ள மக்களது காணிகள் அபகரிக்கப்பட்டு தென்னிலங்கையிலிருந்து கொண்டு செல்லப்படும் மக்கள் குடியேற்றப்படுகின்றார்கள்.

இதனை நாம் கடுமையான எதிர்க்கின்றோம். இது மா தவறான செயல். அத்துடன், மீள்குடியேற்றப் பகுதிகளில் இடம்பெறும் பௌத்த கலாசாரத்தைப் பரப்பும் செயற்பாடுகள் அதைவிட மா தவறானது.

பௌத்தத்தை எவர் மீதும் திணிக்குமாறு புத்தர் கூறவில்லை. எனவே, பௌத்தத்தை ஏனைய மக்கள் மீது திணிக்கப்படுவதை உண்மையான பௌத்தர்கள் என்ற வகையில் நான் கடுமையான எதிர்க்கிறேன் - என்றார். (ச-சி)

# பால் மா உற்பத்திகளை பொன்டேரா மீளப்பெறும்





கொழும்பு,ஓக.10

டிசிடி பதார்த்தம் இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்ட பால் மா உற்பத்திகளை சந்தையில் இருந்து மீளப்பெறவுள்ளதாக பொன்டேரா நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பொன்டேரா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

டிசிடி பதார்த்தம் அடங்கியுள்ள இறக்குமதி பால்மா உற்பத்திகளை இலங்கையில் சுகாதார அமைச்சு தடை செய்துள்ளமையை அடுத்தே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின்படி, இறக்குமதி செய்யப்படும் அனைத்து பால்மாக்களும் டிசிடி அற்றவையென உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதனையடுத்து அங்கர் [illegible] பிளஸ், அங்கர் புல் கிறீம் மில்க் பவுடர், மெலிபன் ஹொன பெட் மில்க், டயமண்ட் மில்க் பவுடர் பால்மா வகைகள் சந்தையில் இருந்து மீளப்பெறப்படவுள்ளன.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மற்றொரு பாக் – இந்திய மோதல் உபகண்ட அமைதியைக் குலைக்குமா?

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள 'கறள்' குறையும் வாய்ப்பில்லை. அது நீண்டு, பருத்து மீண்டும் ஒரு பாகிஸ்தான் - இந்தியப் போருக்குத் தீ மூட்டலாம் என்ற நிலையே உருவாகும் என்று கருதப்படுகிறது. அந்த அளவுக்கு, காஷ்மீர் எல்லைக் கோட்டில் அடிக்கடி நடக்கும் சம்பவங்கள் இதனைத் தொட்டுக் காட்டுகின்றன, சுட்டி நிற்கின்றன.

காஷ்மீர் எல்லைக்கோட்டில், இந்தியக் காவலரண் மீது திடீரென, மின்னாமல் முழங்காமல் நடத்தப்பட்ட தாக்குதலில் ஐந்து இந்தியப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

கனரக ஆயுதங்களுடன் சென்ற இருபது பேர் கொண்ட குழு தாக்குதலை நடத்திய பின்னர் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆனால் இது குறித்து தனக்கு எதுவுமே தெரியாது என்று பாகிஸ்தான் அடித்துக் கூறியுள்ளது.

ஆனால், பாகிஸ்தானுக்குத் தெரியாமல், அதனது உடந்தை இல்லாமல் இந்தத் தாக்குதல் நடந்திருக்கச் சாத்தியமில்லை என்கிறது இந்தியா.

இத்தனைக்கும், அடுத்த மாதம் நியூயோர்க்கில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப்பும் சந்தித்து பேச்சுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இச்சந்திப்பு, பரம வைரிகளான இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக் கடிகள் தளர உதவும் என்று எதிர்வு கூறப்பட்டது.

ஆனால் மேற்கூறப்பட்ட சம்பவம், நவாஸ் ஷெரிப் - மண்மோகன் சந்திப்புக் கான வாய்ப்பைக் கேள்விக் குறியாக்கிவிட்டுள்ளது.

நவாஸ் ஷெரிப் பதவியேற்ற பின்னர், எல்லைப் பகுதியில் மீண்டும் இயல்பு நிலைமை உருவான வேளை பார்த்து, எல்லைப் பகுதியில் எந்தவித ஆத்திரமூட்டும் நடவடிக்கையும் இடம்பெறாத நிலையில், ஐந்து இந்தியப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்குப் பிரச்சினையைப் போன்று 60 ஆண்டுகளுக்கு அதிகமாக நீடிக்கும் காஷ்மீர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்படவேண்டும். முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி காஷ்மீர் பாகிஸ்தானுடன் சேரவேண்டுமா அல்லது தனிநாடாக இயங்கவேண்டுமா என்று தீர்மானிக் கப்படவேண்டும் என்று ஐ.நா. தீர்மானம் கோருகிறது.

ஆனால், அறுபது ஆண்டுகள் கடந்தும் இன்னும் அங்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. இரு நாடுகளும் எல்லையில் படைகளைக் குவித்து வைத்துக் கொண்டிருக்கின்றன. காஷ்மீர் முழுவதற்கும் இரு நாடுகளும் உரிமைகோருகின்றன.

காஷ்மீருக்காக 1948இலும் 1965இலும் இந்தியாவும் பாகிஸ்தானும் போர்களை நடத்தியுள்ளன. 1971 இல் இந்திராகாந்தியின் ஆட்சியின் போது இந்தியப் படைகளின் உதவியுடன் கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷ் என்ற பெயரில் தனிநாடாக உருவானது.

அதன் பின்பு 1999இல் இடம்பெற்ற கார்கில்ஸ் போர், முழு அளவிலான போராக உருவாகாவிட்டாலும் இந்திய - பாக். உறவில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

சமகால நிலையில், ஆப்கானிஸ்தானிலுள்ள வெளிநாட்டுப் படைகள் அடுத்த ஆண்டு வெளியேறிவிடும். அமெரிக்கா தலை மையிலான நேட்டோ படைகளுக்கு எதிரான போரில் தலிபான்களும் இஸ்லாமிய தீவிரவாத ஆயுதக்குழுக்களும் இயங்கிவருகின்றன. ஆப்கானில் போர் முடிவுக்கு வரும்போது இந்த ஆயுதக்குழுக்களின் பார்வை இந்தியா பக்கம் திரும்பக்கூடும். யார் அறிவார்.

1972 இன் சிம்ளா ஒப்பந்தம், - இந்திரா – பூட்டோ ஒப்பந்தம், இரு நாடுகளுக்கும் இடையேயான பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறது. ஆனால் அவ்வழி நடக்கப்படவில்லை.

மொத்தத்தில், பாகிஸ்தானுடனான பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காண்பதற்கு, இந்தியா முன்னுரிமை தருவதில் தாமதம் காட்டாது செயற்படுவதே சமயோசிதமாக அமையும் எனலாம்.

# தமிழர்களின் சகல உரிமைகளிலும் சர்வதேச சட்டங்கள் புறக்கணிப்பு

## நாடாளுமன்றில் சரவணபவன் எம்.பி.

ஒரே தேசம், ஒரே மக்கள் என்ற ஜனாதிபதியின் கோஷம் உண்மையானால் தமிழரின் நில உரிமை, தொழில் உரிமை என்பன அங்கீகரிக்கப்படவேண்டும்.''

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.



நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற, வடக்கு, கிழக்கில் தற்போது இடம்பெற்றுவரும் காணி சுவீகரிப்புகள், சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

30 ஆண்டு கால போர்ச்சூழல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் இடம்பெற்ற முதலாவது வெற்றி விழாவின்போது ஜனாதிபதி ஒரே தேசம், ஒரே மக்கள் எனப் பிரகடனம் செய்தார். நாமும் உரிமையுடன் கூடிய இந்த நாட்டின் அபிவிருத்தியிலும், முன்னேற்றத்திலும் பங்குகொள்ளும் இத்தேசத்தின் மக்களாகவே வாழ ஆசைப்படுகிறோம். இலங்கையின் பாரம்பரிய இனங்களில் ஒன்று என்ற அடிப்படையில் அந்த உரிமையும் அது தொடர்பான கடமையும் எங்களுக்கும் உண்டு.

ஆனால், தமிழ் மக்களாகிய நாம் ஒரே தேசத்தின் ஒரே மக்களாக நடத்தப்படுகிறோமா என்பதை இச்சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களும் நியாயபூர்வமான முறையில் தங்கள் மனச்சாட்சியைத் தொட்டுக் கேட்கும்படி விநயமாகக் கேட்டுக்கொள்கிறோம். ஒவ்வொரு மனிதனதும் குடிவாழும் உரிமை என்பது அடிப்படையானது. அவன் தனது சொந்த மண்ணில் – தான் பிறந்து – வளர்ந்து – ஓடியாடிய மண்ணிலேயே குடிவாழ விரும்புகின்றான். அவனது பாரம்பரிய வரலாறும் அடிப்படை அபிலாஷைகளும் அந்த மண்ணுடனேயே சங்கமமாகிக் கிடக்கின்றன. இதற்கு வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் விதிவிலக்கானவர்கள் அல்லர் என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

இலங்கை அரசமைப்பின் 14(ஏ), உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 13(1), சர்வதேச குடியியல் அரசியல் உரிமைகள் வரையறையின் 12(1), இடப்பெயர்வின் சர்வதேச வழிகாட்டி விதிகள் என்பன நடமாடும் சுதந்திரத்தையும், விரும்பும் இடத்தில் குடியேறும் உரிமையையும் மிகத் தெளிவாகவே வலியுறுத்தியுள்ளன.

அதேவேளை, மீளக் குடியமர விரும்புபவர்களை அவர்களின் பூரண சம்மதத்துடன் சகல வசதிகளுடனும் குடியேற்றுவது அரசின் கடமை. இதனை அவ்விதிகள் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியுள்ளன.

ஆனால், இலங்கையில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்தச் சர்வதேச நியமங்கள் புறமொதுக்கப்படுகின்றன என்பதை நான் இச்சபையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இலங்கை அரசு 2012 ஓகஸ்ட் மாதத்துடன் இடம்பெயர்ந்தோருக்கான மீள்குடியேற்றம் நிறைவு செய்யப்பட்டு விட்டதாக அறிவித்தது. ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் சபையிலும் மீள்குடியேற்றம் நிறைவு செய்யப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இன்றுவரை யாழ். மாவட்டத்தில் வலிகாமம் வடக்கிலும், திருமலை மாவட்டத்தில் சம்பூர், குருமலையூற்று ஆகிய பகுதிகளிலும், மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம், சிலாவத்துறை ஆகிய பகுதிகளிலும், முல்லைத்தீவில் கேப்பாபிலவு, கோம்பாவில் ஆகிய பகுதிகளிலும் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை.

வலி.வடக்கில் பொதுமக்களுக்குச் சொந்தமான 6,381 ஏக்கர் காணிகள் அரசால் சுவீகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, பலாலி விமானநிலைய விஸ்தரிப்பு, படைமுகாம்கள் போன்றவற்றின் தேவைகளுக்காகவே இக்காணிகள் சுவீகரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 30 ஆயிரம் பேர் மீள்குடியமர முடியாமல் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் பெரும் அவலங்களைத் தாங்கி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இப்பிரதேசம் வடபகுதியின் உணவுத் தேவையின் பெரும்பகுதியைப் பூர்த்தி செய்த வளமான – செம்மண்ணைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். இங்கு மிளகாய், வெங்காயம், புகையிலை, வெற்றிலை, முந்திரிகை எனப் பல்வேறு பயிர்களும் பெருமளவில் விளைவிக்கப்பட்டன.

இவ்வாறே இந்தப் பிரதேசத்தின் மயிலிட்டி, இலங்கையின் முக்கிய மீன்பிடி மையங்களில் ஒன்றாகும். போருக்கு முன்னைய காலங்களில் கொழும்பு புறக்கோட்டை மீன் சந்தைக்கு ஒவ்வொரு இரவும் பலநூறு மீன் லொறிகள் மயிலிட்டியிலிருந்து பறக்கும். மயிலிட்டி மீன் வந்தால்தான் புறக்கோட்டைச் சந்தை விழிக்கும் எனக் கூறும் அளவுக்கு பெருமளவு நல்ல மீன்களை மயிலிட்டி அனுப்பி வைக்கும்.

மீன், உப உணவுப் பொருள்கள் என உள்ளூர் உற்பத்திகளின் ஒரு முக்கிய மையமாக விளங்கிய வலிகாமம் வடக்கு, இலங்கையின் உற்பத்திப் பொருளாதாரத்தில் ஒரு காத்திரமான பங்கை வகித்தது. ஆனால், இன்று இந்தப் பிரதேசம் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு அந்தப் பகுதியைச் சொந்த இடமாகக் கொண்ட மக்கள் கால்வைக்கக்கூட அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நில சுவீகரிப்பின் காரணமாக உள்ள உற்பத்திப் பொருளாதாரத்தில்நலிவுஏற்படும். அதேவேளை, அந்த மக்கள் தங்கள் தொழில்களை இழந்து வாழ்வாதாரத்துக்கு வழியின்றி அல்லற்படுகின்றனர்.

இவ்வாறே திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் பிரதேசத்தில் அங்கு பரம்பரையாகக் குடியிருந்த 4,000 குடும்பங்கள் தமது சொந்தக் காணிகளில் குடியேற அனுமதிக்கப்படவில்லை. அவர்களை நல்ல குடிதண்ணீர் கூடப் பெறமுடியாத வேறு இடங்களில் குடியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து தொடர்ந்தும் அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குரிய நிவாரணங்கள் கூட இரக்கமற்ற முறையில் நிறுத்தப்பட்டன.

கேப்பாபிலவு விவசாயம், மீன்பிடி என்பவற்றைத் தொழிலாகக் கொண்ட மக்கள் வாழும் பகுதியாகும். பாதுகாப்பு. அபிவிருத்தி ஆகிய தேவைகளுக்காகவே தமிழ் மக்களின் நிலங்கள் சுவீகரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால், இத்தகைய ஆக்கிரமிப்புகளின் மூலம் உள்ளூர் உற்பத்தியில் பெரும் நலிவு ஏற்படுகின்றது. இது பொருளாதார வளர்ச்சிக்கு விரோதமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

கடந்த வருடம் வெளியிடப்பட்ட அரச புள்ளிவிவரம் ஒன்றில், முழு நாடும் 8 சதவீதம் பொருளாதார அபிவிருத்தி அடையும்போது வடக்கு, கிழக்கு 23 சதவீதம் அபிவிருத்தி அடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி மீள் உருவாக்கம் செய்யப்படும் போது அபிவிருத்தி வீதம் அதிகமாகக் காட்டும் என்பதை இங்கு நாம் அவதானிக்கவேண்டும்.

லீசிங் மூலமாக வாகன விற்பனை கொடிகட்டிப் பறக்கிறது. ஆனால், தொழில் வீழ்ச்சி காரணமாக அவற்றைப் பறிகொடுக்கும் நிலை ஏற்படுகிறது. வெளியூர் வர்த்தகர்களின் ஆதிக்கம் காரணமாக உள்ளூர் வர்த்தகர்கள் வங்கிக் கடன்கள் கட்டமுடியாமல் தொழில்களையே இழுத்து மூடும் நிலை உருவாகிறது.

எனவே, வடக்கு, கிழக்கு மக்களைத் தமது சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்க மறுப்பது மனித உரிமை மீறல் என்ற மட்டத்துடன் நின்றுவிடவில்லை. ஒட்டுமொத்த தேசிய உற்பத்திக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதை இந்தச் சபை புரிந்துகொள்ளவேண்டும். ஒரே தேசம், ஒரே மக்கள் என்ற கோஷம் உண்மையானால், எமது நில உரிமை, தொழில் உரிமை என்பன அங்கீகரிக்கப்படவேண்டும். அப்படியான ஒரே நிலையில் மட்டுமே இந்தத் தேசத்தின் அபிவிருத்தியில் தமிழ் மக்களும் பங்காளிகளாக ஆக முடியும் – என்று தெரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு அவசிய தேவை

அ.அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ''பாரதிபுரம்'' நெல் விளையும் இடமாகும். இது தென்னை மரங்களும், கமுகு மரங்களும் நிறைந்த பகுதியாகும். இயற்கை அழகு மிக்க இந்தப் பிரதேசத்தில் சித்தி விநாயகர் ஆலயம் , பால விநாயகர் ஆலயம், சிவன் ஆலயம் என்பன காணப்படுகின்றன. 492 குடும்பங்களைக் கொண்ட பாரதிபுரத்தில் 38 முஸ்லிம் குடும்பங்களும் தமிழ் மக்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற போர் கிழக்கில் குறிப்பாக மூதூர் பிரதேசத்தை கடுமையாக சிதைத்துள்ளது. மூதூர் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை அடியோடு அழித்ததுடன் அந்த மக்களில் பலர் தம் உறவுகளையும் இழந்து தவிக்க வைத்துள்ளது.

மூதூர் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு கிராமமும் போரின் வடுக்களை இன்று வரை சுமந்து கொண்டுதான் இருக்கின்றன. அதற்கு நல்ல ஒரு உதாரணமாக பாரதிபுரம் கிராமம் காணப்படுகின்றது. இந்தக் கிராமத்தில் கணவனை இழந்த 132 விதவைகள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களாக உள்ளனர்.

போரின் போது கணவனைஇழந்த இளம் பெண்கள் தான் கூடுதலாக இந்தக் கிராமத்தில் விதவைகளாக இருக்கின்றனர். பெண் தலைமைத்துவமாக உள்ள இந்தக் குடும்பங்கள் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு தினமும் முகம் கொடுத்து வாழ்கின்றனர். திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் கூடுதலாக விதவைகள் வாழ்ந்து வரும் கிராமமாக் பாரதிபுரம் விளங்குகிறது.

இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வரும் பெண் தலைமைத்துமாகக் கொண்ட குடும்பங்களுக்கு பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான எந்த வித உதவிகளும் அரசினால் இது வரை வழங்கப்படவில்லை.

பாரதிபுரம் கிராமத்தில் போர் விளைவித்த அழிவுகளின் சின்னங்களாக கணவனை இழந்த பெண்கள் காணப்படுகின்றனர். அவர்களின் துயர வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக புனிதா என்ற பெண்ணின் வாழ்க்கையை இங்கு எடுத்துக் கொள்ளலாம்.

1985 ஆம் ஆண்டு புனிதாவுக்கு 11 வயது இருக்கும். பாரதிபுரத்தில் ஆரம்பக் கல்வியை கற்று வந்த நிலையில் 1985 ஆம் ஆண்டு ஆனி மாதம் நான்காம் திகதி அவளுடைய வாழ்க்கையில் மாணவப் பருவத்தில் தாய், தந்தையரை இழந்தாள். அன்றைய நாள் தான் தனது அப்பாவையும், அம்மாவையும் இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு வீட்டுக்குள் அவர்களை போட்டு எரித்ததாக குறிப்பிடும் அவள், அதன் பின்தான் எகெட் நிறுவனத்தினால் மூதூரில் பராமரிக்கப்பட்டு வந்ததாகவும், அவர்கள் தன்னை உயர்தரம் வரை படிக்க வைத்ததாகவும் தெரிவித்தாள். தனது வாழ்க்கையின் வெளிச்சமாக திருமண வாழ்க்கை 1996 ஆம் ஆண்டு ஆரம்பமானது. மகிழ்ச்சியாக கணவனுடன் வாழ்ந்து வந்தேன். கணவனின் முயற்சியால் பாரதிபுரத்தில் காணி வாங்கி வீடு கட்டி,கடையும் அமைத்து இரு பிள்ளைகளுடன் நிம்மதியாக வாழ்ந்து வந்த நிலையில் மீண்டும் 2006 ஆம் ஆண்டு எனது வாழ்க்கை இருள் பரவத் தொடங்கியது.

மூதூர் பிரதேசத்தில் 2006 ஆம் ஆண்டு போர் ஆரம்பமானபோது தமிழ் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறத் தொடங்கினர். 21.04.2006 அன்று பாரதிபுரத்தில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற போரில் ஊர்காவற்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நடைபெற்றதை அடுத்து எமது கிராமத்துக்கு அருகிலுள்ள தெஹிவத்தை என்ற சிங்கள கிராமத்திலிருந்து சிங்கள மக்கள் சிலர் இராணுவத்தின் உதவியுடன் எமது கிராமத்துக்கு வந்து பல வீடுகளைதீயிட்டு எரித்தனர். ஊர்காவற்படையினரும் இணைந்து பெண்களைத் தாக்கினர். அடித்து உதைத்தனர். அன்று எனது கணவன் எங்களை பாதுகாப்பதற்காக எங்களுடன் இருந்த போது அரைக்காற் சட்டை அணிந்த ஊர்காவற்படைச் சிப்பாய் ஒருவர் எனது கணவரைக் கூப்பிட்டு உங்களுடன் கதைக்க வேண்டும் வெளியே வாருங்கள் என அழைத்துச் சென்று கதைத்துக் கொண்டு இருந்தபோது, மற்றுமொரு ஊர்காவற்படை வீரர் தூரத்திலிருந்து ஓடி வந்து எனது கணவரைச் சுட்டுக் கொன்றார் என புனிதா தெரிவித்தாள்.

கணவனை இழந்ததன் பின் கிராமத்தை விட்டு வெளியேறி வெருகல், வாழைத் தோட்டத்திலுள்ள எனது மாமி வீட்டில் வசித்து வந்தேன். மூதூர் பிரதேசத்தில் 2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட போரினால் மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறத் தொடங்கிய போது, நானும் எனது பிள்ளைகளுடன் வெளியேறி கதிரவெளி, பால் சேனை முகாமில் இருந்து 2006 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் முகாமை விட்டு வெளியேறி ஆரையம்பதியில் சில நாள்கள் இருந்த நான், அதன் பின் 2007 ஆம் ஆண்டு மட்டக்களப்பிலுள்ள தன்னாமுனை புனிதவளனார் விடுதிக்குச் சென்று நானும், மகனும் இருந்தோம். மகளை கல்முனையிலுள்ள கல்லூரி ஒன்றில் சேர்த்துப் படிப்பித்தேன். நீண்டகாலம் அங்கிருந்த நாங்கள் 2011 ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறி மீண்டும் எமது பிறந்த இடமான பாரதிபுரத்தில் குடியேறினோம்.



நிறுவனம் ஒன்றின் மூலம் கடன் பெற்று மாமாவின் உதவியுடன் சிறிய சில்லறைக்கடை ஒன்றை ஆரம்பித்து நடத்தி வருகின்றேன். இன்று எனக்கு 41 வயது ஆகின்றது. விதவை என்றதும் சமூகம் எம்மை சந்தேகப் பார்வையுடன் தான் பார்க்கின்றது. போதிய வருமானமின்றி பிள்ளைகளை வளர்ப்பதில் கஷ்டப்படுகின்றேன். மூதூர் பிரதேச செயலகத்தால் எங்களுக்கு எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை. 2006 ஆம் ஆண்டு போரினால் பாதிக்கப் பட்டவர்களுக்கான நஷ்ட ஈடு கூட எங்களுக்கு வழங்கப்படவில்லை என கண்ணீர் வடித்தாள் அவள். தனக்கு சமுர்த்தி நிவாரணம் உதவு தொகை கூட இதுவரை வழங்கப் படவில்லை எனக் குறிப்பிடும் புனிதா, என்னைப் போன்றுதான் மேலும் பல விதவைகள் இங்கு வாழ்கின்றார்கள் என கவலை தெரிவிக்கின்றாள்.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் நிலை இவ்வாறு இருக்க, பாரதிபுரத்தின் அபிவிருத்தியைப் பார்க்கின்ற போது வீதிகள் கூட ஒழுங்கான முறையில் புனரமைக்கப்படாத நிலைமையே காணப்படுகின்றது. குறிப்பாக பாரதிபுரத்திலுள்ள பாடசாலை வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் மழைக்காலத்தில் மழைநீர், வெள்ளம் பாடசால்லக்குள் உட்செல்வதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த விடயம் பற்றி அரச அதிகாரிகளுக்கு அறிவித்தும் இது வரை அவர்கள் இந்த விடயத்தில் கவனம் எடுக்கவில்லை என அந்தப் பகுதி மக்கள் கவலையடைகின்றனர். இது போன்று பல்வேறு பிரச்சினைகள் இந்தக் கிராமத்தில் காணப்படுகின்ற நிலையில் கணவனை இழந்த பெண்களுக்கு இனியாவது உதவி புரிவதற்கு எமது தமிழ் அரசியல்வாதிகளாவது முன்வருவார்களா ?

---

## அகலவை 1 இல்

# செவ்வாயில் "கியூரியாசிட்டி"

செவ்வாய்க் கிரகத்தில் கியூரியாசிட்டி ஆளில்லா ஆராய்ச்சி வண்டி தரையிறங்கி கடந்த செவ்வாய்கிழமையுடன் ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது.


செவ்வாயில் விஞ்ஞானிகள் முன் கூட்டியே கணித்துவைத்த இடத்துக்கு வெறும் ஒரு மைல் தூரம் தள்ளி இந்த ஆராய்ச்சி வாகனம் தரையிறங்கியது.

பூமியிலிருந்து 57 கோடி மீற்றர்கள் தொலைவில் உள்ள ஒரு கிரகத்தில் இந்த அளவுக்கு துல்லியமாக தரையிறக்க முடிந்தது என்பதே ஒரு பெரிய சாதனைதான்.

155 கிலோமீற்றர் அகலம் கொண்ட ஒரு பள்ளத்தில் கியூரியாசிட்டி இறங்கியது. இந்தப் பள்ளத்தை ஒட்டி ஐந்து கிலோமீற்றர் உயரமுடைய ஒரு மலையும் உள்ளது.

இந்த மலையின் அடிவாரத்தில் படுக்கை போன்ற நில அமைப்பு இருப்பது ஒரு காலத்தில் இங்கே கணிசமான அளவில் நீர் இருந்ததைக் குறிப்புணர்த்துகிறது.

ஒரு காலத்தில் நுண்ணுயிர்கள் வாழ்வதற்குப் பொருத்தமான சுற்றுச்சூழல் செவ்வாயில் இருந்திருக்குமா என்று கண்டறியும் நோக்குடன் இந்த இடத்தில் கியூரியாசிட்டி தரையிறக்கப்பட்டது.



வாகனம் தரையிறங்கிய நேரத்தில் கிளம்பிய புழுதியை வைத்தே சில முக்கிய தகவல்கள் கிடைத்தன.

அந்தப் புழுதியில் ஒட்டிய கூழாங் கற்களாலான பாறைத் துண்டுகள் இருந்தன.

அந்தக் கூழாங்கற்களைப் பின்னர் துல்லியமாக ஆராய்ந்தபோது அவை நீரோட்டத்தால் முனைகள் மழுங்கி வழவழப்பாக ஆகி இருந்தமை தெரியவந்தது.

பூமியில் ஆற்றங்கரைகளில் காணப் படுகின்ற கூழாங்கற்கள் போலவே இவையும் இருந்தன.

கியூரியாசிட்டி செவ்வாயின் மேற் பரப்பில் உலவிய இந்த ஓராண்டு காலத்தில் மேலும் பல விடயங்கள் நமக்குத் தெரியவந்துள்ளன.

ஒரு காலத்தில் செவ்வாயின் மேற் பரப்பில் மட்டும் நீர் ஓடியிருக்க வில்லை நிலத்தடி நீர் ஓட்டமும் இருந்துள்ளது என கியூரியாசிட்டி [illegible] [illegible] என்றாலே அங்கு உயிரினங்கள் இருந்துள்ளன என்று கூற இயலாது. உயிர்கள் இருந்தன என்பதை உறுதிசெய்ய வேண்டுமானால், அமினோ அமிலங்கள் போன்ற உயிரணுக் கட்டமைப்புகளின் சுவடு அங்கே கண்டறியப்பட வேண்டும். ஆனால் அப்படியான எதனையும் கியூரியாசிட்டி இதுவரை கண்டறியவில்லை. இந்த வாகனம் மெதுவாக மலையில் ஏறி மேலதிக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும்போது பல விவரங்கள் கண்டுபிடிக்கப் படும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

## அளவெட்டி மக்கள் விசனம்

அளவெட்டி, ஓக.10

அளவெட்டி மேற்கு கொட்டுப் பனை இந்து மயானம் மற்றும் கள்ளுத் தவறணை அமைந்துள்ள இடத்துக்கு அருகில் உள்ள காணியில் கழிவுகள் கொட்டப் படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அந்தப் பகுதியில் உள்ள பள்ளத்தில் பொலித்தீன் பைகள், குப்பை கூளங்கள் கொட்டப்பட்ட நிலையில் குவிந்து காணப்படுகின்றன. இதனால் சூழல் மாசடைவதுடன் சுகாதாரச் சீர்கேடுகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அத்துடன் மழைகாலம் ஆரம்பிப்பதால் இந்தக் கழிவுகளுடன் மழை நீரும் சேர்ந்து நுளம்பின் பெருக்கம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

ஏற்கனவே இந்த இடத்தில் கழிவுகளைக் கொட்டிச் சேகரிக்க வேண்டாம் எனவும், அவற்றை உரிய முறையில் சேகரித்து அகற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்தது.

எனினும் மீண்டும் இந்தப் பகுதி குப்பை கூளங்களால் நிரம்பி வழிவது ஏன் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-36)

# திறந்து வைக்கப்பட்டது அம்பாள் ச.ச.நிலையம்

பனிப்புலம் அம்பாள் சன சமூக நிலையத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அண்மையில் திறந்து வைத்தார். அம்பாள் சனசமூக நிலைய தலைவர் சி.திருச்செந்தூரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சிறப்பு விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் நாகரஞ்சினி ஐங் கரன், சனசமூக அபிவிருத்தி அலுவலர் ஹேமா சிவசோதி, உறுப்பினர் க.சபாநாயகம், கிராம அதிகாரி எஸ். முருகவேள், சிவஸ்ரீ பே.இன்பராசா குருக்கள், சமூக செயற்பாட்டாளர் த.பாலகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.(ந-41)

# விவசாயிகள் சம்மேளன பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.10

சங்கானை மேற்கு, தெற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கானை விழிசுட்டி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் இ.வஜீகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொல்புரம் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சா.குகனேசன் மற்றும் சங்கானை தெற்கு,மேற்கு கிராம அலுவலர்கள் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெறவுள்ளதாக செயலாளர் வே.சிவலிங்கம் தெரிவித்துள்ளார். (ந-29)

## சமய சந்நிதிகளில்

சிலாபம் ஸ்ரீ முன்னேஸ்வரம் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 24 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.

இடம்பெற்று வரும் பெரும் திருவிழா வரிசையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை விநாயகர் உற்சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை சுப்பிரமணியர் உற்சவமும் இடம்பெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை தீ மிதிப்பும், நாயன்மார் திருவிழாவும் இடம் பெறும். எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வேட்டைத் திருவிழா வும், எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திரு விழாவும், மறுநாள் செவ்வாய்க் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும். (ந)

★ ★ ★

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயப் பெருந் திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 19 ஆம் திகதி திங் கட்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ந)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

சிலாபம் ஸ்ரீ முன்னேஸ்வரம் ஆலயத்தின் சித்திரா கார மஹாரத வெள்ளோட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது(ந-14)


அருட்பணி A.லோறன்ஸ்
குருத்துவ வாழ்வில்
25 ஆண்டுகள்
மகிழ்வான வெள்ளி விழா வாழ்த்துக்கள்
இறைமகன் இயேசுவின்
உன்னத குருவாய்
ஐஐந்து ஆண்டுகள்
திராட்சைத் தோட்டமதில்
நலமருளும் வரம் கொண்டு
நற்பணிகள் புரிகின்ற
அருட்தந்தை லோறன்ஸை
அன்போடு வாழ்த்துகின்றோம்.
திரு. திருமதி தேவராஜா பிறேமறஞ்சினி
குடும்பம் (லண்டன்)
இல.28, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
[30330] [45.3.6]


வாழ்த்துகின்றோம் (10.08.2013)
25ஆவது குருத்துவ
வெள்ளி விழாவைக்
கொண்டாடும்
அருட்தந்தை
ம.பெ.ஞானரத்தினம்
அடிகளாரை இந்நன்நாளில்
மேன்மேலும் உங்கள்
பணி சிறக்க பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
செல்வநாயகம்
குடும்பத்தினர்
(பண்டத்தரிப்பு)
Best Wishes


குருத்துவ வெள்ளி விழா வாழ்த்துக்கள்
10.08.2013
அருட் தந்தை
ம.பெ. ஞானரத்தினம்
இறை பணிவாழ்வில்...
இருபத்தைந்தாவது வருட நிறைவில்-எம்
இதயத்தின் ஆழத்திலிருந்து
இனிய நல்வாழ்த்துக்கள்
உண்மை, நேர்மை, சேவையுடன்
இறையன்பு கொண்ட உம் வாழ்வில்.....
எத்தனை துன்பங்கள் எத்தனை சவால்கள்...
எத்தனை இழப்புக்கள்- இதயத்தில்
எத்தனை காயங்கள்....?
அத்தனையும் தாண்டி, ஆண்டவன் யேசுவின்...
முட்கள் நிறைந்த பாதையில் பயணித்து...
இறைபணியாற்றுகின்ற உம்மை
இறைமகன் யேசு தம் உள்ளங்கையில் வைத்து
உவகையுடன் காக்க மனமுருகி....
இறையாசி வேண்டி
வாழ்த்துகின்றோம்.
ம.பேடினன் குடும்பம்
பிரான்ஸ்
Best Wishes

நூல் வெளியீட்டு விழா அழைப்பு

| | |
|---|---|
| நூலின் பெயர் | - தென்னிந்தியத் திருத்தலங்கள் பதினாறு |
| ஆக்கம் | - பொ.சிவப்பிரகாசம் அவர்கள் (ஓய்வு பெற்ற பிரதம பொதுச்சுகாதார பரிசோதகர்) |
| இடம் | - ஸ்ரீ வதரிபீட விநாயகர் ஆலய மண்டபம். கொழும்புத்துறை மேற்கு. யாழ்ப்பாணம். |
| காலம் | - 11.08.2013 ஞாயிற்றுக்கிழமை. |
| நேரம் | - பி.ப.3-4.15 மங்கள இசை |

பி.ப.4.15 நிகழ்வுகள் ஆரம்பம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ஆலய நிர்வாகம்
ஸ்ரீ வதரிபீட விநாயகர் தேவஸ்தானம்
கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்.
(30182)(3,6)

பரத நிருத்திய அரங்கப் பிரவேசம்
ஜேர்மனைச் சேர்ந்த வாணி நர்த்தனாலய அதிபர்
கலாநிதி திருமதி வானதி தேசிங்குராஜா வின்
மாணவியும் எமது புதல்வியுமான செல்வி
விதுஷா விஜயகுமாரன் அவர்களின்
பரத நிருத்திய அரங்கப் பிரவேசம்
கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்
அவர்களின் நெறியாள்கையில் இடம் பெறவுள்ளது.
காலம்: 11.08.2013 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மாலை 3.00 மணி
இடம் : இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி அரங்கு,
இல 63, யாழ்.இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
பிரதம விருந்தினர்:
பேராசிரியர் நா.சண்முகலிங்கன்
(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்:
திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளீதரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
கௌரவ விருந்தினர்:
கலாபூஷணம்
திருமதி பத்மினி செல்வேந்திரகுமார்
(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் -நடனம்)
அணிசேர் கலைஞர்கள்:
கலாகீர்த்தி ஸ்ரீமதி
சாந்தினி சிவநேசன் -நட்டுவாங்கம்
முதுதத்துவமாணி
திரு.தவநாதன் றொபேர்ட் -பாட்டு
இசைக்கலைமணி
திரு. ஞா.கண்ணதாசன் -மிருதங்கம்
இசைஞானச்சுடர்
திரு. அ.ஜெயராமன் -வயலின்
அத்தருணம் தாங்கள் குடும்ப உறவுகள் சகிதம் வருகை தந்து செல்வியை வாழ்த்தி, ஆசிகள் வழங்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை
இனிதே நாடும்:
குடும்பத்தினர்.



அருள்மிகு கைதடி
இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி தேவஸ்தானம்
"முத்துக்குமரனின் முத்துச்சரம்"
(இசை மாலை)
வெளியீட்டு விழா அழைப்பு
காலம் : 10.08.2013 சனிக்கிழமை நேரம் : இரவு 8.30 மணி
இடம் : கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி ஆலய முன்றில்
கிளிநொச்சி ராகநதி இசைக்குழுவின்
இன்னிசை நிகழ்வும் இடம்பெறும்


அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ஆலய நற்பணிக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் இன்னுமொரு கல்வி வலயம்

## மீண்டும் விடுக்கப்பட்டது வேண்டுகோள்

கிளிநொச்சி, ஓக.10
கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னுமொரு கல்வி வலயத்தை உருவாக்குமாறு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கல்வியாளர்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் இணைந்து மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுமார் 1260 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில் 95 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் 40 ஆயிரத்து 245 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 206 பேர் வசித்து வருகின்றனர்.

தற்போது கிளிநொச்சி கல்வி வலயத்தினால் 107 பாடசாலைகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பாடசாலைகளில் 30 ஆயிரம் வரையான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 1700 ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர்.


இலங்கைத்தீவிலேயே அதிக பாடசாலைகளை கொண்ட கல்வி வலயமாக கிளிநொச்சிக் கல்வி வலயம் விளங்குகிறது.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னுமொரு கல்வி வலயத்தை உருவாக்க வேண்டுமென்ற கருத்து நீண்ட காலமாகவே நிலவி வருகின்றது.

அதிக பாடசாலைகளைக் கொண்டிருப்பதன் காரணமாக நிர்வாக ரீதியாகவும் பல சிக்கல்கள் எழுகின்றன. இதனால் இன்னொரு கல்வி வலயம் உருவாக்கப்படும் போது மாணவர்களின் கல்வி நிலையில் பெரும் அபிவிருத்தியைக் காண முடியுமென்பது பலரதும் எதிர்பார்ப்பாகும்.

பூநகரி, கரைச்சி மேற்கு ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளை உள்ளடக்கியதாக அக்கராயனில் மேலுமொரு கல்வி வலயத்தை உருவாக்க வேண்டும் என்பதே நீண்ட காலக் கோரிக்கையாகவும் இருந்து வருகிறது.

இதேவேளை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாததால் அது தற்போது சிங்கள மகாவித்தியாலயக் கட்டடத்தில் பெரும் இட நெருக்கடியுடன் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால்கள் வட்டக்கச்சிப் பகுதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (க-18)

## புனரமைக்கப்படாத புதுக்காடு கிராம வீதிகள்



கிளிநொச்சி, ஓக. 10
கிளிநொச்சி மாவட்டம் இராமநாதபுரம் பகுதியிலுள்ள புதுக்காடு கிராமத்தின் வீதிகள் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

மேலும் இந்தக் கிராமம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை காலமும் புனரமைப்பு வேலைகள் எவையும் மேற்கொள்ளப்படாமையினால் மக்கள் வீதிகளில் பயணிக்க முடியாத அளவுக்கு வீதிகள் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

எனவே இந்தக் கிராமத்திலுள்ள வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## புலனாய்வாளர் எனக் கூறி வீடொன்றில் கொள்ளை

### 7 பேருக்கு மேற்பட்ட கும்பல் கைவரிசை

அக்கராயன், ஓக.10
புலனாய்வாளர்கள் எனக் கூறிய சிலர் அக்கராயன் காட்டம்மன் கோயில் பகுதியில் கொள்ளையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இரவு 9.30 மணியளவில் 7 பேருக்கும் மேற்பட்ட கும்பல் ஒன்று சுயதொழிலில் ஈடுபடும் கீதன் என்பவரின் வீட்டுக்குச் சென்று தம்மைப் புலனாய்வுத் துறையினர் எனக் கூறிக்கொண்டு இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டது.

முதலில் வீட்டின் உரிமையாளரின் கைகளைப் பின்புறமாகக் கட்டிய இவர்கள் அவரது மனைவியையும் பிள்ளையையும் வீட்டுக்கு வெளியில் இருக்கச் சொல்லிவிட்டு வீட்டைச் சல்லடை போட்டுத் தேடி நான்கு பவுண் நகை, ஒரு தொகைப் பணம், அந்த வீட்டுப் பெண்மணி அணிந்திருந்த தோடு ஆகியவற்றைக் கொள்ளையிட்டனர்.

கொள்ளையர்கள் சக்தி கூடிய ரோச் லைற்றினால் வீட்டு உரிமையாளரின் முகத்தின் மீது அடிக்கடி ஒளி பாய்ச்சியதாகவும், மது போதையுடன் தமிழில் நன்றாக உரையாடியதாகவும் பொலிஸாரின் விசாரணையின்போது அந்தக் குடும்பத்தவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை அக்கராயன் அணைக்கட்டு வீதியில் உள்ள வீடு ஒன்றில் திருடர்கள் புகுந்த போது வீட்டார் எழுப்பிய அவலக் குரலையடுத்து அவர்கள் அங்கிருந்து ஓடிவிட்டனர். அக்கராயன் பிரதேசத்தில் திருடர்களின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## தேவை புதிய நிர்வாகிகள்

அக்கராயன், ஓக. 10
கிளிநொச்சி அக்கராயன் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தைப் புதிதாகத் தெரிவு செய்யுமாறு இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இந்தச் சங்கத்தின் தலைவர், உப தலைவர் ஆகியோர் செயலூக்கம் இல்லாது இருப்பதன் காரணமாக இது செயலிழந்த நிலையில் இருப்பதாகவும் நிர்வாக தெரிவுகள் இரண்டு ஆண்டு களுக்கு முன்னர் இடம்பெற்ற போதிலும் கடந்த ஒரு வருடமாக கூட்டம் எதுவும் நடத்தப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சங்கத்தின் வரவு-செலவு தொடர்பான விவரங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்துவதில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே சங்கத்தின் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்யுமாறு கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலரிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மாவட்டக் காரியாலயம் மன்னாரில் திறந்து வைப்பு



மன்னார், ஓக.10
மன்னாரில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மாவட்டக் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.


தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதன் சேவைகளை விஸ்தரிக்கும் பொருட்டு இந்த அலுவலகம் நேற்று முன்தினம் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தில் அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய இதனைத் திறந்து வைத்தார்.

இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அரச அதிபரின் அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல், பிரதேச செயலர்கள், திணைக்கள அதிகாரிகள், தனியார் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்கிடையே இடம்பெறும் போக்குவரத்து சேவைகளில் உள்ள குறைபாடுகள் மற்றும் அவற்றை நிவர்த்திக்கும் வழிமுறைகள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது. மேலும் [illegible]லில் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் வட மாகாண அமைப்புச் செயலாளர் ஆர்.ஆர்.ஹபறகம, பொறியியலாளர் நிரஞ்சி பெரேரா, நிறைவேற்றுப் பணிப்பாளர் அலோகா [illegible] ஆகியோரும் [illegible] கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## கள் விற்பனை நிலையத்தை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை




அக்கராயன், ஓக. 10
கிளிநொச்சி இராமநாதபுரம் மக்களின் நெருக்கமான வாழ்விடங்கள் அமைந்துள்ள பகுதியில் இயங்கிவரும் கள் விற்பனை நிலையத்தை அங்கிருந்து அகற்றுமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், அரைக்கும் ஆலைகள் என்பன அமைந்துள்ளதால் மக்கள் அதிகளவில் கூடும் இந்த இடத்தில் கள் விற்பனை நிலையம் அமைந்திருப்பதன் காரணமாக தினமும் சண்டைகள், தகராறுகள் இடம்பெறுவதைக் காண முடிகின்றது. இதனால் இங்கு வசிக்கும் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே இந்த விற்பனை நிலையத்தை வேறொரு ஒதுக்குபுறமான இடத்தில் அமைக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின்போது யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் வண.பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் புனிதரின் திருச்சொரூப ஆசீரை வழங்குகிறார். (வ-51)

# தண்டனையை அனுபவிக்காது தப்பியோடியவருக்குச் சிறை

யாழ்ப்பாணம், ஓக. 10


மது போதையில் இடையூறு விளைவித்த குற்றத்துக்காக வைத்தியசாலையில் துப்புரவுப் பணியில் ஈடுபட உத்தரவிடப்பட்ட நபர் அதனைச் செய்யாது தப்பியோடினார். பிடி யாணை பிறப்பிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட அவருக்கு 3 வாரங்கள் சிறைத் தண்டனை விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர். எஸ்.மகேந்திர ராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அல்லைப்பிட்டியைச் சேர்ந்த பரமேஸ்வரன் தேவகுமார் என்பவர் மதுபோதையில் பொது இடத்தில் இடையூறு விளை வித்தமைக்காக நீதிமன்றால் கடந்த மாத இறுதி வாரத்தில் தண்டிக்கப்பட்டார். அவரை ஊர்காவற்றுறை வைத்தியசா லையில் 2 வாரங்கள் துப்புரவுப் பணியில் ஈடுபடுமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

முதல் நாள் மட்டும் பணியில் ஈடுபட்ட தேவகுமார் பின்னர் வைத்தியசாலைப் பக்கமே வரவில்லை. அது தொடர்பில் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. கிராம அலுவலரால் குறித்த நபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அதன் போதே அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (வ-4)

# பட்டப்படிப்பு கற்கைக்கான பொது உளச்சார்புப் பரீட்சை

தென்மராட்சி, ஓக.10



தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி பட்டப்படிப்புக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பொது உளச் சார்புப் பரீட்சை நடைபெறவுள்ளது. இதில் சித்தியடைபவர்கள் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம் அல்லது ரஜரட்ட பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடையவர்கள் என்று இந்தப் பரீட்சையை நடத்தும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கான மிகக் குறைந்த தகைமைகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் வெளியிடப்பட்ட இலங்கையிலுள்ள பல் கலைக்கழகங்களின் பட்டப் படிப்புக் கற்கை நெறிகளுக்கான அனுமதிக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சை ஆங்கில மொழி மூலம் நடைபெறவுள்ளது. விண்ணப்பங்களை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பரீட்சை மற்றும் கல்விப்பகுதி ரஜ ரட்ட பல்கலைக்கழகம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்று அதன் பதிவாளர் தெரிவித்துள்ளார். (வ-4)

# பூநகரிக் கிராமங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

அக்கராயன், ஓக. 10



கிளிநொச்சி மாவட்ட பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல கிராமங்களில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளது. ஆலங்கேணி, நல்லூர், பள்ளிக்குடா, நாச்சிக்குடா, வலைப்பாடு, வாடியடி உட்படப் பல கிராமங்கள் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருகின்றன. ஜூன்- ஜூலை ஆகிய மாதங்களில் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுவது வழமையாகும். இதற்கு பூநகரிப் பிரதேசத்தின் பெருமளவு நிலப்பரப்பு உவராக மாறியதால் இங்குள்ள நன்னீர்க் கிணறுகள் உவர் நீர்க் கிணறுகளாக மாறியுள்ளமையே காரண மாகும். இதனால் குடிதண்ணீர் தேடி பூநகரிப் பகுதி கிராமங்களில் வசிக்கும் மக்கள் அலைந்து திரிவதைக் காணக் கூடியதாக உள்ளது. இதேவேளை பூநகரிப் பிரதேச சபையினர் இங்கு நிலவும் குடிதண்ணீர் நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் தண்ணீர் பவுசர்கள் மூலமாக குடிதண்ணீரை விநியோகித்து வருகின்றனர். பிரதேச சபைத் தவிசாளர் இதில் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது.

இருந்த போதிலும் இங்கு குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுவதால் உதவி அமைப்புகளும் இதற்கு உதவுவதற்கு முன்வரவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

# வளர்மதியின் 50 ஆவது ஆண்டு விழா

வலி.தென்மேற்கு, ஓக. 10

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தினதும், சனசமூக நிலையத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று காலை, மாலை என இரு நிகழ்வுகளாக விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத் தலைவரும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பொறியியலாளருமான இ.சிவசங்கர் தலைமையில் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக வேலாயுதபிள்ளை மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை மகப்பேற்று வைத்திய நிபுணர் கு.சுரேஸ்குமார் மற்றும் திருமதி சுரேஸ்குமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

யாழ். பல்கலைக்கழக மக் கள் வங்கிக் கிளை முகாமையாளரும் வளர்மதி நிறைவாழ்வகத் தலைவருமான ஆ.சத் தியமூர்த்தி தலைமையில் வேலாயுதபிள்ளை மண்ட பத்தில் மாலை 2.30 மணிக்கு நடைபெறும் நிகழ்வுக்கு நிறைவேற்று அலுவலர் (நோர்வே) சி.சுரேஸ் தம்பதியர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

(வ-115)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**நாளை**

ஆடி-26 ஞாயிற்றுக்கிழமை 11.08.2013
திதி: பஞ்சமி பி.இ. 05.01வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ. 02.02 வரை
சுபநேரம்: 09.04 - 10.34 வரை
இராகுகாலம்: 04.34 - 06.04 வரை

**மேடம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**இடபம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிடைக்கும்.

**மிதுனம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றி அடைவீர் கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படு வீர்கள். வீண் பதற்றம், அலைச் சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**கடகம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்கப்பாருங்கள்.

**சிங்கம்:** ஒரே நாளில் முக்கியமான பல வேலைகளை பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். உறவினர், நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கன்னி:** யாரையும் தாக்கிப்பேச வேண்டாம். அரசாங்க விடயம் தாமதமாகி முடியும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** எண்ணம்போல் செயற்பட வேண்டும்மென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினை களுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**மகரம்:** சாதாரணமாகப் பேசப்போய் சண்டையில் முடியும். நெருங்கிய வரிடம் உங்களின் மனக்குறைகளை சொல்லி ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**கும்பம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரசு காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 1 | | 6 | | | |
| 2 | 8 | | 7 | | 4 | 9 | | 1 |
| 1 | 3 | 6 | | | | | | |
| | | 8 | 3 | 7 | 2 | | | |
| | | | | | | | | |
| | | | 6 | 5 | 9 | 1 | | |
| | | | | | | 5 | 3 | 6 |
| 5 | | 1 | 9 | | 3 | | 8 | 2 |
| | | | 4 | | 5 | | | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 7 | 9 | 4 | 3 | 8 | 5 | 1 |
| 4 | 1 | 5 | 7 | 8 | 6 | 3 | 2 | 9 |
| 3 | 8 | 9 | 5 | 1 | 2 | 7 | 6 | 4 |
| 2 | 6 | 4 | 8 | 5 | 7 | 9 | 1 | 3 |
| 8 | 7 | 3 | 6 | 9 | 1 | 5 | 4 | 2 |
| 9 | 5 | 1 | 2 | 3 | 4 | 6 | 7 | 8 |
| 5 | 3 | 6 | 4 | 2 | 8 | 1 | 9 | 7 |
| 7 | 4 | 8 | 1 | 6 | 9 | 2 | 3 | 5 |
| 1 | 9 | 2 | 3 | 7 | 5 | 4 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலக் கலைவிழா

யாழ்ப்பாணம்,ஓக.10

சங்கானை 'வண்ணத்துப்பூச்சி' சர்வதேசப் பாடசாலையின் ஆங்கிலக் கலைவிழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மாவடி ஞான வைரவர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஆசியுரைகளை சின்மயா மிஷன் ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமிகளும், அருட்தந்தை அன்ரொய் மரியனும் நிகழ்த்துவர்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் வே.அருந்தவராசா கலந்துகொள்வார். (ந)

# வருடந்தோறும் 56 ஆயிரம் குற்றச் செயல் முறைப்பாடுகள்

### பொலிஸ் தலைமையகம் தகவல்

கொழும்பு,ஓக.10

இலங்கையில் வருடாந்தம் கொலை, வன்புணர்வு, கொள்ளை போன்ற கடும் குற்றச் செயல்கள் தொடர்பில் 56 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பல்வேறு வழிமுறைகளை பின்பற்றி வருடாந்தம் மக்களிடம் இருந்து 8 முதல் 9 பில்லியன் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டு வருகின்றது என்று பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

சமூகத்தில் ஒழுக்கம் சீர்குலைந்து போயுள்ளதால், இவ்வாறு குற்றச் செயல்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு முழுவதும் பெயர் பெற்ற 43 ஆயிரத்து 723 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 56 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குற்றச்செயல்களில் இந்த நபர்களே ஈடுபட்டு வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டு மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக விசேட பொலிஸ் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் பொது மக்களைப் பங்கு பெறச் செய்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.- என்றார். (ச)

# ...ர்மதி முன்னேற்றக்கழகமும் சனசமூக நிலையமும்

# ...ழாச் சிறப்புமலர் - 1963 - 2013

...கழ்ச்சிகள்

...ழகத் தலைவர்)
...மார் அவர்கள்
...ஸ்தாபக அங்கத்தவர்)
...தாபக அங்கத்தவர்)
...ஸ்தாபக அங்கத்தவர்)

...தி (நிறைவாழ்வகத் தலைவர்)
... அவர்கள்
...ர் (U.K)
...K)
...ல் (A.U)
...கழ்வுகள்
...கள்
...ள்
...வெளியீடு
... தலைமையில் கவியரங்கம்
...கழ்வு
...விலடி
... வயலின் சோலா

### ...ந்தவர் வாழ்த்து

...யில் ஆலவிருட்சமாக வளர்ந்து ...ஸ்தாபக அங்கத்தவன் என்பதில் ...ளயாடுவதற்கும், வாசிப்பதற்கும் ...ன்று பல கிளைகள் விட்டு பல்கிப் ...ப் புகழும் கழகமாக இருப்பதும் ...ன். வளர்மதி வளர்பிறை போல்

...பரநாதன், ஸ்தாபக அங்கத்தவர்

### ...ப் மேலும் வளரட்டும்

...முருகனின் பேரருளாலும் கழக அங்கத்த...ின் பேருதவிகள் மூலமும் கழகம் நிமிர்ந்து ...செயற்பாடுகள் பல துறைசார் குழுக்கள் ...க்கப்பட்டுள்ளன. இதனால் கழக செயற்...ன. பொன்விழா ஆண்டில் எமது கழகம் ...ங்கியுள்ளது. வளர்மதியின் வளர்ச்சி மற்று... என்பதனை கூறி வளர்மதி மேன்மேலும் ...ண்டும் எனக் கேட்டு வளர்மதித் தாயை

இ. சிவசங்கர், கழகத் தலைவர்

### ...நாள் பணிகளாற்றி வளர்க.

...மையிலிருந்துதான் வளர்த்தெடுக்கின்றன. ...ின் முகங்களாகும். மற்றவர் பார்க்கவும், ... சுவைதான். இதனால் தான் ஆன்மீகமும் ... விழிப்படையச் செய்கின்றன. அவற்றின் ...ங்கள்.

...நவது கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் ... ஆகும். அரை நூற்றாண்டுகளாக ஊரை ...ரிகள் பலவும் மெச்சத்தக்க பெருமகிழ்ச்சிக் ...சிப்பும் மானுடத்துக்கு இன்றியமையாதது. ...வும் அறிவுப் பண்பாடாகவும் வளர்ப்பதில் ...ிவரும் பணிகள் மகத்தானவை.

... எங்கள் கொக்குவில் கிராமத்தை வளர்த்து ...று ஆண்டுகள் வளர்ந்து வலிமைபெற ...ன்றேன்.

...தியுரைஞர், வளர்மதி முன்னேற்றக்கழகம்.
... மா.சின்னத்தம்பி, யாழ்.பல்கலைக்கழகம்.

### வாழ்த்துச் செய்தி

மக்களுக்குச் சேவையாற்றவென பல்வேறுபட்ட நிறுவனங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலே காணப்பட்டாலும், கிராமம் தோறும் மிக நீண்ட காலமாக மக்கள் நலனோன்புப் பணிகளைச் செய்பவை சனசமூக நிலையங்கள் ஆகும். அவற்றின் பணிகள் சந்ததி சந்ததியாகக் கைமாற்றப்பட்டுத் தொடர்ந்தும் நடைபெறுவதை நாம் காணலாம். மேற்படி சனசமூக நிலையம் கடந்த ஐம்பது வருடங்களாக பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளது.

இத்தகைய சிறப்பான மெச்சுதற்குரிய பணிகளை ஆற்றி வந்துள்ள வளர்மதி சனசமூக நிலையம் மற்றும் முன்னேற்றக் கழகத்தினைக் கடந்த ஐம்பது வருடங்களாக நிர்வகித்து வந்துள்ள நிர்வாக உறுப்பினர்கள் பெரிதும் பாராட்டத்தக்கவர்கள். இவர்களின் அயராத உழைப்பினால் தான் மேற்படி கழகம் மக்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்று விளங்குகின்றது. ஆகவே கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும், சனசமூக நிலையமும் கடந்தகால அனுபவங்களுடன் எதிர்காலத்திலும் மிகவும் அர்த்தமுள்ள செயற்பாடுகளில் ஈடுபட்டு நன்மதிப்பும் பாராட்டும் பெற வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

பா.செந்தில்நந்தனன்,பிரதேச செயலகம்,நல்லூர்.

### பிரதம விருந்தினரின் வாழ்த்து

கொக்குவில் கிராமத்தில் தனிச் சிறப்போடு திகழ்ந்துவரும் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் ஐம்பதாவது ஆண்டை நிறைவு செய்யும் இவ்வேளையில் வாழ்த்துச் செய்தி வழங்கும் வாய்ப்புப் பெற்றதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வளர்மதி அன்னையின் வளர்ச்சியினை சில ஆண்டுகளாகத் தான் நான் அறிவேன். இருப்பினும் அது ஆற்றும் சேவைகள் பலவற்றைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். வளர்மதியின் சேவைகள் அனைத்தும் மக்களைச் சென்றடையும் வண்ணம் அதனை நடைமுறைப்படுத்தி வரும் நிர்வாகத்தினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இச்சேவைகள் இத்துடன் நின்றுவிடாது அடுத்த தலைமுறையும் இன்னும் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்காக அனைவரது ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டும் எனக் கேட்டு எனது வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

Dr.கு.சுரேஷ்குமார்,கழக ஆர்வலர்.

### பிரதம விருந்தினர் வாழ்த்துச் செய்தி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் பொன்விழா நிகழ்வானது 10.08.2013 அன்று நடைபெறுவதையிட்டு பெரும் மனமகிழ்வடைகின்றேன். சமூக சேவையில் தன்னை முன்னிறுத்தி தேவைகள் இருக்குமிடமெல்லாம் தேடிச் சென்று அவர்கள் துயர் துடைத்துவரும் இக்கழகத்திற்கு வளம் உள்ளோரெல்லாம் கை கொடுத்துதவிட வேண்டும். இளைஞர்களின் பெரும் பங்களிப்புடன் இயங்கும் கழகமானது மேன் மேலும் வளர்ந்துயர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

சி. சுரேஷ் (நோர்வே),கழக ஆர்வலர்.

### வாழ்த்த வாரீர்

மதி ஒன்று பிறை ஐந்து கண்டு
பொன்விழா காணும் இந்நாள்
எமக்கெல்லாம் பொன்னாள்
அந்நாளை அனைவரும்
ஆனந்தமாக இணைந்து
வாழ்த்தி மகிழ்ந்திடுவோம் - வாரீர்.

சி. செ. செல்வராசா
தலைவர்,பொன்விழா குழு

### பணி தொடர வாழ்த்துக்கள்

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் இன்று தனது பொன்விழாவைக் கொண்டாடுவதையிட்டு எனது மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இக் கழகமானது நூலகமொன்றை அமைத்து நடத்தி வருவதுடன் உள்ளூர் வெளிநாடு வாழ் அன்பர்களின் உதவியுடன் முன்பள்ளி யொன்றையும் அமைத்து சிறார்களுக்கு கணினி, ஆங்கிலம் போன்ற கல்வி கற்பித்தலிலும் ஈடுபட்டு வருகின்றது. கடந்த காலங்களில் இங்கு நிலவிய இக்கட்டான சூழ் நிலையிலும் தமது பணிகளைத் தொடர்கின்றமை கழக உறுப்பினர்களின் விடாமுயற்சியையும் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகின்றது. இந்த வகையில் அவர்களின் பணி மெச்சத்தக்கதும் பாராட்டுக்குரியதுமாகும்.

வளர்மதிக் கழகத்தின் செயற்பாடுகள் விரிவடைந்து மேலும் பலர் பயன் பெறும் வகையில் அமைய எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சு.குணரத்தினம், வாழ்நாள் பேராசிரியர்.

### வாழ்த்துச் செய்தி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தினர் தமது ஐம்பது ஆண்டுகாலத் தொடர்சேவையை நினைவு கூருமுகமாகப் பொன்விழா மலர் ஒன்று வெளியிடுவது அறிந்து மனமகிழ்வெய்துகிறேன். இக் கழக அங்கத்தவர்களிடையே வேற்றுமையில் ஒற்றுமை கண்டு ஒன்று கூடிப் பயன்தரு செயற்பாடுகளில் ஈடுபடும் பண்பை வளர்த்தெடுப்பதில் வெற்றி கண்டுள்ளார்கள் என்பதை கழகத்தினது ஐம்பதாண்டு கால முன்நோக்கிய வளர்ச்சியிலிருந்து கண்டுகொள்ளலாம்.

இக் கழகத்தினர் பல்வேறுபட்ட பொதுநலப் பணிகளில் ஈடுபட்டு வருவதை யான் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக நன்கு அறிந்துள்ளேன். கழகத்தினர் சிறுவர்களுக்கான முன்பள்ளியொன்றைச் சிறந்த முறையில் நடத்தி அவர்களுக்கு இளம் பராயத்திலேயே நற்பண்புகளையும் நற்பழக்க வழக்கங்களையும் சொல்லிக் கொடுத்தும் ஆங்கில அறிவு, கணினியறிவு, இசை நடனப் பயிற்சி, சித்திரக் கலைப் பயிற்சி போன்றவற்றை அளித்தும் அவர வருக்குக் கைவரக் கூடிய துறைகளில் அவர்களை ஊக்குவித்தும் எமது வருங்கால சந்ததி அறிவும் ஒழுக்கமும் பண்பும் நிறைந்ததொன்றாக அமையப் பணியாற்றுகின்றனர். இவ்வாறு மக்கள் சேவையே மகேசன் சேவையெனப் பணியாற்றும் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தினரது ஐம்பது வருட காலப் பொது நலப்பணிகள் பாராட்டிப் போற்றுதற்குரியவை இக் கழகத்தினர் தமது சேவையை மேலும் விரிவுபடுத்தி நற்பணிகள் பல புரிந்து எமது சமூகத் திற்கு ஒரு விடிவெள்ளியாகத் திகழவேண்டு மெனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

பேராசிரியர், இ.குமாரவடிவேல்

### நூற்றாண்டு காண வாழ்த்துக்கள்

''கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்'' அதன் பெயருக்கேற்ப, பௌதீக அடிப்படையிலும், செயற்பாட்டு ரீதியாகவும், பரிமாணத்திலும், பரம்பலிலும் ஆல்போல் வளர்ந்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

"வான் மதிக்குண்டு வளர்வும் தேய்வும்
வானுயர் வளர்மதிக்கோ வளர்வன்றி மற்றதேது"

இது என்றென்றும் வளரும் என்பது என் அவாவும், வேண்டுதலும், அசையாத நம்பிக்கையுமாகும்.

விளையாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட இக் கழகம் இன்று வினை பல பண்ணிப்படர்ந்து பணிசெய்து பொன்விழாக் கண்டு நிற்கின்றது. இவள் உயர்ந்து வைரவிழா, நூற்றாண்டு விழாக்கள் பல காண வாழ்த்துகின்றேன்.

க. பழனிவேற்பிள்ளை, முன்னாள் அதிபர்.

### வளர்மதியை வாழ்த்துகின்றேன் கிராமத்துக்கோர் முன்பள்ளி....

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஆன்றோர் வாக்குப்போல் இன்றைய நவீனத்துவ உலகத்தில் கூட்டுக் குடும்பங்கள் குலைந்த நிலையில் தனிக்குடும்ப மொன்றுக்கு முன்பள்ளியின் முக்கியத்துவத்தை உணர்ந்த சமூக ஆர்வலர்களின் முயற்சியே முன்பள்ளிகளின் தோற்றமும் வளர்ச்சியு மெனலாம். இந்த வகையில் வளர்மதி எதிர்காலத்தில் கல்வியில் செழிப்பும் செம்மையும் பெற்ற சமூக உருவாக்கத்திற்கு அடித்தளமிடும் முன்பள்ளிச் செயற்பாட்டை கடந்த மூன்று தசாப்த காலங்களாக முன்னெடுத்துச் செல்வதோடு, எதிர்காலத்திற்கு பொருத்தப்பாடுடைய பிரஜைகளாக சிறார்களை வளர்த்தெடுக்கும் முயற்சியாக ஆங்கிலம், கணினி போன்ற கற்றலுக்கு முக்கியம் கொடுத்து செயற்பட்டு வருகிறார்கள்.

அந்தவகையில் 1980/1981 காலத்தில் யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான மாணவர்களாக இணைந்து கொண்ட எனது அன்புக்குரிய மாணவர்கள் புலம்பெயர்ந்து ஐக்கிய இராச்சியம் (U.K)வாழ்ந்தாலும் தமது தாய் நாட்டை மறவாது வளர்மதியினூடாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பங்காற்றி வருவது பாராட்டுக்குரியது. பொன்விழா சிறப்பாக அமையவும் கல்விப் பணியும் மக்கள் சேவையும் சிறந்து ஓங்கி வளரவும் வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் க.கந்தசாமி
பௌதீகவியல்துறை,யாழ். பல்கலைக்கழகம்.

### வாழ்த்துச் செய்தி

கொக்குவில் கிழக்கில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் மாத்தனை கந்தனின் ஆலயத்திற்கு அருகே அமைந்துள்ள வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூக நிலையத்தின் பொன்விழாவை யொட்டி வாழ்த்துச் செய்தியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

1992ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தம் காரணமாக எனது குடும்பம் தெல்லிப்பழையிலிருந்து இடம் பெயர்ந்து வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையத்திற்கு அருகில் வசித்து வருகின்ற பாக்கியம் மாத்தனை முருகனின் அருளால் கிடைத்துள்ளது என்பது மிகையாகாது. சமூகப் பணியே இலட்சியமாகக் கருத்தில் கொண்டு இயங்கும் இக்கழகம் மேன் மேலும் வளர்ச்சியடைந்து கிராமத்திற்கும் மக்களுக்கும் சிறப்புடன் சேவையாற்ற வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

நா.தவநாதன்
செயலாளர்,துர்க்கை அம்மன் ஆலயம்,தெல்லிப்பழை.
கழக ஆலோசகர்.

### கொக்குவில் இந்துவின் ஆசிகள்....

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும், சனசமூக நிலையமும் இணைந்து தமது ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவைப் பொன்விழாவாகக் கொண்டாடு வதையிட்டு மிகுந்த மகிழ்வெய்துகின்றேன். எந்த நோக்கை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதோ அத்தனை இலக்குகளையும் முறையாகச் செயற்படுத்தி அரை நூற்றாண்டு வளர்ச்சிப் பாதையில் புதியதோர் அத்தியாயத்துள் பிரவேசித்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். இந்த வளர்ச்சிப் போக்கிற்காகத் தடையின்றி உழைத்த நிர்வாக உறுப்பினர்களையும், ஏனைய உறுப்பினர்களையும் உண்மையில் பாராட்டாமல் இருக்க முடியாது. அயராத முயற்சியும் அர்ப்பணிப்பு மிக்க சமூகக் கட்டமைப்பும் மிகுந்த பலமாக இருந்துள்ளது. சமூக நல்லுறவிற்கும், ஒற்றுமைக்கும், கல்வி, திறன்சார் விருத்திக்கும் மைய நிலையங்களாக விளங்கும் வளர்மதி என்றும் வளர்ந்து உயர இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வெய்துகின்றேன்.

வே.ஞானகாந்தன் (அதிபர்), கொக்குவில் இந்துக் கல்லூரி.

### வாழ்த்து

வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் ஓர் இணையமைப்பாக 2002ஆம் ஆண்டிலிருந்து வளர்மதி நிறைவாழ்வகமானது கழகத்தின் ஒரு சமூக சேவைப்பிரிவாக இயங்கி வருகின்றது. 1963ஆம் ஆண்டில் ஒரு விளையாட்டுக் கழகமாக ஆரம்பித்த வளர்மதி சமூகத்துடன் ஒன்றித்து அதன் தேவையினை அறிந்து பணியாற்றிவருகிறது.

சிறுவர் கல்வியை பிரதானமான இலக்காகக் கொண்டு அவர்களின் எதிர்கால சிறப்பான வாழ்விற்கு அத்திபாரம் இடும் பணியைச் செயற்படுத்தி வருகின்றது. பின் தங்கிய கிராமத்து முன்பள்ளிகளை உரும்பிராய் கல்வி வளர்ச்சி நிதியத்துடன் இணைந்து நிர்வகிப்பதுடன் ஆசிரியர் களுக்கான வேதனத்தையும் வழங்கி வருகின்றனர். பொன்விழாக் காணும் இவ்வேளையில் மேலும் பல்லாண்டுகள் பல் துறைசார் சேவைகளை ஆற்ற சமூக ஆசியும் ஆதரவும் வேண்டிக் கொள்கின்றேன்.

ஆ.சத்தியமூர்த்தி
தலைவர், வளர்மதி நிறைவாழ்வகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மிகச் சொற்பொழிவு

வடமராட்சி, ஓக.10

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய பெருந்திருவிழாவை ஒட்டி, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தினமும் காலை 10.30 மணிக்கு நடைபெற்றுவரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று சனிக் கிழமை 'ஆன்மிகம் காட்டும் அறிவியல்' என்னும் தலைப்பில் சைவப் புலவர் செ.பரமேஸ்வரனும் நாளை ஞாயிற்றுக்கிழமை 'உதித்த னன் உலகம் உய்ய' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக பேராசிரியர் மா.வேதநாதனும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள். (ந-8)

**நீரிழிவு நோயாளர்களுக்கு மிகச் சிறந்த நிவாரணிகள் பக்க விளைவுகள் அற்றது**

★ சிறு குறிஞ்சா தேயிலை
★ சிறு குறிஞ்சா பவுடர்
★ நீரிழிவு அரிசிமா
(குரக்கன் குறிஞ்சா கலந்தது)
★ 2 D COLA
★ D COLA (Sugar Free)

இவற்றைப் பாவித்து பதினைந்து நாள்களில் கட்டுப்படுத்துவ துடன் குருதியில் குளுக்கோஸ், கொலஸ்ரோலை குறைக்கும். மருத்துவ மாணவர்களின் ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளன. பக்க விளைவுகள் அற்ற மூலிகை.

★ B.B.G Hair oil தலைமயிர் உதிர்வதையும், இளநரையையும் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான கூந்தலை வளர்க்கும்.

தொடர்பு: க. பாலசுப்பிரமணியம்
Bio Tech 131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.
021 222 0156, 021 459 0907 (31227)(6.3)

**அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி இந்தியா**

மேற்படி பல்கலைக்கழக இணைப்பாளர் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளார். கற்கை நெறிகளுக்காக விண்ணப்பித்தவர்கள் புதிதாக விண்ணப்பிக்க விரும்புவோர் மற்றும் கற்கை நெறிகள் தொடர்பான பூரண விளக்கங்களைப் பெறவிரும்புவோர் சந்திக்கலாம்.

இடம்: திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்
பலாலி வீதி திருநெல்வேலி வடக்கு
(திருநெல்வேலி சந்தி பெற்றோல் நிலைய வடக்குப் பக்கமுள்ள முதலாவது ஒழுங்கை)
காலம்: 11.08.2013 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 3.30 - 5.30

தொடர்பு: 077 656 5258, 077 386 7458 (31220)(6.3)

## சம்பூர்ண இராமாயணம்

வடமராட்சி, ஓக.10

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் முன்றிலில் இன்று சனிக் கிழமை இரவு 9.30 மணிக்கு சம்பூர்ண இராமாயணம் என்னும் புராண இதிகாச நாடகம் மேடையேறவுள்ளது. இந்த நாடகத்தை அண்ணாவியார் வி.வி. கார்த்திகேசுவின் நெறியாள்கையில் மாதனை மாகாளி இளைஞர் மன்றத்தினர் வழங்குகின்றார்கள். (ந-8)

## சந்நிதியில் காலைத் திருவிழா

வடமராட்சி, ஓக.10

பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவில் 5ஆம் திருவிழா இன்று சனிக் கிழமை நடைபெறுகின்றது.

இன்று தொடக்கம் காலைத் திருவிழா ஆரம்பமாகின்றது. தீர்த்தத் திருவிழா வரை இரவுத் திருவிழாவுடன் காலைத் திருவிழாவும் இடம்பெறும். (ந-8)

**Engineers, Auto CAD Draught Person உடன் தேவை**

யாழ்ப்பாணத்தில் பொறியியல் அலுவலகத்தில் பணியாற்றுவதற்கு Engineers Auto CAD Draught Persons உடன் தேவை. (c/...)(3.6)
விண்ணப்பப் படிவங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்
Email: ksunth@gmail.com
Environment Engineering Consultants (Pvt) Ltd.
No. 05, Council Lane, Dehiwala
0777 890 593

**IELTS** A1 B1 B2
Knowledge Universe Sri Lanka
Spoken English -Fast Track Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம். (c/11083)(3.6)
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre



அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ் விழாவில் விருந்தினர்கள் ஆசிரியர்களால் வரவேற்கப்படுவதைக் காணலாம். (ஒ-7)

### வடக்கு, கிழக்கு

## கிராம சேவையாளருக்கு 649 பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஓக.10

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 649 கிராம சேவையாளர் பதவிக்கு வெற்றிடங்கள் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுவதற்கு ஆயிரத்து 998 பேர் கிராம சேவையாளர்களாகத் தேவைப் படும் நிலையில் தற்போது ஆயிரத்து 349 பேர் மட்டுமே கிராம சேவையாளர்களாக கடமையில் உள்ளனர். இந்த நிலையில் 649 பேருக்குரிய பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன. இதேவேளை வட மாகாணத்தில் 920 பேர் கிராம சேவையாளர்களாக கடமையாற்றத் தேவைப்படும் நிலையில் 626 பேர் மட்டுமே கிராம சேவையாளர்களாக உள்ளனர். இதில் 294 பேருக்கு பதவி வெற்றிடங்கள் உள்ளன.

இதற்கமைவாக யாழ். மாவட்டத்தில் 144 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 30 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 40 பேருக்கும், கிளி நொச்சி மாவட்டத்தில் 40 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 40 பேருக்கும் என கிராம சேவையாளர்களுக்கான பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ந-14-22)

## மண்டைதீவு சித்திவிநாயகருக்கு நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக.10

மண்டைதீவு-திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயப் பெருந் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

**சாவகச்சேரி நகராட்சி மன்றம்**
**நகராட்சி மன்றத்திற்கு சொந்தமான கடைகளின் குத்தகையாளர்களுக்கான அறிவித்தல்.**

சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்கு சொந்தமான குத்தகைக்கு வழங்கப்பட்ட பல கடைகள் யுத்த சூழ்நிலையைப் பயன்படுத்தி கைமாறப்பட்டுள்ளதென்பதை நகராட்சி மன்றம் தெளிவாக உணர்ந்து கொள்கின்றது. அக்கடைகளை தற்போது கைமாறப்பட்டுள்ள வர்த்தகர்களுக்கு மீள ஒப்பந்தம் செய்து குத்தகைக்கு வழங்குவதற்கும் நகராட்சி மன்றத்தில் 14.06.2013 இல் நடைபெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபை 20.08.2011 ஆம் திகதி பதவியேற்ற காலத்திற்கு முன்பாக கைமாற்றப்பட்ட கடைகளை உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் பின்வரும் நிபந்தனைகளுடன் ஒப்பந்தம் செய்து வழங்குவதென தீர்மானிக்கின்றது.

1. ஒவ்வொரு கடையும் 2013 ஆம் ஆண்டில் அமுலிலுள்ள புதிய மாதாந்த வாடகைப் பணத்தின் 10 வருடங்களுக்கான வாடகைப் பணத்தை முற்பணமாகச் (Key Money) செலுத்தும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தம் செய்து வழங்குவதென நகராட்சி மன்றம் தீர்மானித்துள்ளது.
2. இந் நடவடிக்கைகள் 31.12.2013 ஆம் திகதிக்கு முன்னதாக மேற்கொள்ளப்படவேண்டும்.
3. இவ்விதம் மேற்கொள்ளாத கைமாறிய கடைகளை நகராட்சி மன்றம் மீள கையகப்படுத்திக்கொள்ளும் என்பதை அறியத் தருகின்றது.

இ. தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர், நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
(C/2730)(3.6.11)

**கார் விற்பனைக்கு**

MARUTI ESTEEM - Model
HP - xxxx
தொ.பே. 077 280 2842
(No Brokers) (31215) (6.3)

**காணவில்லை**

30.07.2013 அன்று இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட தனியார் சிவப்பு நிற சொகுசு பஸ்ஸில் எழுதுமட்டுவாளில் இருந்து பயணித்தபோது திருமதி புஸ்பராணி நவரத்தினம் ஆகிய எனது கைப் பையினுள் இருந்த பெறுமதிமிக்க நகைப் பொதி ஒன்று காணாமற் போயுள்ளது. விவரமறிந்தவர்கள் தொடர்பு கொள்ளுமாறு மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கின்றேன். தொடர்பு:

தொ.பே. 077 553 3092 (31216) (6.3)

**A/L பௌதிகவியல், இணைந்த கணிதம் ஆங்கிலம்/தமிழ்**

பிரபல கல்லூரிகளில் சிறப்பாகக் கற்பித்து சிறப்பான பெறு பேறு பெற்ற ஆங்கில மொழிப் பட்டதாரி ஆசிரியரினால் அனுபவமான பயிற்சிகளுடன் 30 வருட வினாத்தாள் உட்பட. மேற்படி பாடங்கள் தனிப்பட்ட முறையிலும், சிறு குழுவாகவும் கற்பிக்கப்படும். குறுகிய காலத்தில் முழுப் பாடத்திட்டமும் மிகச் சிறப்பாக முடித்துக் கொடுக்கப்படும்.

பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
077 242 3400, 077 887 1217 (31223)(6.3)

**தவறிவிட்டது**

ஞானசேகரன் மயூரி என்பவருடைய தே.அ.அட்டை (937681127V) 2 கிழமைக்கு முன்னர் யாழ். நகரிற்கும் பரமேஸ்வரா சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:
077 873 3500, 077 476 6946 (31224)(3.6.11)

**கார் விற்பனை**

14-XXXX தொடரிலக்க Toyota Corolla Wagan Model கார் விற்பனைக்குண்டு.
யாழ்.நகரில் பார்வையிடலாம்.
தொடர்பு: 077 960 4219
071 282 7970 (31229)(6.3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பழைய மாணவியும், நீண்ட கால ஆசிரியையும், ஓய்வுபெற்ற அதிபருமாகிய

**திருமதி ஸ்ரீமதி சீமாட்டிதேவி குமாரசாமி**

அவர்கள் லண்டனில் இறைபதம் எய்திய செய்தி கேட்டு கண்ணீர் அஞ்சலி செலுத்துவதுடன் அவரது குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம், சுன்னாகம். (31219)(3,6.11)

## 19ஆம் ஆண்டின் துயரலைகள்



தாய் மடியில்
05.01.1968

ஐங்கரன் தாள்
10.08.1994

அமரர்
**தம்பிஜயா ரவிச்சந்திரன்**
[ராசன்]

திதி:- 10.08.2013

அன்புத் தெய்வமே ஆனந்த ஜோதியே
நீ நடந்த பாதையை தேடி வாடுகிறோம் ஐயா.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நவேந்திரகிரி
இணுவில் மேற்கு. (30318)(6)
- குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
14.03.1947

உதிர்வு
10.08.2007

அமரர்
**அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்**
(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்- ஊர்காவற்றுறை, பருத்தித்துறை)

கனிந்த உள்ளமும் - அதில்
நிறைந்த பண்பும் கொண்டு
இனியமொழியாம் அன்புமொழி பேசி
எம்முடன் வாழ்ந்த - எம் தந்தையே!
பிறப்பும் இறப்பும் உலக நியதி - என
எமக்கு உணர்த்திவிட்டு
எங்குதான் சென்றீரோ?
இவ்வுலகில் நாம் உள்ளவரை
உங்கள் நினைவுகள் - என்றும்
எம்முடன் தொடரும்.

"தனிகை"
அல்வாய் வடக்கு,
அல்வாய். (30333) (6.3)

உங்கள் இனிய நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
20.07.1981

மறைவு
11.07.2013

**அமரர் இராசலிங்கம் ரதன்**

கடந்த 11.07.2013 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று [10.08.2013] சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை. (30343) (6.3)
குடும்பத்தினா

கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சையில்

## 8 ஆயிரத்து 300 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு

வடமராட்சி, ஓக.10

நாடு முழுவதும் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் வெற்றிடமாக உள்ள கிராம சேவையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்ப நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 25 ஆயிரம் பேர் மொழிகள் மற்றும் பொது அறிவு ஆகிய இரண்டு வினாத்தாள்களிலும் 40 க்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் புஸ்பகுமார தெரிவித்தார்.

சித்தியடைந்தவர்களில் 8 ஆயிரத்து 300 பேரின் பெயர்கள் நேர்முகப் பரீட்சைக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கு 78 ஆயிரத்து 321 பேர் தோற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.(ந-8)

## சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், ஓக.10

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி தொழில் வழிகாட்டல் மையத்தினால் சுயதொழில் கடன் ஊக்குவிப்பு திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் இலங்கை மத்திய வங்கியின் செயற்திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத் திட்டத்தில் தொழில் நுட்பவியல் கல்லூரி, தொழிற் பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை மற் றும் இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியவற்றில் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் இணைந்து கொள்ளலாம். ஆர்வமுடையவர்கள் பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தொழில் நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் மையத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந-14)

## அரச நடன விழாவுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக.10

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கைக் கலைக்கழகத்தின் அரச நடன நாட்டியக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2013 ஆம் ஆண்டின் தேசிய நடன விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்களை ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், பிரதேச செயலகம், கரவெட்டி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

முதற்சுற்றுப் போட்டியாக மாவட்ட மட்டப் போட்டியும், இரண்டாம் சுற்றுப்போட்டியாக மாகாண மட்டப் போட்டியும், மூன்றாம் சுற்றுப் போட்டியாக தேசிய மட்டப் போட்டியும் நடைபெறும்.(ந-35)

## மண்டலாபிஷேக பூர்த்தி நாளை

வடமராட்சி, ஓக.10

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 1008 சங்காபிஷேகமும் விசேட பூசை இடம்பெற்று பிற்பகல் விசேட மலர் வெளியீடும், இரவு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.(ந-8)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
08 . 10 . 1939

மறைவு
01 . 08 . 2003

**அமரர் சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை**
(பங்குதாரர் நியூசோபிதா நகைமாடம்)
திதி-10.08.2013

ஆயிரம் தான் உறவுகள் இருந்தாலும் - அப்பா
உங்கள் உறவுக்கு ஈடில்லை.
நாங்கள் உயிருள்ளவரை உங்கள் நினைவுகளை
நெஞ்சங்களில் சுமந்திடுவோம்.
என்றும் பிரார்த்திப்போம் ஆத்மசாந்திக்காக

திருவேரகம்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

நியூ சோபிதா நகைமாடம்
(31217) (3.6.) 184, (74/1) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
04 . 12 . 1948



ஆண்டவன் அடியில்
12 . 07 . 2013

**அமரர் பொன்னையா பரராசசேகரம்**
(ஓய்வு பெற்ற பட்டய நில அளவையாளர், J.P)

கடந்த 12.07.2013 வளர்பிறை சதுர்த்தித்திதியில் இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்திகேட்டு எமது இல்லம் வந்து துயரில் பங்குகொண்டு ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும், தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதா பங்களைத் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் சாத்தி யோருக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் பல வழிகளிலும் ஒத்தாசை வழங்கி உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை இன்று (10.08.2013) சனிக்கிழமை காலை 7 மணியளவில் முகத்துவார புனித தீர்த்தக்கரையிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (11.08.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் சிறிய மண்டபத்திலும் நடைபெற உள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

10/22B, பாமன்கடை லேன்,
கொழும்பு - 06. T.P : 011 250 0178 குடும்பத்தினர்

## 28ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
10.02.1956



விண்ணில்
10.081985

**திருமதி கமலாதேவி சுப்பிரமணியம்**
(முன்னைநாள் ஆசிரியை, றோ.க.பாடசாலை கோப்பாய் தெற்கு)

ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுமாய்
இருபத்தி எட்டு ஆண்டுகள் உருண்டதம்மா!
எங்களின் துயரம் ஆற்ற யாருமில்லை
இதயம் உருகிட அஞ்சலி செய்கின்றோம்.

பிரிவில் துயருறும்
சுப்பிரமணியம் [கணவர்],
சுதர்ஸன் [மகன்],
சங்கீதா [மருமகள்],

கிறிஸ்தவ கல்லூரி முன்பு,
கோப்பாய் மத்தி,
கோப்பாய் (30270) (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றமின்றி வைத்தியர்கள்

## அரச வைத்திய உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 10
2013 ஆம் ஆண்டுக்குரிய வைத்தியர்களின் இடமாற்றங்கள் இதுவரையிலும் அரசினால் பிரகடனப்படுத்தப்படவில்லை என்ற அரச வைத்திய உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலைகளின்பொறுப்பாளர்கள் மற்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர்களின் செயற்றிறனின்மை காரணமாக இவ்வாறு வைத்தியர்களின் இடமாற்றங்கள் காலதாமதமாகி வருகின்றன என்று சங்கத்தின் வைத்தியர் நவீன் டி சொய்சா தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டில் இடமாற்றங்களைப் பெற்றிராது 2013 ஆம் ஆண்டில் இடமாற்றங்கள் பெறுவதற்காக காத்திருக்கும் வைத்திய உத்தியோகத்தர்கள் இதனால் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று அவர் கூறினார்.

2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இடமாற்றங்கள் வழங்கப்படவேண்டியிருந்தும், வருடத்தின் அரைவாசிப் பகுதி கடந்து சென்றுள்ள நிலையிலும் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்கள் வைத்தியர்களின் இடமாற்றங்களைப் பிரகடனப்படுத்தவில்லை என்று அவர் மேலும் கூறினார். (ச-22)


## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**யோசப் பற்றிக் (ராச)**

மறைவு
10.08.2006

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய்
சீரும் சிறப்புடனும் எம்மை வாழவைத்த
அன்புத் தெய்வமே! நீர் எம்மைப் பிரிந்து
ஏழு ஆண்டுகள் ஓடிவிட்டன.
என்றும் எங்கள் நினைவில் நிலைத்து இருப்பீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
குழந்தை யேசுவை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

149/2, கதீற்றல் லேன்,
யாழ்ப்பாணம்.
(31218)(45,6.3)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அழைப்பும்



மயிலை மண்ணில்
24.01.1942

மானியம்பதி விண்ணில்
11.07.2013

அமரர்
**வஸ்தியாம்பிள்ளை சிறில்**
(மயிலிட்டி)
(ஓய்வூதியர், மாவட்ட வைத்தியசாலை -தெல்லிப்பழை)

கடந்த 11.07.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து உதவி புரிந்தோருக்கும் தொலைபேசி, இணையத் தளம் ஊடாக ஆறுதல்கூறியவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (10.08.2013) சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி அன்னாருக்காகப் பிரார்த்திக்கும்படி வேண்டுகின்றோம். இன்று மதியம் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய உணவுப் பந்தியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முண்ணாமலை ஒழுங்கை,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.
(31241)(10,16,14)



## மரண அறிவித்தல்

### இராஜரட்ணம் ஸ்ரீச்சந்திரா

*(பட்டயக் கணக்காளர், ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர்)*



துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் ஸ்ரீச்சந்திரா கடந்த (07.08.2013) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் (பொலீஸ் சார்ஜன்ட்),- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், ஜீவமலரின் அன்புக் கணவரும், மயூரதன், சுகன்ஜா, ஜனனி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், ஜெயச்சந்திரா ஆகியோரின் சகோதரனும், சாலனி, தாரணி, விதுசன், தர்சினி ஆகியோரின் பெரியதந்தையும், நிலாந்தி, துஷாந்தி, ஜெயந்தி, அனோஜன் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், சிவசோதிமலர், ஸ்ரீமலர், ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (11.08.2013) ஞாயிற்றுக்கிழமை அன்று பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியை 12.08.2013 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாகையடி கிழக்கு வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
0014164300396, 077 6736859

தகவல்:
குடும்பத்தினர்.
சிறிஸ்கந்தராஜா (வவா)(கனடா)


# 'மிஹின் எயார்' நிறுவனத்தின் பணிப்பாளருக்கு அதிக சம்பளம்

## 'கோப்' அறிக்கையில் அம்பலம்



கொழும்பு,ஓக.10
'மிஹின் எயார்' நிறுவனப் பணிப்பாளர்களுக்கு ஒரு கோடி ரூபாவுக்கு மேல் கொடுப் பனவு வழங்கப்பட்டுள்ளது.

'மிஹின் எயார்' நிறுவனம் சரிந்து விழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தும் அதன் பணிப்பாளர்களுக்கு ஒரு கோடி ரூபாவுக்கு மேல் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் அண்மையில் வெளியிடப்பட்ட 'கோப்' அறிக்கை மூலம் தெரியவுந்துள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டில் பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் 54 இலட் சம் ரூபா என்ற மட்டத்தில் இருந்துள்ளது.

எனினும் தொடர்ச்சியாக கோடிக் கணக்கில் நட்டமடைந்து வரும் 'மிஹின் எயார்' நிறுவனம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கு அமைய ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் 2 பேர் சாவு

கொழும்பு,ஓக. 10
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வியாழக்கிழமை இடம் பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் காயமடைந்துள்ளனர்.

சாலையில் பயணித்துக் கொண்டிருந்த வேளை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியுடன் மோதி கார் விபத்துக்குள்ளானது. இந்த விபத்து பின்னதுவவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோதே இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# முன்னேஸ்வரத்தில் பலிப்பூசை இரத்து

கொழும்பு,ஓக. 10
இந்த ஆண்டு முன்னேஸ்வரம் காளி கோயிலில்வருடா வருடம் நடத்தப்படும் பலிப் பூசைய நடத்துவதில்லை என ஆலய நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

புத்தளம் மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுடன் புதன்கிழமை நடைபெற்ற பேச்சின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது வன்று நிர்வா கத்தினர் அறிவித்துள்ளனர்.

காளிகோவிலுக்குச் சென்ற அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையிலான குழுவினர் அங்கு பலிப்பூசைக்கு தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மிருகங்களை பலவந்தமாக எடுத்துச் சென்ற சம்பவமும் இடம்பெற்றதுண்டு.

பல்வேறு எதிர்ப்புகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதனால் இம்முறை பலிப்பூசையை நடத்துவதில்லை என ஆலய நிர்வாகம் தீர்மானித்துள்ளது. (ச)

# பஸ்ஸில் கஞ்சா கடத்தியவர் கைது

அம்பாறை,ஓக. 10
அம்பலாங்கொடவில் இருந்து அம்பாறை நோக்கி பயணித்த பஸ்ஸில் கஞ்சா கடத்திய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக் கிழமை அதிகாலை அம்பலாங்கொடவில் இருந்து அம்பாறை நோக்கி பயணித்த பஸ்ஸில் கஞ்சா கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

அதனையடுத்து வட்டினாகல சோதனைச் சாவடியில் பொலிஸார் பஸ்ஸை வழிமறித்து சோதனை செய்த போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.


## கண்ணீர் அஞ்சலி



வலி மேற்கு பிரதேச செயலக பொது முகாமைத்துவ உதவியாளர் மா. தர்மலிங்கம் அவர்களின் அன்புத் தாய்

திருமதி **மாணிக்கம் நாகம்மா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

வலிமேற்கு,
சங்கானை.
(சி/11112) (10,16,14)

பிரதேச செயலர்,
நலன்புரிச் சங்கம்.



## கண்ணீர் அஞ்சலி



கோண்டாவில் மேற்கு சைவப் பாடசாலை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நிரு ரியூசன் சென்ரர் T. கோமநாதனின் சகோதரனுமாகிய

**தியாகரட்ணம் ரமேச்சந்திரநாதன்**

கனடா ரொறண்டோவில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் மற்றும் அன்பு உள்ளங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

நிரு ரியூசன் சென்ரர்,
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.
(31239)(10,16,14)

நிர்வாகி ஆசிரியர்கள்,
மாணவர்கள்.



## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி தர்மலிங்கம்



109, அரசடி வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி தர்மலிங்கம் 07.08.2013 புதன்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-செல்லம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், வரதராஜா (U.K), பத்மாவதி குணசிங்கராசா, தனலட்சுமி மகேந்திரராசா (கனடா), செல்வி கமலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் ரவிராஜ் மற்றும் மோகன்ராஜ் (இந்தியா), ஜெயராஜ் (கனடா), சத்தியராஜ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சசிகலா, பாலினி, யசோதா, ஆரணி ஆகியோரின் அன்பு மாமியும், சாரங்கன், திவ்வியா, காயத்திரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிட்டிலைப்பாக்கம், சென்னையில் நாளை (11.08.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்.

கந்தர் மடம். (3 14)(3 11)
தொ.பே.இல: 009 199 403 14874


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சி கிளைக்குழு கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 10

இலங்கைத் தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி கிளைக் கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு சங்கானை மாவடி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.

கிளைக் குழு உறுப்பினர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு வட்டுக்கோட்டைத் தொகுதி கிளக் குழுச் செயலாளர் சி.மகேந்திரன் கேட்டுள்ளார். (த-50)

# நடமாடும் சேவையில் 486 அ. அட்டை விண்ணப்பங்கள்

வடமராட்சி கிழக்கு- மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் 486 பேரின் தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் திருமணப் பதிவு செய்யாத சுமார் 20 குடும்பங்களுக்கு திருமணப்பதிவுகளும் இடம்பெற்றன. குடத்தனை நந்தூது மண்டபத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் 166 பேரின் தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், திருமணப் பதிவு செய்யாத 15 குடும்பங்களுக்கு திருமணப் பதிவும் இடம்பெற்றன. மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் 320 பேரின் தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் 5 குடும்பங்களுக்கு திருமணப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன. இடம்பெற்ற நடமாடும் சேவைகளில் பதிவாளர் திணைக்களம், பொலிஸ் நிலையம் ஆகிய திணைக்களங்களின் பூரண ஒத்துழைப்பும் சமாதான நீதிவான்களின் சேவையும் கிடைக்கப் பெற்றமையால் நடமாடும் சேவையில் சேவைகள் அனைத்தும் சிறப்பாகஇடம்பெற்றன. (வ-8)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# ஐ.நாவின் விமானத்திலேயே பயணிப்பார் நவிப்பிள்ளை

கொழும்பு வரும் நவநீதம்பிள்ளை, யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிடவுள்ளார்.

இந்தப் பயணங்களுக்கு, இலங்கை விமானப் படையினால் நடத்தப்படும், 'ஹெலிருவர்ஸ்' விமானங்களைப் பயன்படுத்தும்படி, நவநீதம்பிள்ளையின் பயண ஒழுங்குகளைக் கவனிக்க அண்மையில் இலங்கை வந்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் தலைமைப் பாதுகாப்பு ஆலோசகர் ஆப்ரஹாமதாயிடம், இலங்கை அரசு வலியுறுத்தியிருந்தது.

ஆயினும், இலங்கை விமானப்படை விமானங்களில் பயணம் செய்வதற்கு நவநீதம்பிள்ளையின் பாதுகாப்பு அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.இதனால் இருதரப்புக்கும் இடையில் இழுபறி நிலை ஏற்பட்டது.

இந்தநிலையில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் விரும்பியவாறு, தனியார் விமானத்தையோ, அல்லது ஐ.நா விமானத்தையோ நவநீதம்பிள்ளை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இலங்கை அரசு இப்போது ஜெனிவாவுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

இது குறித்துக்கருத்து வெளியிட்டுள்ள, ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு இலங்கை விமானப்படை விமானங்கள் மீது நம்பிக்கை இல்லையாம். இனி மேல் நாம் என்ன செய்வது? அவர் ஐ.நா விமானத்திலேயே வந்துவடக்கு உள்ளிட்ட தேவையான அனைத்து இடங்களுக்கும்சென்று,எதிர்பார்க்கும் உண்மைகளைக் கண்டறிய அவருக்கு அரசு ஒத்துழைக்கும் என்று தெரிவித்துள்ளார். (த)

# இந்தியாவுடன் நட்புறவுக்கு புலம்பெயர் தமிழர் முயற்சி

அரசியல் கட்சிகளைப் பயன்படுத்தி வருகின்றன.

முக்கியமாக பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் செயற்படும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இந்தியாவுடன் நெருக்கமான தொடர்புகளைக் கட்டியெழுப்ப முயற்சித்து வருவதாகக் கூறப்படுகிறது.

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் விஸ்வநாதன் உருத்ரகுமாரன் இவர்களில் முன்னணியில் இருக்கின்றார்.

இதற்கு நிகரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள பிரிட்டன் தமிழர் பேரவையின் செயலாளர் வீ.ரவிகுமார், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பத்தில் இந்தியத் தலையீட்டின் முக்கியத்துவத்தைப் புலம்பெயர் அமைப்புகள் உணர்ந்துள்ளதாக 'த ரைம்ஸ் ஒவ் இந்தியா'விடம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் புலம்பெயர்தமிழ் அமைப்புகள் இந்திய அரசுடன் மேற்கொண்ட முனைப்புகள் தமக்குப் பாதகமாக அமைந்தது என அவர் கூறியுள்ளார்.இந்தியா பிராந்தியத்தில் வல்லரசு நாடு என்பதால் அதனைத் தவிர்த்து விட முடியாது என்பது உண்மையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை நாடு கடந்த தமிழீழ அரசு மற்றும் பிரிட்டன் தமிழர் பேரவை என்பன 2014 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் சபையில் வலுவான யோசனையை ஒன்றை நிறைவேற்றுவதற்காக இந்திய அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன.

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்ற யோசனை இவர்களால் முன்வைக்கப்பட்ட யோசனையாகும். அதேவேளை இந்திய அரசு நடு நிலையான புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள் அனுகூலமாக அமையக் கூடும் என ஆசிய நாடுகளின் ஆய்வு நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் பேராசிரியர் வீ. சூரியநாராயணா தெரிவித்துள்ளார்.(த)

# தேர்தலில் சர்வதேசத்தின் கடமையை அமெ., கனடாவிடம் வலியுறுத்துவோம்

மையை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தமது கடமையை நடுநிலையோடு செய்யவேண்டும்'' என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் கூறினார்.

கனடாவுக்கு நேற்று அதிகாலை பயணமாகும் முன்னரே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாணசபைத் தேர்தல் தொடர்பிலும், ஏனைய முக்கிய விடயங்கள் குறித்தும் ஆராயும் வகையில் கனடா சென்றுள்ள சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் கூடச் சென்றார்.

கனடாவுக்கான பயணத்தின் தொடர்ச்சியாக தாம் அமெரிக்காவுக்கும் செல்வோம் என்றும், அங்கு உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்துவோம் என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

எதிர்வரும் 18ஆம் திகதி அவர்கள் நாடு திரும்ப உள்ளனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழில் இடம் பெறும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் தலைவர் சம்பந்தனின் கனடா பயணத்தினால் அது பிற்போடப்பட்டுள்ளது. (த-சி)

# இராணுவம் வேண்டாம்

புத் தேடி வழிபாட்டிடங்களுக்குள் தஞ்சமடைந்தவர்களும் தாக்கப்பட்டிருக்கின்றனர் என்று அறிக்கை குற்றஞ்சாட்டுகின்றது. ''மத வழிபாட்டிடங்களுக்குள் பாதுகாப்புத் தேடி ஓடும் எந்தவொரு பொதுமகனையும் ஆயுதம் தரித்தவர்கள் தாக்குவதை ஒருபோதும் ஏற்க முடியாது'' எனஅறிக்கை சாடுகிறது.

இராணுவமயப்படுத்தப்படாத அரசாட்சியைக் கொண்டு நடத்தவேண்டும் என விழித்தெழ வேண்டிய அவசியத்தை வெலிவேரிய சம்பவம் அரசுக்கு உணர்த்தியுள்ளதாக சமாதானப் பேரவை கூறுகின்றது. பாதுகாப்பு அமைச்சின் கீழிருந்து பொலிஸ் திணைக்களத்தை வெளியே எடுக்கவேண்டும் என்ற, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டியது எனவும் அது கூறுகின்றது.

போரின் பின்னரான காலத்தில் இராணுவமும் மக்களும் இதற்கு முன்னரும் முரண்பட்டுக்கொண்ட சமயங்களை சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

வலிகாமம் வடக்கு மக்கள் தமது நிலங்கள் எடுக்கப்படுவதற்கு எதிராக நடத்திய ஆர்ப்பாட்டம் இடைமறிக்கப்பட்டமை, எரிபொருள் விலை ஏற்றத்தைக் கண்டித்து சிலாபத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை, வெலிக்கடை சிறைக் கலவரத்தில் 40 கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டமை, போரில் இறந்தவர்களை நினைவுகூர்ந்த யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை, 'கிறீஸ் பூதம்' தொடர்பில் கண்டனம் வெளியிட்ட நெடுங்கேணி மக்கள் தாக்கப்பட்டமை என்பன போர் முடிந்த பின்னர் இராணுவத்தால் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் என்று பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, வெலிவேரியவில் உண்மையான துப்பாக்கிக் குண்டுகளைச் சுடச் சொல்லி உத்தரவிட்டது யார் என்பதையும் அதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிவதற்காகவும் வெலிவேரிய சம்பவம் குறித்து அரசு சுயாதீன விசாரணை ஒன்றை நடத்தவேண்டும்.

சம்பவத்தில் இறந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் இழப்பீடு வழங்கப்படவேண்டும், இராணுவத்துக்கும், பொலிஸாருக்கும் உத்தரவிடும் தலைவர்கள் வேறுபடுத்தப்படவேண்டும் என்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை செயற்படுத்தப்பட வேண்டும், பெரும் வன்முறை அல்லது ஒழுங்கீனம் ஏற்படுகையில் பொலிஸாரால் அதனைக் கட்டுப்படுத்த முடியாது என்கிற நிலை ஏற்பட்டால் ஒழிய அமைதியை நிலைநாட்ட இராணுவத்தைப் பயன்படுத்தும் போக்கை அரசு கட்டுப்படுத்தவேண்டும் என்று சமாதானப் பேரவையின் அறிக்கை வலியுறுத்துகின்றது. (உ)


## விற்பனைக்கு

4 ஸ்ரீ FIAT 1100 கார், B.S.A, 350CC மோட்டார் சைக்கிள், TVS, VICTOR 125 மோட்டார் சைக்கிள், 5.K.V. LISTER ஜெனறேற்றர் இங்லண்ட், 6 அடி GAP, BED கடைச்சல் இயந்திரம்.

(31228) (6.3) தொடர்பு: 70, பிரதான வீதி, யாழ். T. P: 077 715 5866

## வீடு வாடகைக்கு

மூன்று விசாலமான படுக்கை அறைகளுடன் இணைக்கப்பட்ட மலசல கூட வசதிகளைக் கொண்டதும் நவீன சமையலறை வசதி கொண்டதும், வாகனத் தரிப்பிடம் கொண்டதுமான 1400 சதுர அடி கொண்ட வீடொன்று வாடகைக்கு சீனியர் லேனில் கோயிலுக்கு அருகில் உள்ளது.

பெற விரும்புபவர்கள்

077 711 1469

என்ற தொலைபேசியினூடாக தொடர்பு கொள்ளவும்.

(31228) (6.3)

## தேவை

கணினி தரவு இயக்குநர்
(Data Operator)
பெண் வயது - 35 இற்குள்
* A/L சித்தி
* கணினியில்
நல்ல வேலை அனுபவம்
யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பகுதிகளில் வசிப்பவர்கள் மாத்திரம்.
C/V உடன் நேரில் வரவும்.

ஞாயிறு 11.08.2013
பிற்பகல் 3.00 மணி

திசைகாட்டி (பிறைவேட்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.



(31236) (6.3)

## வீடு விற்பனைக்கு

பண்டத்தரிப்பு கீரிமலை வீதியில் 6 பரப்பில் அமைந்த 2 தனி வீடுகள் விற்பனைக்குண்டு. இரத நிலம் கீரிமலை வீதிக்கும் பண்டத்தரிப்புக்கும் வில்லன் சந்திக்கும் நடுவில் அமைந்துள்ளது.

(C10858)(6,3) தொடர்பு : 077 378 3305 / 077 798 1995

## மலிவு விற்பனை

| | அலுவலகப் பொருள்கள் | கடை விலை | எமது விலை |
|---|---|---|---|
| 1 | Excecutive மேசை | 17390/= | 12290/= |
| 2 | Excecutive கதிரை | 7500/= | 5250/= |
| 3 | சுழல்கதிரை | 3850/= | 2310/= |
| | விரிவுரை மண்டப பொருள்கள் | கடை விலை | எமது விலை |
| 1 | Box செற் | 16500/= | 13200/= |
| 2 | விரிவுரையாளர் கதிரை | 6000/= | 4200/= |
| 3 | விரிவுரையாளர் மரக் கதிரை | 4000/= | 2800/= |
| 4 | CD பிளேயர் | 3200/= | 2540/= |
| 5 | Projector | 73500/= | 51450/= |

தொடர்புகளுக்கு: 021 7904941

(31237) (10,16,14)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.அழையுங்கள்.

0779086737 GUNAA BEST PC
52,Hospital Road,Jaffna.

## ST.ANTONY'S
### கணினிகள் மலிவு விற்பனை



IBM Full Set - 12900/=
HP D/C Full Set - 24750/=
TAP PC 7" - 11900/=



ஒரு வருட உத்தரவாதம்
Free - 4GB Pen/ WeBcam/ Headphone
Wifi connection மற்றும் கணினிசார்பான உதிரிப்பாகங்கள், திருத்தங்கள் உண்டு.

187, K.K.S வீதி, யாழ். நகர்.
0212224865 / 0750698608

## வீடு விற்பனைக்கு

கரவெட்டி சம்பந்தர் கடைக்கு அருகாமையில் பெரிய வீடு விற்பனைக்குண்டு.

(C/10857)(6,3) தொடர்பு : 077 612 2386

## காணி விற்பனைக்கு

ஏழாலை கேணியடி புளியங்கிணற்றடியில் மூன்று (3) பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு.

(31230)(6,3) தொடர்பு : 077 977 3003 / 077 520 9692


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 10
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகள்:

பி.ப. 4 மணி
வீனஸ் வி.க. எதிர் அல்வாய் பாரதி வி.க.

பி.ப. 4.45 மணி
இமையாணனன் இந்து இளைஞர் வி.க. எதிர் மனோகரா வி.க. (ற-23)

## கரம் போட்டிகள் இன்று

யாழ்ப்பபணம், ஓக. 10
யாழ். மாவட்ட கரம் சங்கம் நடந்தும் ஆண்களுக்கான திறந்த கரம் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

அதேவேளை ஆண்களுக்கான திறந்த இரட்டையர் பிரிவு ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. (ற-23)

## கிளார்க் முன்னேற்றம்


இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் சதம் விளாசிய அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தரவரிசையில் ஏற்றம் கண்டுள்ளார்.

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா இடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிந்தது. இதைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) டெஸ்ட் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

ஆஷஸ் 3ஆவது டெஸ்டில் 187 ஓட்டங்களை குவித்து ஆட்டநாயகன் விருதை பெற்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் துடுப்பாட்ட தரவரிசையில் 3 இடங்கள் முன்னேறி 2ஆவது இடத்தை பிடித்துள்ளார்.(ற)

பாலகிருஸ்ணன் வெற்றிக் கிண்ணம்

# யாழ்.சென்றல் வி.க. இறுதியாட்டத்தில்



யாழ்ப்பாணம், ஓக.10
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பாலகிருஸ்ணன் வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்துக்கு யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது.

அகிலன் 55 ஓட்டங்களையும், விதுஷன் 19 ஓட்டங்களையும், காணமிர்தன் 16 ஓட்டங்களையும், அன்புஜன் 32 ஓட்டங்களையும் ஜொனியன்ஸ் சார்பாக அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.சென்றல் அணி சார்பாக றோகான், யசிந்தன், றஜீவ்குமார் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், சுபதிஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

152 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தினர் 18.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

றஜீவ்குமார் 58 ஓட்டங்களையும், அலிஸ்ரன் 22 ஓட்டங்களையும், றோகான் 37 ஓட்டங்களையும் யாழ்.சென்றல் அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பாக அகிலன் 3 இலக்குகளையும், லவேந்திரா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகமும், யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ற-23)

# நவஜீவன்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், ஓக.10
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் மனோகரா விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளை யாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 9
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டங்களில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகம், றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றிபெற்றுள்ளன.'

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வல்லை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி மோதியது.

அதில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து யங்லையன்ஸ் 'பி' அணி மோதியது.

அதில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# வடமராட்சி நண்பர்களின் போரில் வென்றது மாலிசந்தி மைக்கல்



பருத்தித்துறை, ஓக.10
வடமராட்சி நண்பர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்துக்கும் குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையேயான கிரிக்கெட் ஆட்டத்தில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மைக்கல் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மைக்கல் அணியினர் ஆரம்பம் முதலே அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அணியின் ஓட்டவேகம் மளமளவென உயர்ந்து சென்றது.

சுதாரித்துக் கொண்ட உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினர் இறுதிப் பந்துப் பரிமாற்றங்களில் ஓட்டவேகத்தைக் கட்டுப்படுத்த, 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் மைக்கல் விளையாட்டுக் கழகம் 6 இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

மைக்கல் அணி சார்பாக விபிலியன் 26 ஓட்டங்களையும், அச்சுதன் 16 ஓட்டங்களையும், ரகு 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் சார்பாக சுகந்தன் 3 இலக்குகளையும், சயந்தன் மற்றும் திருபரன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கைத் துரத்த ஆரம்பித்த உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினர் ஆரம்பத்தினர் சடுதியாக இலக்குகளை இழந்தனர்.

ஒருபுறம் திலக்ஷன் தனித்து நின்று மைக்கல் அணியின் பந்துவீச்சை எல்லைக் கோட்டுக்கு வெளியே அனுப்பிக் கொண்டிருந்தார். எனினும் மறுபுறத்தில் சீரான இடைவெளியில் இலக்குகள் வீழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தன.

இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றி பெற 12 ஓட்டங்கள் தேவை என்ற நிலை காணப்பட்டபோதும், மைக்கல் அணியினரின் வீயூகமான பந்துவீச்சால் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் வெற்றிக்கான துரத்தல் 4 ஓட்டங்களால் தோல்வியில் முடிந்தது.

10 பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது உதயசூரியன் விளையாட்டுக்கழகம்.

திலக்ஷன் 44 ஓட்டங்களையும், அயந்தன் 13 ஓட்டங்களையும் பிரசாந் 6 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்ததுடன் உதயசூரியன் அணியின் ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை.

பந்துவீச்சில் மைக்கல் அணி சார்பாக கபிலன் 3 இலக்குகளையும், தினேஜன் 2 இலக்குகளையும், வினோர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக கபிலனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக திலக்ஷனும் தெரிவாகினர். (ற-34)

## சென்.மேரிஸ் சம்பியன்



யாழ்ப்பாணம், ஓக.10
வலைப்பாடு புனித அன்னம்மாள் ஆலய திருவிழாவை முன்னிட்டு சிறப்பு நிகழ்வாக வலைப்பாடு ஜெகபீற்றர் விளையாட்டுக் கழகம் நடத்தய அருட்தந்தை கொன்சலஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகஅணிவெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

கடந்தவாரம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியும், கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.

அதில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது.(ற-23)

# போராடித் தோற்றது இந்திய 'ஏ' அணி

தென்னாபிரிக்காவில் நடந்து வரும் 'ஏ' அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு கிரிக்கெட்டில் இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் போராடி தோல்வி அடைந்தது.

இந்திய 'ஏ' அணி, ஆஸ்திரேலியா 'ஏ' அணி, தென்னாபிரிக்க 'ஏ' அணி ஆகிய மூன்று அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகின்றது.

இந்த ஆண்டின் இறுதியில் இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாட உள்ளது. அந்த முக்கியமான தொடரை கருத்தில் கொண்டு 'ஏ' அணியில் ரெய்னா, ரோகித் ஷர்மா, தினேஷ் கார்த்திக், ஷிகர் தவான், புஜாரா போன்ற முன்னணி வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா இரண்டு முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் இரு இடத்தை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். தனது ஆரம்ப ஆட்டத்தில் தென்னாபிரிக்க 'ஏ' அணியை வென்ற ஆஸ்திரேலிய 'ஏ' அணி நேற்று முன்தினம் பிரிட்டோரியாவில் இந்தியாவை சந்தித்தது.

அதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா, ஆரம்பத்தில் இலக்குகளை வேகமாக இழந்தது. ஒரு கட்டத்தில் 152 ஓட்டங்களுக்குள் (36.2 பந்துப்பரிமாற்றங்கள்) 8 இலக்குகளை இழந்து தவித்தது.

ஆனால் சகலதுறை ஆட்டக்காரரான கிளைன் மேக்ஸ்வெல் திடீரென விசுவரூபம் எடுத்தார். இறுதி நேரத்தில் இந்திய பந்து வீச்சை நொருக்கித் தள்ளினார். கடைசி இரண்டு பந்துப் பரிமாற்றங்களில் மட்டும் 4 சிக்ஸர் உட்பட [illegible] ஓட்டங்களை சேர்த்தார். [illegible] அவர்களின் ஓட்ட எண்ணிக்கை எதிர்பார்த்ததை விட எகிறிச் சென்றது.


நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் அந்த அணி 8 இலக்குகள் இழப்புக்கு 298 ஓட்டங்களை குவித்தது. கிளைன் மேக்ஸ்வெல் 145 ஓட்டங்கள் (79 பந்து, 18 பவுண்டரி, 6 சிக்ஸர்) விளாசி களத்தில் நின்றார். அவரும், ஹாஸ்லேவுட்டும் 9ஆவது இலக்குக்கு 146 ஓட்டங்களை (13.4 பந்துப்பரிமாற்றங்கள்) சேகரித்தனர். இதில் ஹாஸ்லேவுட்டின் பங்கு [illegible] ஓட்டங்கள் தான். [illegible] ஷபாஸ் நதீம், ஷிகர் தவான், ஷமி அகமது தலா 2 இலக்குகளையும், உனட்கட், ரெய்னா தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய இந்திய அணியில் தவான் 15 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் புஜாரா 29 ஓட்டங்களுடனும், ரோகித் ஷர்மா 66 ஓட்டங்கள், சுரேஷ் ரெய்னா 83 ஓட்டங்களும் (79 பந்து, 7 பவுண்டரி, ஒரு சிக்ஸர்) எடுத்து வெளியேறினர். கடைசி 4 ஓவர்களில் இந்தியாவின் வெற்றிக்கு 23 ஓட்டங்களே தேவைப்பட்டன. கைவசம் 6 இலக்குகள் இருந்ததால், இந்தியாவுக்கே வெற்றி வாய்ப்பு தென் பட்டது.

ஆனால் கடைசி 4 பந்துப் பரிமாற்றங்கள் வீசிய ஹாஸ்லேவுட், கவுல்டர் நிலே இருவரும் இந்திய துடுப்பாட்டக்காரர்களை ஓட்டங்களை எடுக்க விடாமல் மடக்கினர். அந்த பந்துப்பரிமாற்றத்தில் 2 இலக்குகளையும் சாய்த்தனர். மயிரிழையில் வெற்றியை கோட்டைவிட்ட இந்திய அணியால் 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 291 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. இதன் மூலம் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலிய 'ஏ' அணி வெற்றி பெற்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டத்தை பிரபல்யப்படுத்தும் டோனி



மிகப் பிரபல்யம் வாய்ந்த இங்கிலீஷ் உதைபந்து லீக் தொடரின் இந்திய தூதராக இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் டோனி நியமிக்கப்பட்டுள்ளார்.
இவரை இங்கிலீஷ் பிறீமியர் லீக் உதைபந்துத் தொடரின் இந்தியத் தூதராக நியமித்தது ஸ்டார்ஸ்போர்ட்ஸ் தொலைக்காட்சி நிறுவனம்.
இதையடுத்து இந்தத் தொடரை பிரபலப்படுத்தும் விளம்பரங்களில் அடுத்த வாரம் முதல் டோனி தோன்றவுள்ளார்.
அதாவது, உதைபந்துப் போட்டியுடன் இணைந்திருங்கள் என்று அனைத்து விளையாட்டு ரசிகர்களையும் டோனி அழைக்கவுள்ளார்.
டோனி இயற்கையாகவே கால்பந்து போட்டிகளில் ஆர்வம் கொண்டவர். மான்செஸ்டர் யுனைடெட் கிளப் அணியின் தீவிர ரசிகர்.
இது குறித்து டோனி கூறுகையில்,
"கிரிக்கெட் ஆட்டங்கள் இல்லாத நாள்களில், உதைபந்தாட்டங்களுடன் இணைந்து விடுவேன். எனது பள்ளி நாள்களில் உதைபந்து விளையாடும் போது, நான் தான் கோல் காப்பாளராக இருப்பேன்.
இன்றைக்கும் முக்கியமான கிரிக்கெட் ஆட்டங்களுக்கு முன்னர், உதைபந்து விளையாடித்தான் என்னை தயார் செய்து கொள்வேன். கிரிக்கெட் மீது தீவிர பற்று வைத்திருக்கும் அதேநேரம் இந்திய விளையாட்டு ரசிகர்கள் அனைத்து ஆட்டங்களையும் ரசிக்க வேண்டும். மற்ற விளையாட்டுகளுக்கும் மதிப்பு தர வேண்டும்.'' என்று தெரிவித்துள்ளார். (ற)

# பார்படோஸ் இலகு வெற்றி



கரீபியன் பிறீமியர் லீக் தொடரின் 9ஆவது ஆட்டத்தில் பார்படோஸ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது. சென் லூசியாவிற்கெதிரான இந்த ஆட்டத்தில் பார்படோஸ் அணி 83 ஓட்டங்களால் அதிரடி வெற்றியைப் பெற்றுக் கொண்டது.
சென்.லூசியாவில் இடம் பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பார்படோஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பார்படோஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 175 ஓட்டங்களைக் குவித்தது.
முதலாவது இலக்கை 20 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, 2ஆவது இலக்குக்காக 63 ஓட்டங்களைப் பகிர்ந்தது. ஒரு கட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதும், இறுதி 23 பந்துகளில் 63 ஓட்டங்களைக் குவித்து சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.
துடுப்பாட்டத்தில் பார்படோஸ் அணி சார்பாக டுவைன் ஸ்மித் 38 பந்துகளில் 48 ஓட்டங்களையும், கெரான் பொலார்ட் 21 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், சொய்ப் மலிக் 27 பந்துகளில் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சென்.லூசியா அணி சார்பாக அல்பி மோர்க்கல், பீனோ பெஸ்ற் இருவரும் தலா 2 இலக்குகளையும், கரே மதுரின், கெயோ பீற்றர்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
176 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்.லூசியா அணி 17.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 92 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது.
துடுப்பாட்டத்தில் சென். லூசியா அணி சார்பாக மிஸ்பா உல் ஹக், ஹேர்ச்சில் கிப்ஸ் இருவரும் முறையே 23, 21 ஓட்டங்களைப் பெற்றதோடு, வேறு எந்த வீரரும் 20 ஓட்டங்களுக்கு அதிகமாகப் பெறவில்லை.

> ஒரு கட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதும், இறுதி 23 பந்துகளில் 63 ஓட்டங்களைக் குவித்து சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

பந்துவீச்சில் பார்படோஸ் அணி சார்பாக ஆஷ்லி நேர்ஸ், ரயாட் எமரிட் இருவரும் தலா 3 இலக்குகளையும், ஷெனொன் கப்றியல், கெரான் பொலார்ட் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக கெரான் பொலார்ட் தெரிவானார். (ற)

# கவாஸ்கருக்கு ஏன் விருதில்லை?



இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கருக்கு, வாழ்நாள் சாதனையாளர் விருது கிடைக்காதது ஏன் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.
விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குபவர்களுக்கு பல பிரிவுகளில் இந்திய மத்திய அரசு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கப்படுகிறது.
இந்த ஆண்டு வாழ்நாள் சாதனையாளருக்கான தயான் சந்த் விருதுக்கு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர், விஜய் அமிர்தராஜ் (ரென்னிஸ்) ஆகியோரது பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன.
இவ்விருதுக்கான இறுதிப் பட்டியலில் கிரிராஜ் சிங் (பாரா விளையாட்டு), மேரி டிசவுசா (தடகளம்), அனில் மேன் (மல்யுத்தம்), சையது அலி (ஹொக்கி) ஆகியோரது பெயர் மட்டும் இடம் பெற்றுள்ளன.
கவாஸ்கர், விஜய் அமிர்தராஜ் ஆகியோரது பெயர்கள் இல்லை. அதற்கான காரணம் குறித்து புதிய தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.
வாழ்நாள் சாதனையாளருக்காக அர்ஜுனா விருது தான் முதலில் வழங்கப்பட்டு வந்தது. 2002 ஆம் ஆண்டு அது மாற்றப்பட்டு வாழ்நாள் சாதனையாளர் விருதை மறைந்த ஹொக்கி வீரர் தயான்சந்த் பெயரில் வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 2002க்கு முன் அர்ஜுனா விருது வென்றவர்கள் இந்த விருதுக்கு தெரிவு செய்யப்படக் கூடாது.
1975ஆம் ஆண்டு கவாஸ்கரும், 1974ஆம் ஆண்டு விஜய் அமிர்தராஜும் அர்ஜுனா விருது பெற்று விட்டனர். இந்நிலையில் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கான தகுதி என்ன எனத் தெரியாமல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, அகில இந்திய டென்னிஸ் சங்கம் என்பன அவர்கள் பெயர்களைப் பரிந்துரை செய்துள்ளது. அதையடுத்தே அவர்கள் விருதுக்கான பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். (ற)

# டோனியை நினைவூட்டும் பொலார்ட்

கரீபியன் பிரிமியர் லீக் '20/20' தொடர் தற்போது மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வருகிறது.
அதில் பங்கேற்றுள்ள 6 அணிகளில் ஒன்றான பார்படோஸ் டிரிடென்ட்ஸ் அணியின் தலைவராக மேற்கிந்திய தீவுகள் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான கீரன் பொலார்ட் செயற்படுகிறார்.
அவரை அந்த அணியின் தலைமை பயிற்சியாளரும், மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட் ஜாம்பவானுமான தேஸ்மான்ட் ஹெய்ன்ஸ் டோனியுடன் ஒப்பிட்டு புகழ்ந்து தள்ளியுள்ளார்.
"மேற்கிந்திய தீவுகள் அணிக்கு சிறிது காலம் துடுப்பாட்ட பயிற்சி ஆலோசகராக இருந்த போதே பொலார்ட்டை நான் பார்த்திருக்கிறேன். கிரிக்கெட் விளையாட்டு மற்றும் அதன் யுக்திகளை எளிதில் புரிந்து கொள்பவர்களில் பொலார்ட்டும் ஒருவர் என்று நான் எப்போதும் நினைப்பது உண்டு.
இப்போது பார்படோஸ் டிரிடென்ட்ஸ் அணியின் பயிற்சியாளராக இருப்பதால், அவருடன் இணைந்து நெருங்கி பணியாற்றி வருகிறேன். அவர் மீது அதிக மரியாதை வைத்திருக்கிறேன். நிறைய விடயங்களில் அவர் இந்திய அணியின் தலைவர் டோனியை ஞாபகப்படுத்துகிறார்.

> களத்திலும் சரி வெளியிலும் சரி அணியின் மற்ற வீரர்களுக்கு அவர் முன்னுதாரணமாக விளங்குகிறார்

டோனியுடன் பொலார்ட்டை ஒப்பிடுவது பெரிய விடயம் என்பதை நான் அறிவேன். ஆனாலும் தெரிந்து தான் இதை சொல்கிறேன். ஓர் அணித் தலைவராக களத்திலும் சரி வெளியிலும் சரி அணியின் மற்ற வீரர்களுக்கு அவர் முன்னுதாரணமாக விளங்குகிறார். ஆட்டத்தை அவர் கணிக்கும் விதமும் கடினமான சூழலில் பொறுமையுடன் நடந்து கொள்ளும் தன்மையும் எனக்கு அவர் டோனியைத் தான் நினைவுக்கு கொண்டு வருகிறார்.
கரீபியன் பிரிமியர் லீக்கில் நாங்கள் 3 ஆட்டங்களில் வெற்றி பெற்றிருக்கிறோம். அவர் பந்துவீச்சாளர்களை கையாண்ட விதம் அற்புதமானது. பார்படோஸ் அணிக்கு பொலார்ட் தலைவராக இருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது'' என்று தெரிவித்துள்ளார் ஹெய்ன்ஸ். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச மருத்துவ ஆலோசனை

Northern Central Hospitals

நாளை (11.08.2013) ஞாயிற்றுக்கிழமை நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையில் வைத்தியர்களால் சகல நோய்களுக்குமான இலவச மருத்துவ ஆலோசனை வழங்கும் மருத்துவ முகாம் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளதால் ஆலோசனை பெறவிரும்பும் அனைவரும் சமுகமளித்து இந்த இலவச வரப்பிரசாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலதிக சிகிச்சை பெற சிபாரிசு செய்யப்படுபவர்களுக்கு வைத்திய நிபுணரின் சேவையை இவ்வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ள பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. கீழ்க்காணும் தொலைபேசி எண்ணுடன் மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

பணிப்பாளர்
**நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை**
**342, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
தொ.பே. 021 221 9988, 021 221 9977, 021 222 2263
(C/10789) (6.3)

## 'ஹொட் ஸ்போட்' தொழில்நுட்பம் உறுதியாகின்றது



துடுப்பாட்ட வீரர்களின் துடுப்பில் சிலிக்கன் தேப்கள் காணப்படுவது குறித்து 'ஹொட் ஸ்போட்' நிறுவனத்தின் தலைவர் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி 'ஹொட் ஸ்போட்' தொடர்பாக முன்னர் வெளியாகியிருந்த செய்திகள் ஆதாரமுள்ளவை என்று கூறப்படுகின்றது.

துடுப்பாட்ட வீரர்களின் துடுப்பில் பந்து பட்டதா, இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் தொழிநுட்பமான 'ஹொட் ஸ்போட்' தொழிநுட்பம், தற்போது இடம்பெற்றுவரும் ஆஷஷ் தொடரிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இந்தத் தொடரில் துடுப்புக்களில் பந்து பட்ட தருணங்களிலும் 'ஹொட் ஸ்போட் கமராக்கள்' அவற்றைக் கண்டுபிடிக்கவில்லை.

இந்நிலையில் ஆஸ்திரேலிய ஊடகமான 'சனல் 9' இது தொடர்பாகச் சந்தேகத்தை வெளிப்படுத்தியது. அத்துடன் வீரர்கள் தங்கள் துடுப்புக்களில் சிலிக்கன் நாடாக்களைப் பயன்படுத்துவதாகவும் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தற்போது வெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையில், 'ஹொட் ஸ்போட்' தொழிநுட்பத்தினைக் கண்டுபிடித்த வரன் பிரென்னன் இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபையிடம் முறையிட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது. வீரர்களின் துடுப்பில் காணப்படும் சிலிக்கன் நாடாக்கள் 'ஹொட் ஸ்பொட்' தொழிநுட்பத்தை ஏமாற்றக் கூடியன் என்றும் அவர் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் தெரிவித்துள்ளார்.

இத்தொடரில் 'ஹொட் ஸ்போட்' தொழிநுட்பம் சரியாகச் செயற்பட்டிருக்காதபோதிலும், எஞ்சியுள்ள 2 ஆட்டங்களிலும் 'ஹொட் ஸ்போட்' பயன்படுத்தப்படவுள்ளது. (ற)

## உலகின் எந்த மூலைக்கும் படிக்க, உழைக்க எம்மிடம் மட்டுமே....

டென்மார்க்கில் படிக்க
இரண்டு இலட்சம் வரை உழைக்க

**சட்ட ஆலோசனைக்கு**
ஏழு நாள்களும் திறந்திருக்கும்

(30097)(10.6)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

| நியூசிலாந்தில் படிக்க | U.K இல் படிக்க |
|---|---|
| ★ IELTS தேவையில்லை ✓ | ★ IELTS அவசியம். ✗ |
| ★ பகுதிநேர வேலைவாய்ப்பு உண்டு ✓ | ★ பகுதிநேர வேலைவாய்ப்பு இல்லை. ✗ |
| ★ 2 வருடத்தில் PR பெற அருகதை உண்டு. ✓ | ★ STUDENT VISA மூலம் சென்றால் PR பெற முடியாது. ✗ |
| ★ நிரந்தர குடியுரிமை பெற்றால் ஆஸ்திரேலியா குடிபெயரலாம். ✓ | |

பொதுவான அம்சங்கள்
★ மேற்படி இரண்டு நாட்டு விசாக்களும் நிராகரிக்கப்படக்கூடியவை.
★ வங்கி வைப்பு அவசியம்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

## உடனடி வேலைவாய்ப்பு

கேற்வே நிறுவனத்தின் கிளிநொச்சிக் கிளையில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. கணினி போதனாசிரியர் (முழுநேரம்)
02. கணினி போதனாசிரியர் (பகுதிநேரம்)
03. ஆங்கில போதனாசிரியர் (முழுநேரம்)
04. ஆங்கில போதனாசிரியர் (பகுதி நேரம்)

★ கிளிநொச்சியில் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்
★ கல்வி மற்றும் தகைமைச் சான்றிதழ்களுடன் இன்று (10.08.2013) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப. 2.00 மணிக்குள் நேரில் வரவும்.



முகவரி
கேற்வே,
A9 வீதி,
கரடிப்போக்குச்சந்தி,
கிளிநொச்சி.

தொடர்புகளுக்கு:-
(T)- 021 5674433
(M)- 071 8697697
(e) gatewaykilinochchi@gmail.com

## உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa முறை UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 12.08.2013 | 17.08.2013 | 19.08.2013 | 24.08.2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

## BIT
கொழும்பு பல்கலைக்கழக வெளிவாரி தகவல் தொழில்நுட்பப் பட்டப்படிப்பு
*(Bachelor of Information Technology)*

**வேலைவாய்ப்புகளுக்கு அதிகளவு கேள்வியுள்ள IT துறையில் பட்டப்படிப்பை பெற்று நவீன உலகத்துடன் உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்**

அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகின்றது

புதிய பிரிவுகள்
11.08.2013 காலை 9 மணிக்கு

**ESOFT METRO CAMPUS - JAFFNA**
Shaping Lives, Creating Futures.
No 137, K.K.S Road, Jaffna | TEL : 021 750 1120 | CALL : 077 309 9 308

## BIT @ MIS கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழினுட்பமாணி பட்டம்

BIT கற்கைநெறியை 2002 ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகக் கற்பிக்கும் அனுபவம்....

Semester 1 - 6 subjects
Semester 3 - 4 subjects
Semester 5 - 4 subjects

Lecturer
R.Kumaran - B.Sc.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**Semester 1 / 3 / 5**
தனிப் பாடங்களையும் கற்கலாம்.
**12 years in BIT**

BIT இணைப்பாளர் - MIS BIT Academy
புதிய கல்வியாண்டிற்கான பதிவுகள்
74, சப்பாபதி வீதி, யாழ்ப்பாணம்- பிரதம தபாலக அருகாமை. TP : 0776577359

## வேலை ஆள்கள் தேவை

கணினி சம்பந்தமான அறிவு, போட்டோ பிரதி எடுத்தல், தொலைத் தொடர்பை கையாள்தல் தொடர்பான வேலைக்கு ஆள்கள் தேவை.
(பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்) பெண்கள் மட்டும்
(11.08.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நேரில் வரவும்.

*கஜராம் தொலைத் தொடர்பு நிலையம்,*
*பிரதான வீதி, சித்தன்கேணி.*
T.P: 021 225 0727, 077 762 6530
(11222)(6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.